# வருடாந்த அறிக்கை

# 2012

இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை

# தலைவரின் செய்தி



இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் தலைவர் என்ற ரீதியில் 2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை தொடர்பில் சுருக்கமாக இச்செய்தியை விடுப்பதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நீர்வலுவில் தங்கியிருந்த நாட்டின் மின்னுற்பத்திக் கைத்தொழில் கடந்த காலப் பகுதியில் அதிலிருந்து அனல் மின்சக்தியை நோக்கி கணிசமானளவு நகர்ந்துள்ளது. இலங்கையைப் பொறுத்த வரையில் அதன் சொந்த நிலக்கரி அல்லது எண்ணெய் சார்ந்த வளங்களில் தங்கியிருப்பதைக் குறைத்து, நாட்டை மசகெண்ணெய் இறக்குமதிகளின் பால் பாரியளவு தங்கியிருக்கச் செய்யும் குறித்த விடயத்தைக் கொண்டு இதனை அவதானிக்க வேண்டும். உலகலாவிய ரீதியில் எண்ணெய்க்கான அதிகரித்து வரும் தேவை மற்றும் சம்பந்தப்பட்ட எண்ணெய்களின் விலைகள் அதிகரிப்பு போன்றவற்றின் காரணமாக இது நாட்டின் பொருளாதாரத்தை மிகவும் அனுகூல நிலைக்குக் கொண்டுசெல்வதாக இல்லை.

ஆகையால், நாட்டில் சக்தித் துறையிலுள்ள அபிவிருத்தி தொடர்பான நிலைபெறுதகு அணுகுமுறைக்கு உரிய கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இ.நி.வ.அ, நாட்டில் மீளப் புதுப்பிக்கத்தகு சக்தித் துறை மற்றும் சக்திப் பாதுகாப்பு ஆகியவற்றின் மேம்பாட்டிற்கான கொள்கைகளை உருவாக்கி அவற்றை நடைமுறைப்படுத்துகின்ற ஒரு முக்கிய அரச நிறுவனமாக விளங்குகின்றது. மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி, மற்றும் சக்தி வினைத்திறன், மற்றும் உற்பத்தித் திறன் வாய்ந்த சக்தி விநியோகம் ஆகியவற்றை இலகுபடுத்தும் வழிமுறைகளின் மூலம் சக்திப் பாதுகாப்பை உணர்த்துவதனூடாக நாட்டிற்கான சமூகப் பொருளாதார நன்மைகளை அடைவதில் அரசாங்கத்திற்கு உதவுவது இந்த அதிகார சபையின் பிரதான குறிக்கோளாக விளங்குகின்றது. தேசியக் கொள்கை வகுத்தமைப்பிலுள்ள இந்த எண்ணக்கருவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, 2020 ஆம் ஆண்டளவில், புதிய மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி (மீ.பு.ச) வளங்களிலில் இருந்து க்றிட் மின்சார முறைமைக்குக் கிடைக்கும் மின்சாரப் பங்களிப்பை 20% வீதம் வரை அதிகரிப்பதற்கும் மற்றும் உண்மையான நுகர்வுக்கான சக்திச் சேமிப்பு ஆற்றலை 8.7% வீதத்தால் அதிகரித்துப் பேணுவதற்கும் 'மஹிந்த சிந்தனை' எனும் தூரநோக்குத் திட்டத்தினூடாக இலக்குக் கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் குறிக்கோள்களை அடைவதால் நாட்டிலுள்ள அதிகமான சுதேசிய வளங்களின் பாவனை மேம்படும், அதே வேளை சக்தித் துறை அதிக வினைத்திறன் வாய்ந்ததாகவும் சுற்றாடல்

நேயமானதாகவும் மாறும். மீ.பு.ச வளங்கள் அதாவது சிறிய நீர்வலு, காற்று மூல சக்தி, சூரிய சக்தி மற்றும் உயிரணுத்திணிவுச் சக்தி என்பன எண்ணக்கருவும் மற்றும் செயல்முறையும் சார்ந்த கண்ணோட்டத்தில் அதிக கவனத்தைப் பெற்றுள்ளன. 2012 ஆம் ஆண்டின் மொத்த மின்சக்தி உற்பத்தியில் 6.3% வீதமான மின்சக்தி மீ.பு.ச வளங்களில் இருந்து உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. அதிக பலன்கள் வாய்ந்த மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்திக் கருத்திட்டங்களைத் தாபித்து இலகுபடுத்தும் முகமாக இ.நி.வ.அ.ச வரைபடத் திட்டத்தின் ஊடாக சாத்தியமான பிரதேசங்களை இனங்காணும் நோக்கத்தில் இலங்கையிலுள்ள மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களின் பதிவுகளைக் கொண்டுள்ளது வித்தியாசமான துறைகளில் சக்தி வீணாதலைக் குறைப்பதிலும் சக்தி வினைத்திறன் பாதுகாப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதிலும் சக்தி முகாமைத்துவம் மற்றும் சக்தி வினைத்திறன் சார் சேவைகள் முக்கிய பங்கை வகிக்கின்றன. ஒழுங்குறுத்துகைத் தலையீட்டு நடவடிக்கைகள், சக்தி வினைத்திறன் சார்ந்த சேவைகள், சக்திப் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை அதிகரித்தல் மற்றும் சக்தி வினைத்திறன் மேம்பாட்டிற்கான நிதியீட்டும் திட்டங்களுக்கு வசதியளித்தல் என்பன அடங்கலாக இ.நி.வ.அ.ச தேசிய சக்தி முகாமைத்துவத்திற்கான நான்கு வகை திறமுறை நடவடிக்கைகனை இனங்கண்டுள்ளது. இந்த நடபடிமுறையின் கீழ், இ.நி.வ.அ சபையினால் தேசிய சக்தி முகாமைத்துவப் படைக்கான அங்கீகாரம் பெற்ற சக்தி முகாமையாளர்கள் மற்றும் சக்தி மதிப்பீட்டாளர்கள் ஆகியோருடன் இணைய முடிந்துள்ளது. இலக்குக் கொள்ளப்பட்ட துறைகளில் அடைந்த சக்திப் பாதுகாப்பு சார்ந்த சாதனைகள், சக்திப் பாதுகாப்பை உணர்த்துவதற்கான ஆகுசெலவு பயனுடைய ஒரு முறையியலாக அமைய வேண்டும் என்பதை நிறூபித்து, மேலதிகப் புதிய மின்சார உற்பத்திக் கொள்திறனுக்கான தேவைப்பாட்டை இது இலகு படுத்தக்கூடியதாக அமையும்.

ஆகையால், சக்திக் கொள்கைகளையும் கட்டளைகளையும் வகுத்தமைப்பதில் அதிக முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

நிலைபெறுதகு சக்தி சார் தலையீட்டு நடவடிக்கைகளினூடாக நாட்டிற்காக ஒரு சக்திப் பாதுகாப்பு வாய்ந்த ஓர் எதிர்காலத்தை அடைவது எனும் குறிக்கோளின் நிமித்தம் மேற்கொள்ளப்பட்ட அயராத முயற்சிகளுக்காக இ.நி.வ.அ.ச முகாமைத்து சபைக்கும், பணிப்பாளர் நாயகத்திற்கும் மற்றும் பணியாளருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். உங்களுக்கு நன்றி.

கலாநிதி கித்சிறி திஸாநாயக்க

தலைவர்

## பணிப்பாளர் நாயகத்தின் செய்தி



இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் (இ.நி.வ.அ.ச) வருடாந்த அறிக்கை தொடர்பில் சுருக்கமான ஒரு கூற்றினை முன்வைப்பதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். 2012 ஆம் ஆண்டு அடைந்த முக்கிய சாதனைகளை மீண்டும் நினைவுகூர்வதற்குக் கிடைத்த இச்சந்தர்ப்பத்தை நான் ஒரு பிரத்தியேக வாய்ப்பாகக் கருதுகின்றேன்.

இ.நி.வ.அ.ச 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் ஆரம்பமாகியது முதல் அது சிறந்த நிலைபெறுதகு செயல்முறைகளைப் பின்பற்றி இலங்கையில் சக்திப் பாதுகாப்பை அடைவதை நோக்கி மக்களுக்கு வழிகாட்டி வருகின்றது. அர்ப்பணிப்புடைய ஒரு பணியாள் குழுவின் அயராத முயற்சிகளினூடாக மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மற்றும் சக்திப் பாதுகாப்பு, மற்றும் முகாமைத்துவம் ஆகிய துறைகளில் எம்மால் கணிசமான அபிவிருத்திகளை அடைய முடிந்தது.

சிறிய நீர்வலு, காற்றுமூல சக்தி, உயிரணுத்திணிவுச் சக்தி மின்னுற்பத்திப் பொறித்தொகுதிகள் போன்ற மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி (மீ.பு.ச) வளங்களை இனங்கண்டு மேம்படுத்துவதில் 2012 ஆம் ஆண்டு எமக்கு குறிப்பிடத்தக்க அளவான ஒரு முன்னேற்றத்தைப் பெற்றுத் தந்துள்ளது. இ.நி.வ.அ உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்திய மீ.பு.ச வளங்களைப் பயன்படுத்தி அதன் ஆரம்பம் முதல் தன்னகத்தே 2012 ஆம் ஆண்டில் 25.61 மெ.வொ கொள்திறனுடைய மின்னுற்பத்திப் பொறித் தொகுதிகளை தேசிய க்றிட் மின்சார முறைமைக்கு இணைத்து மொத்தம் 243 மெ.வொ மின்சக்திக்குப் பங்களிப்புச் செய்ய முடிந்தது. வீடு, கைத்தொழில் மற்றும் வர்த்தகம் சார்ந்த துறைகளில் சக்தி வினைத்திறன் சார் நடவடிக்கைகளை ஆரம்பித்தனூடாக 2012 ஆம் ஆண்டில் இ.நி.வ.அ சபையினால் 448.3 ஜி.வொ.ம மின்சக்திக் கொள்ளளவை அடைய முடிந்தது. இது 2012 ஆம் ஆண்டு நாட்டில் நிலவிய 4.1% மொத்த மின்சக்தி நுகர்வுக்குச் சமனாக இருந்தது. மேலும், எரிபொருள் மைய மின்னுற்பத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நிறுத்தியதன் மூலம் 2011 ஆம் ஆண்டில் 715 மில்லியன் லீற்றர் எண்ணெய், 328.7 டொன் பெற்றோலிய எரிவாயு மற்றும் 476.3 டொன் எரிவிறகு என்பவற்றின் பெறுமதி வாய்ந்த ஒரு சேமிப்பும் நிலவியது.

2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ஆம் திகதிய 1715/12 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலைத் தொடர்ந்து சக்தி முகாமையாளர்கள் மற்றும் சக்தி மதிப்பீட்டாளர்கள் ஆகியோருக்கான அங்கீகாரம் பற்றிய ஒழுங்குவிதிகள் வெளியிடப்பட்டிருந்தன.

குறித்த துறையின் மொத்தம் 80% வீத சக்தி நுகர்வுக்கு ஏதுவாக அமைகின்ற 1500

இற்கும் அதிகமான கைத்தொழில் துறை நிறுவனங்களில் உகந்த ஒரு சக்தி முகாமைத்துவத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது இதற்கான முக்கிய குறிக்கோளாக அமைந்தது. போக்குவரத்துத் துறையில் சக்தி முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டமை 2012 ஆம் ஆண்டில் இடம்பெற்ற மற்றுமொரு முக்கிய செயற்பாடாக விளங்கியது. உள்நாட்டு, வெளிநாட்டு நிபுணர்களின் பங்குபற்றலில் மொரட்டுவைப் பல்கலைக்கழகம், ஹொங்கொங் பொலிடெக்னிக் பல்கலைக்கழகம் மற்றும் ஆசிய (CAI ஆசிய) நகர நிலையத்திற்கான க்ளீன் எயார் இனிஷியேட்டிவ் ஆகியவற்றின் உதவியுடன் உந்து வட்ட அபிவிருத்தி தொடர்பான ஒரு நிகழ்ச்சித் திட்டமும் மற்றும் சக்தி வினைத்திறன் மற்றும் சுற்றாடல் ரீதியான நிலைபெறுதகு போக்குவரத்து ($E^3ST$) ஆகியன தொடர்பான ஒரு கருத்தரங்கும் நடாத்தப்பட்டன. இந்த முன்னெடுப்புத் திட்டம் போக்குவரத்துத் துறையில் கணிசமான எரிபொருள் சேமிப்பு அடையப்படுகின்ற அத்தகைய போக்குவரத்துத் துறையிலுள்ள பொருத்தமான நிறுவனங்களுக்கு தொடர்ந்தும் ஊக்குவிப்பாக அமையும் எனவும் மற்றும் நகரப் புற வளியின் தரம் மேம்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்காலத்தை முன்னிட்டு, சுற்றாடலுக்கான ஆபத்தை ஒழித்தல் மற்றும் உலகலாவிய ரீதியில் சக்தி தொடர்பில் அதிகரித்து வருகின்ற தேவையை நிறைவேற்றுதல் ஆகிய விடயங்களைக் கருத்திற் கொண்டு இ.நி.வ.அ.ச பொறுப்புக்கள் அதிகரித்து வருகின்றன. நிலைபெறுதகு எண்ணக்கருக்களின் உதவியைக் கொண்டு சமூக மற்றும் சுற்றாடல் சார்ந்த அக்கறை விடயங்களை கூடுமான வரை பாதுகாக்கும் அதே நேரம் நாட்டின் பொருளாதார அபிவிருத்திற்கும் சக்தித் துறையின் பங்களிப்பை உறுதிசெய்வதும் எமது கடமையாகும்.

கலாநிதி துஸித்த சுகதபால

பணிப்பாளர் நாயகம்

## எமது தூரநோக்கு

இலங்கையை சக்திப் பாதுகாப்பு வாய்ந்த ஓர் நாடாகக் கட்டியெழுப்புவது எமது தூரநோக்காகும்.

## எமது செயற்பணி

சிறந்த நிலைபெறுதகு செயன்முறைகளைத் தழுவி இயற்கை, மானிட மற்றும் பொருளாதார வளங்களைப் பாதுகாத்து சக்திப் பாதுகாப்பை அடையும் முகமாக இலங்கைக்கு வழிசமைத்து, தேசிய அபிவிருத்திப் பயணத்தில், ஆய்வு, வசதியை ஏற்பாடு செய்து வழங்குதல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, மற்றும் அறிவு முகாமைத்துவம் என்பன போன்ற விடயங்களினூடாக சக்தி வளங்களைப் பாதுகாத்து சுதேசிய சக்தி வளங்களை அபிவிருத்தி செய்வதற்கான சகல முயற்சிகளிலும் நாட்டிற்கு வழிகாட்டுவது எமது செயற்பணியாகும்.



## முகாமைத்துவ சபையின் உறுப்பினர்கள் பற்றிய விபரம் - 2012

**தலைவர்**
கலாநிதி கித்சிறி திஸாநாயக்க

**உறுப்பினர்கள்**
திரு எம்.எம்.சி. பெர்டினாந்து
செயலாளர்
மின்வலு சக்தி அமைச்சு

**திரு இளையப்பஆராச்சி**
மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி)
உள்ளூராட்சி மன்ற மாகாண சபைகள் அமைச்சு

**கலாநிதி வை.டீ. நிகால் ஜயதிலக்க**
உள்ளூராட்சி மன்ற மாகாண சபைகள் அமைச்சு

**திரு எம்.ஏ. தாஜுதீன்**
பணிப்பாளர் (கூட்டுத்தாபன அரசியலமைப்பு சபைப் பிரிவு)
வர்த்தக கைத்தொழில் அமைச்சு

**திருமதி தனுஜா முருகேசன்**
சிரேஷ்ட உதவிச் செயலாளர் (காணிகள்)
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு

**திரு விமல் ஜயவர்த்தன**
மேலதிகச் செயலாளர் (நிருவாகம்)
பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு

**கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க**
சுற்றாடல் அமைச்சு

**பொறியியலாளர் பி.யூ. விக்ரமரட்ன**
மேலதிகச் செயலாளர் (தொழில்நுட்பம்)
நீர்ப்பாசன நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு

**திரு ஏ.டப்ளியூ.எம். சரத்சந்திர**
பணிப்பாளர் (திட்டமிடல் கருத்திட்டச் செயற்படுத்துகை)
போக்குவரத்து அமைச்சு

**திரு எஸ்.எஸ். முதலிகே**
பணிப்பாளர் (தேசிய திட்டமிடல் திணைக்களம்)
நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு

**திருமதி தாரா விஜயதிலக்க**
செயலாளர்
விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சு

**திரு தம்மித்த குமாரசிங்க**
பணிப்பாளர் நாயகம்
இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

**திரு டீ. சந்திரசேக்கர**
இலங்கை சக்தி முகாமையாளர்கள் சங்கம்

**திரு கிஷான் நாணயக்கார**
பிரதான நிறைவேற்று அலுவலர்
ஜித்தாவ ஹைட்ரோ பவர் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனம்

**திரு எல்.பி. ஜயசிங்க**
வர்த்தக கூடம்

**திரு கே.ஏ. பந்துல சந்திரசேக்கர**
பணிப்பாளர்
சக்தி ஆயம்

**திரு சுரஞ்ஜன் கொடிதுவக்கு**

**திரு சாமத் த சில்வா**

**திரு அசோக்க அபேகுணவர்த்தன**
நிறைவேற்றுப் பணிப்பாளர்
கிராமிய சக்தித் துறை சக்திக் குழுப் பிரதிநிதி

## கணக்காய்வு முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள் பற்றிய விபரம் – 2012

தலைவர்
**திரு எஸ்.எஸ். முதலிகே**
பணிப்பாளர்
தேசிய திட்டமிடல் திணைக்களம்

உறுப்பினர்

**திரு டீ. சந்திரசேக்கர**
இலங்கை சக்தி முகாமையாளர் சங்கப் பிரதிநிதி உறுப்பினர்


**திரு சுலக்ஷன ஜயவர்த்தன**
பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் முன்னேற்றக் கண்காணிப்பு)
மின்வலு சக்தி அமைச்சு அவதானிப்பாளர்

**திரு ஆர்.எம். ரத்நாயக்க**
கணக்காய்வு அத்தியட்சகர்
கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம்

## எமது பதவியணி ஊழியர்கள் - 2012

ஒப்பீட்டளவில் எமது நிறுவனம் ஒரு இளம் நிறுவனமாகும். எமது பதவியணியில் 89 ஊழியர்கள் அடங்குகின்றனர்.

எமது பதவியணி ஊழியர்கள் பற்றிய விபரம் கீழ்காணும் வரைபின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.



## அறிமுகம்

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையானது, இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசின் பாராளுமன்றத்தினது 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை (இ.நி.வ.அ.ச.) சட்டம் சட்டவாக்கம் பெற்றதையடுத்து, 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. நாட்டினுள் சக்தி வினைத்திறனை மேம்படுத்தி, சுதேசிய சக்தி வளங்களை அதிகரித்தல் ஆகியவற்றினூடாக சக்தி உற்பத்தி, பயன்பாடு ஆகியவற்றில் புதிய ஒரு நிலைபெறுதகு மட்டத்தை நோக்கி இலங்கையை நகரச் செய்வதற்கு ஒரு உயர்ந்த நிறுவனத்தைக் கொண்டிருக்கும் தேவையை அடைந்துகொள்வதற்காக இந்த நி.வ.அ.ச. தாபிக்கப்பட்டது. நி.வ.அ.ச. செயற்பாடுகள் உள்ளிட்ட நிகழ்ச்சித்திட்டம் சக்திப் பாதுகாப்பு, சுற்றாடல் நிலைபெறுதகுதன்மை மற்றும் சமூகப் பொருளாதார அபிவிருத்தி என்பன அடங்கலாக தேசிய அபிவிருத்திக் குறிக்கோள்களை அடையும் வகையில் பங்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2012-2015 எனும் கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க, 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நி.வ.அ.ச. செயற்பாடுகள் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி (மீ.ச.) மற்றும் சக்தி முகாமைத்துவம் (ச.மு.) ஆகிய இரண்டு பிரதான பிரிவுகளின் கீழ் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் பொறுப்பு மீ.ச. பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதே நேரம் ச.மு. பிரிவுக்கு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் சக்தி வலிமையை முகாமை செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்த இரண்டு பிரிவுகளிலுமுள்ள தலையீட்டுச் செயற்பாடுகள் கொள்கை மற்றும் இயக்கச்செயற்பாடு ஆகிய மட்டங்களிலும் வகுத்தமைக்கப்பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில், முறை சார்ந்த, முறை சாராத மற்றும் முறை சார்பற்ற கல்வி மார்க்கங்களினூடாக நிலைபெறுதகு சக்தி உணர்வுடைய ஒரு தேசத்தைத் தாபித்து மீ.ச. மற்றும் ச.மு. ஆகிய பிரிவுகளில் பெற்றுக் கொள்ளும் அறிவைப் பரப்புவதற்கு உதவும் நோக்கில் முகாமைத்துவ அறிவுப் பிரிவை (மு.அ.) வலுப்படுத்தும் முகமாக புதிய ஒரு முன்னெடுப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

2012 ஆம் ஆண்டு இறுதியளவில், புதிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களின் (மீ.ச.வ.) மொத்த நிலையான உற்பத்திக் கொள்திறன் 312 மெ.வொ. அளவை அடைந்தது. இது 736 ஜி.வொ.ம. மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குப் பங்களித்தது. இதனால் க்றிட் மின்சார உற்பத்திற்கு 6.2% வீதம் பங்களிப்புச் செய்யப்படுகின்றது. கைத்தொழில் மற்றும் வர்த்தகத் துறைகளில் 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நி.வ.அ.ச. மூலம் மேற்கொள்ளப்பட்ட சக்திப் பாதுகாப்புச் செயற்பாடுகள் மற்றும் சக்தி வினைத்திறன் மேம்பாடுகள் என்பவற்றிலிருந்து வருடாந்த மின்சார சக்தி சேமிப்புகள் ஏற்பட்டுள்ளன. இந்தச் சக்தி சேமிப்புகள் தனியே ஏறக்குறைய 37 மெ.வொ.ம. சக்தியாக இருக்க வேண்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதே நேரம் 300 மெ.வா.ம. அதிகமான வருடாந்த சக்தி சேமிப்புகள் முன்னைய ஆண்டுகளில் இருந்த தலையீட்டுச் செயற்பாடுகளிலிருந்து நாட்டிற்கு நன்மை பயக்கும் வகையில் பங்களித்துள்ளன. மேலும், கணிய எண்ணெய்லிருந்து உயிரணுத் திணிவுச் சக்திக்கு மாறுகின்ற கைத்தொழில் அனல் சக்திக் கைத்தொழிலில் எரிபொருள் மைய நடவடிக்கையை ஆரம்பித்ததனூடாக நாட்டின் சக்திப் பாதுகாப்பு நிலையை அதிகரிக்கும் வகையில் கணிசமான ஒரு பங்களிப்பு கிடைத்தது.

## எமது குறிக்கோள்கள்

குறித்த சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு, நி.வ.அ.ச. நான்கு முக்கியமான குறிக்கோள்கள் காணப்படுகின்றன.

(a) சக்திப் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களை இனங்கண்டு, மதிப்பீடு செய்து, அபிவிருத்தி செய்வதன் மூலம் நாட்டிற்கு சமூகப் பொருளாதார நன்மைகளைக் கிட்டச்செய்தல்.

(b) வீட்டுத் துறை, வர்த்தம், விவசாயம், போக்குவரத்து, கைத்தொழில் துறைகள் மற்றும் ஏதாவது ஏனைய பொருத்தமான துறை ஆகிய துறைகளில் சக்திப் பாவனைக்கான சக்தி வினைத்திறன் மேம்பாட்டு மற்றும் சக்திப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை இனங்கண்டு, ஊக்குவித்து, வசதிகளை செய்துகொடுத்து, செயற்படுத்தி, முகாமை செய்தல்.

(c) கொள்கை அபிவிருத்தி, பகுப்பாய்வு, சம்பந்தப்பட்ட தகவல் முகாமைத்துவம் என்பவற்றின் மூலம் நாட்டிற்கு பாதுகாப்பான, நம்பத்தகுந்த, ஆகுசெலவு பயனுடைய சக்தி விநியோகத்தை ஊக்குவித்தல்.

(d) நாட்டிற்கான ஆகக்குறைந்த பொருளாதார ஆகுசெலவு வாய்ந்த சக்தி மற்றும் சக்திப் பாதுகாப்பு என்பவற்றுக்கு இணங்க அதிகார சபைக்கு அதன் குறிக்கோள்களை செயற்படுத்தும் வகையில் போதியளவான நிதிகள் கிடைக்கக்கூடியதாகவுள்ளனவா என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளல்.

மேலும், இலங்கைத் தேசிய சக்திக் கொள்கைத் திறமுறைகள் நி.வ.அ.ச. செயற்பாடுகளின் நோக்கெல்லை தொடர்பான பல கொள்கை சார்ந்த குறிக்கோள்களை குறிப்பீடு செய்கின்றன. அதில்:

- அடிப்படைச் சக்தித் தேவைகளை வழங்குதல்
- சக்திப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்
- சக்தி வினைத்திறனையும் பாதுகாப்பையும் மேம்படுத்துதல்
- சுதேசிய வளங்களை ஊக்குவித்தல்
- சக்தி வசதிகள் மீதான பாதகமான தாக்கங்களிலிருந்து சுற்றாடலைப் பாதுகாத்தல்

போன்ற சக்திக் கொள்கைப் பிரிவுகளின் கீழ் இவை பட்டியல்படுத்தப்பட்டுள்ளன.

இவற்றுக்கு மத்தியில், சக்திப் பாதுகாப்பை உறுதிசெய்தல், சுதேசிய சக்தி வளங்களை அதிகரித்தல், சக்தி வினைத்திறன் நிலையை உயர் நிலைக்குக் கொண்டு வருதல் என்பன எமது முன்னுரிமை விடயங்களாகும்.

## எமது இலக்குகள்

மேற்குறித்த குறிக்கோள்களை அடைவதில் மீ.ச., ச.மு. மற்றும் அ.மு. ஆகிய பிரிவுகளில் தலையீட்டு நடவடிக்கைகளினூடாக பல இலக்குகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மீ.ச. வளங்கள் பிரிவு சகல துறைகளிலும் மின்சாரம் மற்றும் அனல் சக்தி ஆகிய இரண்டு வகையான சேவைகளிலும் இலக்குக் கொள்கின்றது. சக்தி வளங்களின் பல்லினப்படுத்தல் மற்றும் சக்திக் கலவைகளின் பகுத்தறிவு என்பவற்றினூடாக நாட்டின் சக்திப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும் அதே நேரம் தூய சக்தி மூலங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் என்பவற்றை ஊக்குவிப்பதனூடாக சுற்றாடல் சார்ந்த நிலைபெறுதகுதன்மையை அடைவதற்கும் இந்தப் பிரிவு மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கிணங்க, மீ.ச. அபிவிருத்திகளில் பின்வரும் இலக்குகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

(i) 2017 ஆம் ஆண்டளவில் சகல பிரஜைகளுக்குமான நவீன சக்திச் சேவைகளுக்கான பிரவேசம்

(ii) 2015 ஆம் ஆண்டளவில் பு.மீ.ச. மூலங்களின் மூலம் 10% க்றிட் மின்சாரத்தை உற்பத்தி செய்தல்

(iii) 10% கைத்தொழில் அனல் சக்தியை உயிரணுத்திணிவுச் சக்திக்கு மாற்றுதல்

(iv) உயிரணுத்திணிவுச் சக்தியை 10% வீதத்தினால் ஒரு தூய சமையல் எரிபொருளாக அதிகரிக்க செய்தல்

முன்னுரிமையிலுள்ள இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி இலக்குகளுக்கும் கைத்தொழில் துறையின் வலிமையான வளர்ச்சி எதிர்வுகூறலுக்கும் இணங்க தற்பொழுதுள்ள சக்திப் பொருளாதர ஆர்வ மட்டங்களைத் தக்கவைத்துக்கொள்ளும் பணியானது தொடரப்படமாட்டாது. பொருளாதார சக்தி ஆர்வ மேம்பாடானது இறக்குமதி செய்யப்பட்ட கணிய எண்ணெய்களில் அதிகளவு தங்கி இருப்பதால் நாட்டின் பொருளாதார அபிவிருத்திற்குத் தடையாகவிருக்கும். ஆகையால், பொரளாதார அபிவிருத்தியை சக்திக் கேள்வி அதிகரிப்பிலிருந்து பிரிப்பதற்கான நடவடிக்கைகள், 2017 ஆம் ஆண்டளவில் 500 டொயி /XDR மில்லியன் அளவான சக்தி சிக்கன ஆர்வத்தில் இலக்குக் கொள்ளல் ஆகியன

- ✓ சக்தி முகாமைத்துவ முறைமைகளின் தாபிப்பு மற்றும் சக்தி வினைத்திறன் சேவைகள் விநியோகம் ஆகியவற்றுக்கான முழுமையான ஒரு பொறிமுறைத்திட்டம்
- ✓ பரந்த ஒரு ஆற்றல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
- ✓ சக்தி உணர்வுடைய தேசத்தைத் தாபிப்பதற்கான முழுமையான ஒரு விழிப்புணர்வு மற்றும் கல்வி நிகழ்ச்சித்திட்டம்

என்பவற்றினூடாக மேற்கொள்ளப்படும்.


மேற்குறித்த வழிகாட்டல்களில் அமைந்த குறித்த இலக்கு யாதெனில்

- ✓ 2020 ஆம் ஆண்டளவில் மின்சாரத் தேவையின் 8.7% வீதத்தை சேமித்தல் (2010 ஆம் ஆண்டில் காணப்பட்ட 20% வீத மின்சாரத் தேவைக்கு சமனான)

## எமது தாக்கம்

## பொருளாதாரம்


2007 ஆம் ஆண்டு முதல், பு.மீ.ச. கைத்தொழிலின் எமது காத்திரமான வசதி கணிய எண்ணெய் இறக்குமதிகளைத் தவிர்த்து நாட்டிற்கு 52 பில்லியனுக்கும் அதிகமான அந்நியச் செலாவணியை ஈட்டித்தந்துள்ளது.




**வரைபு 1: அந்நியச் செலாவணி சேமிப்புகள்**

## தூய சக்தி

புதிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்திக் கைத்தொழிலுக்கான எமது காத்திரமான பங்களிப்பானது 2012 ஆம் ஆண்டு 700 ஜி.வொ.ம. இற்கும் அதிகமான தூய சக்தி உற்பத்தியை நாட்டிற்கு வழங்குவதற்கு உதவியுள்ளது.




**வரைபு 2: பு.மீ.ச. வளங்களிலிருந்து க்றிட் மின்சாரத்திற்கு இணைக்கப்பட்ட மின்சக்தி உற்பத்தி**


மேலும், 2012 ஆம் ஆண்டில் எம்மால் மேற்கொள்ளப்பட்ட சக்தி வினைத்திறன் செயற்பாடுகள் தனியே கைத்தொழில் மற்றும் வர்த்தகம் ஆகிய துறைகளில் 37 ஜி.வொ.ம. மின்சார சேமிப்புக்குப் பயனாக அமைந்துள்ளது. இது முன்னைய ஆண்டுகளின் தலையீட்டு நடவடிக்கைகளின் பயனாக வந்த 300 மெ.வொ.ம. மின்சாரத்திற்கும் அதிகமான சேமிப்பாகும். இது தவிர, நவீன உயிரணுத் திணிவுச் சக்தித் தொழில்நுட்பங்களைப் பரப்பியதனூடாக கைத்தொழிலில் எரிபொருள் ஊக்குவிப்பு முன்னெடுப்புகளினால் ஏறக்குறைய 8.7 மில்லியன் லீற்றர் டீசலையும் மற்றும் 0.6 மில்லியன் லீற்றர் உலைஎண்ணெய்யையும் சேமிக்க முடிந்தது.

## கைத்தொழில்

நிறுவனங்களிலுள்ள நி.வ.அ.ச. சக்தி முகாமைத்துவ செயற்பாடுகளில் காணப்படும் வலிமையான ஆதரவானது நான்கு நிறுவனங்கள் வெள்ளி விருதுகளையும் இரண்டு நிறுவனங்கள் வெண்கல விருதுகளையும் பெற்றதைத் தொடர்ந்து தேசிய சக்தி வினைத்திறனில் தங்க விருதுகளைப் பெறும் ஒரு நிறுவனத்திற்கு இட்டுச்சென்றது.

## சக்தித் துறையின் சுருக்கமான கண்ணோட்டம்
## சக்தி மூலம் ரீதியான அடிப்படை சக்தி விநியோகம்


| சக்தி மூலம் | அடிப்படை சக்தி (PJ) | |
|---|---|---|
| | 2011 | 2012 |
| உயிரணுத் திணிவுச் சக்தி | 207.0 | 235.9 |
| பெற்றோலியம் | 205.8 | 218.5 |
| நிலக்கரி | 13.6 | 19.1 |
| சிறிய நீர்வலு | 40.4 | 27.4 |
| பு.மீ.ச. | 7.5 | 7.6 |
| **மொத்தம்** | **474.2** | **508.4** |




**சக்தி மூலம் ரீதியான அடிப்படை சக்தி விநியோகம் - 2012**

## சக்தி மூலம் ரீதியான சக்திக் கேள்வி


| சக்தி மூலம் | சக்திக் கேள்வி (PJ) | |
|---|---|---|
| | 2011 | 2012 |
| உயிரணுத் திணிவுச் சக்தி | 206.1 | 235.3 |
| பெற்றோலியம் | 128.5 | 139.0 |
| நிலக்கரி | 3.1 | 2.6 |
| மின்சாரம் | 36.0 | 37.5 |
| **மொத்தம்** | **373.7** | **414.4** |




சக்தி மூலம் ரீதியான சக்திக் கேள்வி - 2012

## துறை ரீதியான சக்திக் கேள்வி


| சக்தித் துறை | சக்திக் கேள்வி (PJ) | |
|---|---|---|
| | 2011 | 2012 |
| கைத்தொழில் | 91.1 | 95.1 |
| போக்குவரத்து | 103.0 | 111.8 |
| வீட்டு மற்றும் வர்த்தக நோக்கம் | 79.4 | 207.3 |
| விவசாயம் | 0.3 | 0.1 |
| **மொத்தம்** | **373.8** | **414.3** |




துறை ரீதியான சக்திக் கேள்வி - 2012

## சக்தி மூலம் ரீதியான கைத்தொழில் சக்திக் கேள்வி


| சக்தி மூலம் | சக்திக் கேள்வி (PJ) | |
|---|---|---|
| | 2011 | 2012 |
| உயிரணுத் திணிவுச் சக்தி | 66.3 | 68.3 |
| பெற்றோலியம் | 10.5 | 11.5 |
| நிலக்கரி | 2.1 | 2.6 |
| மின்சாரம் | 12.2 | 12.7 |
| **மொத்தம்** | **91.1** | **95.1** |




சக்தி மூல கைத்தொழில் சக்திக் கேள்வி - 2012

## சக்தி மூல வீட்டு, வர்த்தக மற்றும் ஏனைய சக்திக் கேள்வி


| சக்தி மூலம் | சக்திக் கேள்வி (PJ) | |
|---|---|---|
| | 2011 | 2012 |
| உயிரணுத் திணிவுச் சக்தி | 139.9 | 166.9 |
| பெற்றோலியம் | 15.7 | 15.6 |
| மின்சாரம் | 23.8 | 24.8 |
| **மொத்தம்** | **179.4** | **207.3** |




சக்தி மூல வீட்டு, வர்த்தக மற்றும் ஏனைய சக்திக் கேள்வி - 2012

## சக்தி மூல போக்குவரத்து சக்திக் கேள்வி

| சக்தி மூலம் | சக்திக் கேள்வி (PJ) | |
|---|---|---|
| | 2011 | 2012 |
| பெற்றோலியம் | 101.9 | 111.8 |
| நிலக்கரி | 1.1 | - |
| **மொத்தம்** | **103.0** | **111.8** |




சக்திக் சக்தி மூல போக்குவரத்து கேள்வி - 2012

## கணிய எண்ணெய்த் துறை

| உற்பத்திப்பொருள் | இறக்குமதிகள் (kt) | |
|---|---|---|
| | 2011 | 2012 |
| **மசகெண்ணெய்** | **1,931.9** | **1,626.1** |
| **முடிவுப் பொருட்கள்** | **2,824.3** | **3,376.8** |
| எல்பி எரிவாயு | 181.3 | 192.6 |
| பெற்றோல் | 508.5 | 574.6 |
| Avtur | 244.1 | 288.2 |
| ஓட்டோ டீசல் | 1,402.0 | 1,652.2 |
| எரி எண்ணெய் | 367.9 | 563.7 |
| ஏவி எரிவாயு | 0.2 | 0.2 |
| பிட்யுமென் | 120.3 | 105.3 |
| நிலக்கரி | **760.2** | **962.4** |

| உற்பத்திப்பொருள் | சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் (kt) | |
|---|---|---|
| | 2011 | 2012 |
| **மசகெண்ணெய் உள்ளீடு** | **2,003.6** | **1,596.1** |
| நெப்தால் - மொத்தம் | 80.0 | 70.9 |
| பெற்றோல் - மொத்தம் | 206.5 | 151.6 |
| Avtur | 155.4 | 93.2 |
| மண்ணெண்ணெய் | 92.9 | 74.8 |
| டீசல் - மொத்தம் | 501.1 | 394.2 |
| உலையெண்ணெய் - மொத்தம் | 614.6 | 648.4 |
| கரைசல்கள் - மொத்தம் | 3.8 | 3.8 |
| பிட்டியுமென் | 46.1 | 46.1 |
| **மொத்த உள்ளீடு** | **1,724.4** | **1,480.7** |

## மின்சக்தித் துறை

| மூலம் | க்றிட் மின்சாரக் கொள்ளளவு (மெ.வொ.) | |
|---|---|---|
| | 2011 | 2012 |
| பாரியளவான நீர்வலு | 1,207.5 | 1,357.5 |
| அனல் மின்சாரம் | 1,689.5 | 1,695.3 |
| பு.மீ.ச. மற்றும் இ.மி.ச. காற்றுமூல சக்தி | 243.7 | 315.2 |
| **மொத்தம்** | **3,140.7** | **3,368.0** |

| உற்பத்திப்பொருள் | மின்சாரக் கேள்வி (ஜி.வொ.ம.) | |
|---|---|---|
| | 2011 | 2012 |
| வீட்டு | 3,928.4 | 4,062.9 |
| சமய | 59.1 | 63.3 |
| கைத்தொழில் | 3,379.3 | 3,528.0 |
| வர்த்தகம் | 2,490.2 | 2,614.1 |
| வீதி ஒளியேற்றல் | 132.9 | 139.1 |
| மொத்தம் | **9,989.9** | **10,407.4** |

| மூலம் | முழுமொத்த மின்னுற்பத்தி (ஜி.வொ.ம.) | |
|---|---|---|
| | 2011 | 2012 |
| பாரியளவான நீர்வலு | 4,017.7 | 2,726.7 |
| அனல் (எண்ணெய்) | 5,857.5 | 7,012.7 |
| அனல் (நிலக்கரி) | 1,038.1 | 1,403.7 |
| இ.மி.ச. காற்றுமூல சக்தி | 2.7 | 2.3 |
| பு.மீ.ச. | 722.3 | 733.3 |
| **மொத்தம்** | **11,638.2** | **11,878.8** |

| க்றிட் வெளியீட்டுக் காரணிகள் (t-CO2/MWh) | | |
|---|---|---|
| அடிப்படை | 2011 | 2012 |
| சாதாரண இயக்க வரையறை | 0.7046 | 0.7035 |
| நிலையான வரையறை | 0.7670 | 0.7665 |
| திரண்ட வரையறை | 0.7202 | 0.7193 |

## பொருளாதார சுட்டிகள்

| சுட்டி | 2011 | 2012 |
|---|---|---|
| 1982 காரணி ஆகுசெலவு விலைகள் GDP (மில்லியன் இ.ரூ.) | 382,520 | 403,558 |
| வர்த்தக சக்தி அடர்த்தி (TJ/இ.ரூ. மில்லியன்) | 0.44 | 0.47 |
| சராசரி மின்சார விலை (இ.ரூ./kWh) | 13.63 | 15.71 |
| விற்பனை செய்யப்பட்ட மின்சாரம் (kWh/நபர்) | 478.7 | 511.1 |
| பெற்றோலியம் சாராத ஏற்றுமதிகளின் % வீதமான தேறிய எண்ணெய் இறக்குமதிகள் | 44.2 | 51.5 |



# சேயலாற்றுனுகை

# 2012

## 2012 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை
## புதிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தி
## மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களின் பாதுகாப்பும் முகாமைத்துவமும்


இலங்கைத் தேசிய சக்திக் கொள்கைகள் திறமுறைகளில் குறிப்பீடு செய்யப்பட்ட திறமுறைகளுக்கு இணங்க 2015 ஆம் ஆண்டில் புதிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்தியைக் கொண்டு 10% மின்சார உற்பத்தியை அடையும் நோக்கில் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தி சார்ந்த பணி நாட்டில் மேற்கொள்ளப்படுகின்றது. இதே வேளையில் இலங்கை அரசாங்கத்தின் (இ.அ.) அபிவிருத்திக் கொள்கை வேலைச்சட்டகம் என்ற எதிர்காலத்திற்கான மஹிந்த சிந்தனைத் தூரநோக்கின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டளவில் இந்தக் குறிக்கோள் 20% வரை அதிகரிக்கப்படும். பு.மீ.ச. கைத்தொழில் 2012 ஆம் ஆண்டில் பல திருப்புமுனைகளைத் தாண்டிச்சென்றது.

2009 ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதிய 1599/6 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டிற்கான ஒன்-க்றிட் மீளப்புதுப்பிக்கத்தகு சக்திக் கருத்திட்ட ஒழுங்குவிதிகள் 2011 மே மாதம் 10 ஆம் திகதிய 1705/22 வர்த்தமானி அறிவித்தலின் மூலம் நீக்கப்பட்டன. குறித்த ஒழுங்குவிதிகளும் V2.0/2011 என்ற ஒன்-க்றிட் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தி வாசகத்திற்கான கருத்திட்ட அங்கீகார நடபடிமுறைக்குரிய வழிகாட்டியையும் அறிமுகப்படுத்தின. அந்த வழிகாட்டி ஏற்கெனவே காணப்படுகின்ற மீளப்புதுப்பிக்கத்தகு சக்திக் கருத்திட்டங்களின் முதலீட்டுத் தரப்புகளுக்கும் இயக்குநர் தரப்புகளுக்கும் அதே நேரம் அத்தகைய கருத்திட்டங்களில் முதலிடுவதிலும் அபிவிருத்தி செய்வதிலும் எண்ணமுள்ள மீளப்புதுப்பிக்கத்தகு கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையிலுள்ள முதலீட்டுத் தரப்புகளுக்கும் தகவல்களை வழங்குகின்றது. குறிப்பிட்ட ஒரு வளாகத்திற்கான முழுமையான ஒரு மின்சார பிரயோகத்தை மேற்கொள்ளக்கூடிய எதிர்கால சக்தி அபிவிருத்தித் தரப்புகளை இயலச்செய்யும் சுய உள்ளடக்க ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு தேவையுடைய சகல தரப்புகளுக்கும் இலவசமாகக் கிடைக்கச் செய்யப்பட்டன. நியமப்படுத்தப்பட்ட சக்திக் கொள்வனவு ஒப்பந்தத் (SPPA) திட்டத்தின் கீழ் கருதப்படுகின்ற சகல வகையான வளங்களும் இந்த ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.



**உருப்படம் 3: ஒன்-க்றிட் மீளப்புதுப்பிக்கத்தகு சக்திக் கருத்திட்டங்களுக்கான நியமப்படுத்தப்பட்ட பிரயோகத் தொகுதி**

## மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வள அபிவிருத்தித் திட்டம்




| No | District | Biomass | Solar | Wind | Hydro | Total |
|---|---|---|---|---|---|---|
| 1 | Ampara | 30 | 0 | 0 | 0 | 30 |
| 2 | Anuradhapura | 15 | 30 | 0 | 2 | 47 |
| 3 | Badulla | 15 | 0 | 60 | 61 | 136 |
| 4 | Batticaloa | 15 | 0 | 0 | 0 | 15 |
| 5 | Colombo | 40 | 0 | 0 | 0 | 40 |
| 6 | Galle | 15 | 0 | 0 | 12 | 27 |
| 7 | Gampha | 5 | 0 | 0 | 0 | 5 |
| 8 | Hambantota | 15 | 100 | 60 | 1 | 176 |
| 9 | Jaffna | 0 | 0 | 100 | 0 | 100 |
| 10 | Kalutara | 30 | 0 | 0 | 3 | 33 |
| 11 | Kandy | 15 | 0 | 30 | 80 | 125 |
| 12 | Kegalle | 0 | 0 | 0 | 94 | 94 |
| 13 | Kilinochchi | 15 | 30 | 60 | 0 | 105 |
| 14 | Kurunegala | 30 | 30 | 0 | 0 | 60 |
| 15 | Mannar | 0 | 0 | 260 | 0 | 260 |
| 16 | Matale | 0 | 0 | 30 | 38 | 68 |
| 17 | Matara | 15 | 0 | 0 | 13 | 28 |
| 18 | Monaragala | 30 | 15 | 0 | 6 | 51 |
| 19 | Mullaittivu | 15 | 0 | 30 | 0 | 45 |
| 20 | Nuwara Eliya | 0 | 0 | 60 | 133 | 193 |
| 21 | Polonnaruwa | 15 | 30 | 0 | 8 | 53 |
| 22 | Puttalam | 15 | 0 | 260 | 0 | 275 |
| 23 | Ratnapura | 0 | 0 | 30 | 151 | 181 |
| 24 | Trincomalee | 15 | 0 | 30 | 0 | 45 |
| 25 | Vavuniya | 15 | 15 | 0 | 0 | 30 |
| | Total | 360 | 250 | 1010 | 602 | 2222 |

**தேசப்படமும் அட்டவணையும் 4: நடுத்தர கால அபிவிருத்திகளுக்கான ம.மீ.ச. வள பொருட்பதிவேட்டுப் பட்டியல்**

குறித்த சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்கள் (சிறிய நீர்வலு, காற்று சக்தி, சூரிய சக்தி மற்றும் உயிரணுத்திணிவுச் சக்தி முதலியன அடங்கலாக) தொடர்பான ஒரு முழுமையான மதிப்பாய்வும் ஒரு மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வள மதிப்பாய்வும் நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆய்வுகள் புவியல் தகவல் முறைமை (பு.த.மு.) அடிப்படையிலான இணையத்தளத்தைப் பயன்படுத்தி ஒரு மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வள பொருட்பதிவேட்டைத் தயாரிப்பதற்குப் பங்களித்தன. மேலே காணப்படும் அட்டவணை 4 நடுத்தர கால அபிவிருத்திற்கான மாவட்ட ரீதியான மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளப் பொருட்பதிவேட்டைப் பிரதிபலித்துக் காட்டுகின்றது.

**காற்று:** 2012 ஆம் ஆண்டில், காற்றுசக்திக் குறிப்பு நிலைய வலையமைப்புத் தொகுதி மேலும் இற்றைப்படுத்தப்பட்டது. தற்பொழுது 10 இத்தகைய நிலையங்கள் இயங்கி வருகின்றன. முறையே மன்னார் தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிராந்தியங்களில் காற்றுசக்தி மற்றும் சூரிய சக்தி வள மதிப்பீடுகளை மேற்கொள்ளும் பொருட்டு ஆசிய அபிவிருத்தி வங்கி (ஆ.அ.வ.) ஜேர்மனியிலுள்ள GmbH (GEO-NET) என்ற நிறுவனத்தினது ஆலோசனையில் GEO-NET Umwelt நிறுவனத்துடன் இணைந்து பங்காளித்துவ முறையில் தொழிற்படுகின்ற ரிசோஸ் மெனேஜ்மென்ட் அசோசியேற்று (ப்ரைவட்) நிறுவனத்துடன் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது. தூய சக்தி வலைப்பின்னல் வினைத் திறன் மேம்பாட்டுக் கருத்திட்டத்திற்கான (43576 - 012) TA - 7837 SRI இன் 2 பாகத்தினால் உருவாகும் சாட்டுதல் பணி இலங்கை அரசாங்கத்திற்கு (இ.அ.) ஒப்படைக்கப்பட்டது. அத்துடன் குறித்த சாட்டுதல் பணியைத் தொடருமாறு 2011 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் அறிவித்தலும் விடுக்கப்பட்டது. இந்த சாட்டுதல் பணியின் கீழ், 80 மீற்றர் உயரமான ஒரு காற்று சக்திக் கோபுரம் 2012 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இது ற்பொழுதிருக்கின்ற காற்று சக்திக் கோபுரங்களில் மிகவும் உயர்ந்த கோபுரமாகும். மேலும், பூர்வாங்க காற்று சக்தித் துறை மாதிரியில் கிடைக்கக்கூடிய உயர் வளி மேற்பரப்புக் காற்றுத் தரவுகள் பற்றிய மீளாய்வு நிறைவு செய்யப்பட்டது. குறித்த நிகழ்ச்சித்திட்டத்தில் காற்றுசக்திக் கோபுர நிறுவுகை, உத்தியோகபூர்வமாக திறந்துவைத்தல் மற்றும் அடிப்படை காற்றுசக்தி வள மதிப்பீடு என்பன தொடர்பில் நி.வ.அ.ச. பொறியிலாளர்களுக்கான பயிற்சி விடயமும் உள்ளடக்கப்பட்டிருந்தது. குறித்த சாட்டுதல் பணி நிறைவு செய்யப்பட்டவுடன் இ.நி.வ.அ. (இந்தச் சாட்டுதல் பணியின் செயற்படுத்துகை முகவர் நிலையம் என்ற வகையில்) முறையே மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலுள்ள காற்று மற்றும் சூரிய சக்தி வளங்கள் தொடர்பான நம்பத்தகுந்த ஒரு நீண்டகால தரவுத்தளத்தைக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சர்வதேச நியமங்களை அனுசரிக்கின்ற தரத்தில் உயர்ந்த காற்று மற்றும் சூரிய சக்தி மதிப்பீடுகளை ஏற்படுத்துவதற்கு தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதை நி.வ.அ.ச. உணர்ந்தது. பாரியளவான காற்று மற்றும் சூரிய சக்திக் கருத்திட்டம் தொடர்பில் சேமிக்கக்கூடிய தரவுகள் பற்றிய முற்சாத்தியவள ஆய்வுகளுக்கு நீண்டகாலத் தரவுகள் அவசியமாகும். நம்பத்தகுந்த ஒரு நீண்டகால காற்று மற்றும் சூரிய சக்தித் தரவுத்தளத்தை உருவாக்குவதற்கான தேவையும் ஒரு அவசரத் தேவையாகக் கருதப்பட்டது.



**உருப்படம் 5: நடுக்குடா 80 மீற்றர் உயரமான காற்றுக் கோபுர நிறுவுகை**

அதிகளவு சாத்தியமுடைய காற்றுப் பிரதேசங்களுக்கு நுண்-சிற்றிங் முறையை இ.நி.வ.அ.ச. தொடர்ந்தது. இதனால் அம்பாந்தோட்டைப் பகுதிக்கு பருவகால வித்தியாசத்துடன் கூடிய ஒரு உயர்ந்த உன்னத தீர்வு காற்று வரைபடத்திற்குப் பயனாக அமைந்தது. 'முதலீட்டு நிலைக்கான' ஆயத்தத்திற்காக வளங்களை மேம்படச்செய்து ஒரு கருத்திட்டப் பொறியியல் பகுப்பாய்வாளரினால் முதலீட்டுத் தர காற்று வள வரைபடங்கள் தயாரிக்கப்படும். WAsP மென்பாகத்தைப் பயன்படுத்தி மன்னார் பகுதிக்கு வழங்கப்பட்ட உன்னத தீர்வு காற்று வரைபடங்கள் நாட்டின் முதலாவது சக்திப் பேட்டை பற்றிய ஒரு முற்சாத்தியவள அறிக்கையைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டன. WAsP மாதிரி குறிப்பிடப்பட்ட அமைவிடத்திலிருந்து (காற்று அளவீட்டுக் கோபுரங்கள்) காற்று வளத் தரவுகளைப் பகுப்பாய்வு செய்து மேற்பரப்புக் கடினம், புவியியலமைப்பு, தடைகள் மற்றும் சூழல் ஸ்தீரத்தன்மை போன்ற உள்ளூர் தாக்கக் காரணிகளை சரிபடுத்துவதன் மூலம் காற்று வளங்களை மதிப்பீடு செய்யும். குறித்த முற்சாத்தியவள அறிக்கை முகாமைத்துவ சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

**நீர்வலு:** நடுத்தர மற்றும் உயர் அளவான முக்கிய வளங்களைப் பொறுத்த வரையில் நாட்டில் அபிவிருத்தி செய்யக்கூடிய நீர்வலு சக்தி சாத்தியம் ஒரு அமைவிடப் பின்னணியில் இனங்காணப் பட்டுள்ளது. இந்த அமைவிடம் சார்ந்த தரவுகள் அனுகூலமான ஒரு க்றிட் உள்ளக மின் இணைப்பு திறமுறைத்திட்டத்தின் நிமித்தம் தற்பொழுது பகுப்பாய்வு செய்யப்பட்டு வருகின்றன. மனிதன் ஏற்படுத்திக்கொண்ட நீர் காவிச்செல்லும் கட்டுமானங்களிலுள்ள சாத்தியங்கள் அடங்கலாக சாதாரண வளங்கள் அதிக நில அடிப்படையான ஒரு அணுகுமுறையைத் தேவைப்படுத்தும்.

**உயிரணுத்திணிவுச் சக்தி:** கிடைக்கக்கூடிய நிலப் பாவனைத் தரவுகளின் அடிப்படையில் உயிரணுத்திணிவுச் சக்தி வளங்கள் பற்றிய விரிவான ஒரு பகுப்பாய்வு முன்னெடுக்கப்பட்டது. இரத்தினபுரி மாவட்டத்தில் காணப்படும் வள சாத்திய மதிப்பீடு நிறைவு பெறும்

கட்டத்திலுள்ளது. அக்கறையுடைய தரப்பு ஆலோசனை, நில உறுதிப்பாடு ஆகிய விடயங்கள் ஆராயப்பட்டதன் பின்னரான இந்த அணுகுமுறையானது இந்த அணுகுமுறை முழு நாடும் உள்ளடங்கும் வகையில் விரிவுபடுத்தப்படும். உயிரணுத்திணிவுச் சக்தி வள மதிப்பீடு பற்றிய ஒரு தேசிய முறையியல் ஒரு ஜப்பான் தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒரு உசாவுநரின் மூலம் வகுத்தமைக்கப் பட்டது.

**சூரிய சக்தி:** கிடைக்கக்கூடிய சூரிய சக்தி தொடர்பான தரவுகளை மேலும் துருவி ஆராய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்பு 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முற்சாத்தியவள மட்ட மதிப்பீடுகளுக்குப் பொருத்தமான சிறந்த ஒரு தீர்வு சூரிய சக்தி வரைபடத்திற்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அம்பாந்தோட்டை சூரிய சக்திப் பேட்டையில் அமைந்துள்ள அளவீட்டு நிலையத்தில் பெறப்பட்ட தரத்தில் உயர்ந்த சூரிய சக்தி வளத் தரவுகள் சூரிய சக்தி அபிவிருத்தி முயற்சியில் புதிய அறிவை சேர்ப்பதற்குத் தொடர்ந்து உதவியாக அமைந்தது. ஆ.அ.வ. தொழில் நுட்ப உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட தரத்தில் உயர்ந்த சூரிய சக்தி வள அளவீட்டு கருவி சாதனங்களைப் பயன்படுத்தி இது யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் மீண்டும் மேற்கொள்ளப்படும். அம்பாந்தோட்டை சூரிய சக்திப் பேட்டை 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்கலைக்கழகங்களிலிருந்து 900 எண்ணிக்கைக்கும் அதிகமான பெண் மாணவிகளையும் ஆராய்ச்சியாளர்களையும் ஈர்த்துள்ளது.



**உருப்படம் 6: அம்பாந்தோட்டை சூரிய சக்திப் பொறித்தொகுதி**

**புவி வெப்பம் -** புவி வெப்ப வளங்கள் தொடர்பான மேலதிக ஆய்வுகளுக்கு நி.வ.அ.ச. கவனத்தைச் செலுத்தியுள்ளது. மிகவும் விரிவான ஒரு வள மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்தை எதிர்பார்க்கும் ஒரு அறிக்கையும் தயாரிக்கப்பட்டது. ஐஸ்லாந்து ஐக்கிய நாடுகள் பல்கலைக்கழகத்திலிருந்து புவி வெப்ப சக்தி அபிவிருத்தி தொடர்பில் நி.வ.அ.ச. ஒரு ஊழியருக்கு முழுமையான ஒரு பயிற்சி வழங்கப்பட்டதன் மூலம் இந்த முயற்சிக்கு ஆதரவு அளிக்கப்பட்டது. நாட்டின் புவி வெப்ப வளங்கள் தொடர்பில் கிடைக்கக்கூடிய 10 சுடுநீர்கள் பரிமாண மதிப்பீட்டுப் பகுப்பாய்வு அடிப்படையில் குறித்த அறிக்கை அமைந்து காணப்படுகின்றது. நி.வ.அ.ச. தற்பொழுது புவி வெப்ப வளங்களின் அதிக விரிவான மதிப்பீட்டிற்கான ஒரு கருத்திட்டப் பிரேரணையைத் தயாரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.


## சக்தி அபிவிருத்திப் பிரதேசங்கள் பிரகடனம்

இன்று வரை நீர்வலு, காற்று மற்றும் சூரிய சக்தி வளங்கள் என்பவற்றை உள்ளடக்கி நாட்டில் பல இடங்களில் அதிகமான சக்தி அபிவிருத்திப் பிரதேசங்கள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. நீண்ட கால காற்றுத் தரவுப் பகுப்பாய்வு மற்றும் நிகழ்ந்து வரும் உயிரணுத்திணிவுச் சக்தி வள மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றிலிருந்து இது மேலும் துருவி ஆராயப்படவுள்ளது.

## புதிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்திக் கருத்திட்டங்கள்

முதலாவது சிறிய சக்தி உற்பத்தி (சி.ச.உ.) நீர்வலுப் பொறித்தொகுதி 1996 ஆம் ஆண்டு காலப் பகுதியில் உத்தியோகபூர்வ ரீதியில் திறந்துவைக்கப்பட்டதை தொடர்ந்து பு.மீ.ச. அபிவிருத்திக் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. எனினும், பு.மீ.ச. அபிவிருத்தியானது எதிர்பார்க்கப்பட்டவாறு துரித வழியில் முன்னேற்றத்தை அடையவில்லை. ஆனாலும் ஆண்டொன்றுக்கு சராசரியாக 0.5% மேலதிகக் கொள்திறன் அதிகரிப்புடன் இது தேங்கிக் கிடந்தது. நி.வ.அ.ச. தாபிப்பானது வள ஒதுக்கீட்டு நடபடிமுறையை நெறிப்படுத்தியதுடன் பு.மீ.ச. அபிவிருத்தியைத் துரிதப்படுத்தியது.

வரைபு 7:- 1996 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான பு.மீ.ச. வள சி.ச.உ. எண்ணிக்கையையும் திறந்த சக்திக் கொள்திறன் சேர்வையும் விவரிக்கின்றது.




**வரைபு 7: பு.மீ.ச. வள சி.ச.உ. மற்றும் திரண்ட சக்திக் கொள்திறன் சேர்வு**

அட்டவணை 1, 2 ஆகியன பு.மீ.ச. கைத்தொழில் மூலம் அடையப்பட்ட முன்னேற்றத்தை விபரிக்கின்றன.

**அட்டவணை 1: வள மூலத்திலிருந்து க்றிட் மின்சார முறைமைக்கு இணைக்கப்பட்ட மின்சக்தி உற்பத்திப் பொறித்தொகுதிகளின் மொத்த நிலையான சக்திக் கொள்திறன்**


| நிலையான சக்திக் கொள்திறன் (மெ.வொ.) | 2000 | 2005 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|---|
| நீர்வலு | 1,137.45 | 1,207.45 | 1,207.45 | 1,207.45 | 1,207.45 | 1,357.45 |
| அனல் சக்தி | 685.00 | 1,114.50 | 1,304.50 | 1,389.50 | 1,689.50 | 1,695.30 |
| இ.மி.ச. காற்று சக்தி | 3.00 | 3.00 | 3.00 | 3.00 | 3.00 | 3.00 |
| பு.மீ.ச. | 12.75 | 85.81 | 182.23 | 217.63 | 240.72 | 312.22 |
| **மொத்தம்** | 1,838.20 | 2,410.76 | 2,697.18 | 2,817.58 | 3,140.67 | 3,367.97 |
| **நிலையான சக்திக் கொள்திறன் (%)** | **2000** | **2005** | **2009** | **2010** | **2011** | **2012** |
| நீர்வலு | 61.88 | 50.09 | 44.77 | 42.85 | 38.45 | 40.30 |
| அனல் சக்தி | 37.26 | 46.23 | 48.37 | 49.32 | 53.79 | 50.34 |
| இ.மி.ச. காற்று சக்தி | 0.16 | 0.12 | 0.11 | 0.11 | 0.10 | 0.09 |
| பு.மீ.ச. | 0.69 | 3.56 | 6.76 | 7.72 | 7.66 | 9.27 |

**அட்டவணை 2: சக்தி வள மூலத்திருந்து க்றிட் மின்சார முறைமைக்கு இணைக்கப்பட்ட மின்சக்தி பொறித்தொகுதிகளின் முழுமொத்த ஆண்டு மின்சார உற்பத்தி**

| முழுமொத்த மின்னுற்பத்தி (ஜி.வொ.ம.) | 2000 | 2005 | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|---|
| நீர்வலு | 2,812.8 | 3,222.5 | 3,355.6 | 4,988.5 | 4,017.7 | 2,726.7 |
| அனல் சக்தி | 3,512.4 | 5,339.3 | 6,062.5 | 5,063.3 | 6,895.7 | 8,416.5 |
| இ.மி.ச. காற்று சக்தி | 3.4 | 2.4 | 3.5 | 3.0 | 2.7 | 2.3 |
| பு.மீ.ச. | 43.3 | 279.7 | 548.5 | 728.5 | 722.3 | 733.3 |
| **மொத்தம்** | **6,371.8** | **8,844.0** | **9,970.1** | **10,783.2** | **11,638.2** | **11,878.8** |
| **முழுமொத்த மின்னுற்பத்தி (%)** | **2000** | **2005** | **2009** | **2010** | **2011** | **2012** |
| நீர்வலு | 44.1 | 36.4 | 33.7 | 46.3 | 34.5 | 23.0 |
| அனல் சக்தி | 55.1 | 60.4 | 60.8 | 47.0 | 50.3 | 59.0 |
| இ.மி.ச. காற்று சக்தி | 0.05 | 0.03 | 0.04 | 0.03 | 0.02 | 0.02 |
| பு.மீ.ச. | 0.7 | 3.2 | 5.5 | 6.8 | 6.2 | 6.2 |

முழுமொத்த க்றிட் மின்சார உற்பத்திற்கான பு.மீ.ச. பங்களிப்பு 2012 ஆம் ஆண்டு 6.2% வீதமாக இருந்தது. நிலையான சக்திக் கொள்திறன் இருந்தும் கூட சிறிய நீர்வலு உற்பத்தியில் ஒரு வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் நிலவிய நீண்டகால வரட்சி இதற்கான முக்கிய பு.மீ.ச. காரணியாக அமைந்தது.

வரைபு 7:- 1996 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை துணை வகுதி பு.மீ.ச. வளங்களில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட மின்சக்தி அளவு பற்றிய விபரங்களை எடுத்துக்காட்டுகின்றது.




**வரைபு 8: துணை வகுதி பு.மீ.ச. வளங்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட மின்சக்தி**

பு.மீ.ச. வகுதி சார்ந்த கருத்திட்டங்கள் 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. சிறிய நீர்வலு, உயிரணுத்திணிவுச் சக்தி (தாவர சக்தி, மா.தி.க. மற்றும் கழிவுப்பொருள் மூல சக்தி) மற்றும் சூரிய சக்தி என்பன இந்தக் கருத்திட்டங்களில் உள்ளடங்குகின்றன. 2012 ஆம் ஆண்டு இறுதியளவில் வித்தியாசமான கட்டங்களில் காணப்பட்ட அந்தந்த தொழில்நுட்பங்கள் மற்றும் அபிவிருத்திகள் என்பவற்றின் எண்ணிக்கையும் சக்திக் கொள்திறன்களும் பற்றிய விபரங்கள் அட்டவணையில் 03 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 3: தொழில்நுட்ப ரீதியில் பல கட்டங்களிலும் காணப்பட்ட அபிவிருத்தியின் சக்திக் கொள்திறன்கள் மற்றும் மின்பொறித் தொகுதிகள் என்பவற்றின் எண்ணிக்கை**

| தொழில்நுட்பம் / நிலை | உயிரணுத் திணிவுச் சக்தி | | சிறிய நீர்வலு | | காற்றுமூல சக்தி | | சூரிய சக்தி மற்றும் ஏனையவை | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எ.கை. | மெ. வொ. | எ.கை. | மெ. வொ. | எ. கை. | மெ. வொ. | எ.கை . | மெ.வொ. | எ. கை. | மெ. வொ . |
| தற்காலிக அங்கீகாரங்கள் | 4 | 17.6 | 42 | 63.4 | 1 | 10 | 8 | 62.3 | 55 | 153.3 |
| நிர்மாணத்தின் கீழுள்ளவை | 17 | 84.8 | 94 | 190.0 | 4 | 21.3 | - | - | 115 | 296.1 |
| ஆரம்பிக்கப்பட்டவை | 2 | 10.5 | 107 | 227.3 | 9 | 73.0 | 4 | 1.38 | 122 | 312.2 |

இலங்கையில் இது வரை அதிகளவில் அபிவிருத்தியடைந்துள்ள சக்தி வளம் யாதெனில் சிறிய நீர்வலுவாகும். தற்பொழுது, க்றிட் மின்சார உற்பத்தித் துறைக்கான இதன் பங்களிப்பானது தனியே 2012 ஆம் ஆண்டு இறுதியளவில் 207 மின்னுற்பத்திப் பொறித்தொகுதிகளிலிருந்து உற்பத்தியாகும் 227.3 மெ.வொ. சக்தியைக் கொண்டு காணப்படுகின்றது. 2012 ஆம் ஆண்டு வரை ஏனைய தொழில் நுட்பங்களிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை சேர்ந்த திரண்ட சக்திக் கொள்திறனில் காற்றுமூல சக்தி வளத்திலிருந்து வரும் 73.0 மெ.வொ. மின்சக்தியும், உயிரணுத்திணிவுச் சக்தியிலிருந்து வரும் 10.5 மெ.வொ. மின்சக்தியும், சூரிய சக்தியிலிருந்து வரும் 1.4 மெ.வொ. மின்சக்தியும் அடங்கும்.

இலங்கை வாவிங் (ப்ரைவட்) லிமிற்றட் மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்திக்கான டென்மார்க் நோர்டிக் பொல்கிசென்டெர் ஆகியன சம்பந்தப்படும் தொழில்நுட்ப அபிவிருத்தி முயற்சியானது இலங்கையில் காற்று டேர்பைன்கள் வெற்றிகரமான முறையில் இயங்கி பயனளித்ததை சுட்டிக் காட்டியது (வரபு 8 ஐ பார்க்கவும்). இலங்கையில் முதல் முதலாக உற்பத்தியாகிய க்றிட் மின்சார அளவு காற்றுமூல சக்தி டேர்பைன்களைப் பூர்த்தி செய்யும் பொருட்டு மிக முக்கியமான தொழில்


நுட்பங்களை ஒன்றிணைப்பதில் தற்பொழுது அயராத முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த முன்னெடுப்பானது தற்பொழுதுள்ள ஆகுசெலவுக் கட்டமைப்புகளில் காணப் படும் காற்றுமூல சக்தி ஆகுசெலவை இ.ரூ.17.00/கி.வொ.ம. என்ற அளவுக்குக் குறைக்க உதவும். இது சராசரி மின்சார விற்பனை விலையை பார்க்கிலும் அதிகமாகவிருந்தாலும் உள்ளூர் பெறுமான சேர்வு, தொழில் உருவாக்கம் மற்றும் திறன்கள் அபிவிருத்தி என்பவற்றுக்கான புதிய வழிமுறைகள் மற்றும் இலங்கையில் செல்வம் உருவாகுவதற்கான வழிமுறை ஆகியவற்றுக்கு வழிவகுக்கின்றது.



**உருப்படம் 9: உள்நாட்டு காற்றுமூல சக்தி டேர்பைன் பிளேட்டுக்கள் உற்பத்தி**

இந்துரான சிறிய நீர்வலு உற்பத்திக் கருத்திட்டம் 2012 ஆம் ஆண்டு உத்தியோகபூர்மாகத் திறந்து வைக்கப்பட்டது. இந்தக் கருத்திட்டத்திலிருந்து வருடாந்தம் தேசிய க்றிட் மின்சார முறைமைக்கு 0.22 கி.வொ.ம. மின்சாரம் சேரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. குறித்த இந்த கருத்திட்டத்திலிருந்து கிடைக்கும் வருமானம் பாடசாலை மாணவர்களுக்கும் பொது மக்களுக்குமான சிறிய நீர்வலு தொழில்நுட்பத்தை செய்துகாண்பிக்கின்ற ஒரு சுய நிலைப்படுத்தப்பட்ட அறிவு நிலையமாக கருத் திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்படும். குறித்த நிலையமானது மின்னுற்பத்திப் பொறித்தொகுதியின் இயக்கம் மற்றும் பராமரிப்பு என்பவற்றின் மீது விஷேட கவனத்தைச் செலுத்தி இலங்கை மற்றும் தெற்காசியப் பிராந்திய நாடுகளிலிருந்து வரும் பல்கலைக்கழக மாணவர்களையும் நிபுணர்களையும் இலக்காகக் கொண்டு ஒரு பயிற்சி நிலையமாகத் தொழிற்படுகின்ற அதே நேரம் சுற்றாடல் நேய சக்தி உற்பத்தித் தெரிவுகளையும் மேம்படுத்தச் செய்யும். இந்த மின்னுற்பத்திப் பொறித்தொகுதியானது முற்றிலும் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட குறைந்த உயர் அளவான ஒரு குறுக்குப் பாய்ச்சல் டேர்பைனைப் பயன்படுத்தும்.

**உருப்படம் 10:-** நிர்மாண மற்றும் நிறுவுகை காலப்பகுதிகளில் மின்னுற்பத்திப் பொறித்தொகுதியின் சில ஆக்கக்கூறுகளைக் காட்டுகின்றது.

\




**உருப்படம் 10: நீர்மார்க்கமும் உள்நாட்டு ரீதியில் உற்பத்தி செய்யப்பட்ட நீர்வலு டேர்பைனும்**

## தோட்டப் பகுதி நீர்வலு மின்னுற்பத்திப் பொறித்தொகுதிகளுக்கு மீண்டும் சக்தியூட்டுதல்

தோட்டப் பகுதி சிறிய நீர்வலு மின்னுற்பத்திப் பொறித்தொகுதிகளுக்கு மீண்டும் சக்தியூட்டுகின்ற முன்னோடிக் கருத்திட்டமே நி.வ.அ.ச. முதலாவது கருத்திட்டமாக விளங்குகின்றது. இந்தக் கருத் திட்டத்திற்கு ஒரு அபிவிருத்திப் பங்காளித் தரப்பினால் நிதியளிக்கப்படும். ஆ.அ.வ. இந்தக் கருத் திட்டத்திற்கு 1.29 மில்லியன் அ.டொ. நிதியை வழங்குவதாக உறுதியளித்துள்ளது. இது ஏறக்குறைய தோட்டப் பகுதியிலுள்ள 20 நீர்வலு உற்பத்திக் கருத்திட்டங்களுக்கு மீண்டும் சக்தியூட்டுவதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளும். நி.வ.அ.ச. கடன் திட்டத்தைச் செயற்படுத்தும் முகமாக ஒரு சக்திச் சேவைகள் கம்பனி (ச.சே.க.) மற்றும் பங்களிக்கும் நிதி நிறுவனங்கள் (ப.நி.நி.) என்பவற்றுடன் ஒரு பங்காளித்துவ உடன்படிக்கையைச் செய்துகொள்ளும். குறித்த கருத்திட்டமானது உசாவுநர்கள், ப.நி.நி மற்றும் ச.சே.க. போன்ற தரப்புகளைத் தேர்ந்தெடுக்கும் நடபடிக்கையிலுள்ளது.

### மீளப்புதுப்பிக்கத்தகு சக்திக் கருத்திட்டங்களுக்கான தரவுத்தளம்

நி.வ.அ.ச. மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பான அதிகளவான விண்ணப்பங்களை படிமுறைப்படுத்துகின்றது. இந்த விண்ணப்பங்கள் வித்தியாசமான அங்கீகாரக் கட்டங்களில் காணப்படுகின்ற அதே வேளை பல வெளிக்கள அங்கீகார அதிகார சபைகளினால் படிமுறைப்படுத்தப்பட்டும் வருகின்றன. அங்கீகாரமளிக்கின்ற சகல அதிகார சபைகளுக்கும் இலவச தகவல் பிரவேசத்தைப் அடையக்கூடிய வகையில் இணையத்தள அடிப்படையில் பொதுவான ஒரு தளத்திற்கு அங்கீகாரப் படிமுறையைக் கொண்டுவரும் நிமித்தம் நி.வ.அ.ச. ஒரு கருத்திட்டத்தை வகுத்தமைத்தது. இந்தத் தளமானது பணி சுமுகத்தை இலகுபடுத்தி கருத்திட்ட ஆக்குநர் தரப்புகள், அங்கீகாரத்தை வழங்கும் அதிகார சபைகள் முதலிய தரப்புகளுக்கு தானியக்க ரீதியான நிலை இற்றைப்படுத்தல்களைப் பெற்றுக்கொடுத்து, கருத்திட்ட அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதற்கும் உதவியாக அமையும்.

### கிராமிய சக்திச் சேவைகள்

மின்சார வசதியற்ற மக்களுக்கு ஓப்-க்றிட் மின்சார வசதியை வழங்குவதற்கான மேம்பட்ட சக்திச் சேவைகளைப் பெற்றுக்கொடுத்தல் தொடர்பான 'கிராமசக்தி' என்ற தலைப்பில் ஒரு சக்தி வசதி நிகழ்ச்சித்திட்டத்தை நி.வ.அ.ச. வகுத்தமைத்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் கீழ், 115 குடும்பங்களுக்கு மின்சார வசதியை வழங்குகின்ற 63 kW சக்திக் கொள்திறனுடைய ஒரு சிறிய நீர்வலுக் கருத்திட்டம், இரண்டு பாடசாலைகள், ஒரு கிராமிய வைத்தியசாலை, ஒரு சமுர்த்தி வங்கி என்பன 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் புனரமைக்கப்பட்டன. இலங்கையில் மிகவும் பின்தங்கிய கிராமங்களில் ஒன்றான மீமுரே எனுமிடத்தில் ஒரு கிராம உத்தியோகத்தர் அலுவலகம் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. நி.வ.அ.வ. மின்சார செலுத்துகை மற்றும் மின்சாரப் பகிர்ந்தளிப்பு ஆகியவற்றின் வலையமைப்பு நிர்மாணம் தொடர்பில் 6 மில்லியன் இலங்கை ரூபா செலவைப் பொறுப்பேற்றது. இது தவிர, சிறிய நீர்வலு மற்றும் சூரிய சக்தி இல்ல மின் சக்தி முறைமைகள் என்பவற்றினூடாக மீமுரேயை அண்மித்த பகுதியிலுள்ள ஏறக்குறைய 10 இற்கும் அதிகமான கிராமங்களுக்கு மின்சார வசதி அளிக்கப்படவுள்ளது.



**உருப்படம் 11: ஓப்-க்றிட் மின்சார வசதியளித்தல் கருத்திட்டம் - மீமுரே**

### கிராமங்களிலுள்ள குடும்பங்களுக்கு சமையல் அடுப்புக்களைப் பகிர்ந்தளித்தல்

நி.வ.அ.ச. 1,000 வறிய குடும்பங்களுக்கு மேம்பட்ட சமையல் அடுப்புக்களை வழங்கி யுத்தத்தின் மூலம் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தின் மீள்நிர்மாண முயற்சிக்குப் பங்களித்தது. அனகி -2 இரண்டு பானை வைக்கக்கூடிய களி மண் அடுப்பு வகை பகிர்ந்தளிக்கப்பட்டது. இந்த அடுப்பே இலங்கையில் வடிவமைக்கப்பட்ட மிகவும் மேம்பட்ட பிரபல்லியமடைந்த சமையல் அடுப்பாகும். இந்த அடுப்பில் காணப்படும் மேம்பட்ட உள்ளக வளித் தரம் மற்றும் குறைந்தளவான எரிவிறகு நுகர்வு என்பன இந்த வறிய குடும்பங்களின் சிறந்த வாழ்க்கைத் தரங்களுக்கும் மற்றும் மேம்பட்ட பொருளாதார நிலைமைகளுக்கும் பங்களிப்புச் செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றன.



**உருப்படம் 12: மேம்பட்ட சமையல் அடுப்புக்கள் பகிர்ந்தளிப்பு - கிழக்கு மாகாணம்**

## மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடிய வகையில் மத்திய சுற்றாடல் அதிகார சபையினதும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினதும் அலுவலர்களுக்கு வசதியளிக்கும் முகமாக நி.வ.அ.ச. மீளப்புதுபபிக்கத்தகு சக்திக் குழு விழிப்புணர்வு சார்ந்த இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது. இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களும் முறையே 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15-16 ஆம் திகதிகளிலும் 2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 28-29 ஆம் திகதிகளிலும் நடத்தப்பட்டன. மீளப் புதுப்பிக்கத்தகு சக்திக் கருத்திட்டங்களை மேற்கொள்வதற்கான அங்கீகாரங்களை வழங்குகின்ற நடபடிமுறையில் சம்பந்தப்படுகின்றதும் அந்தக் கருத்திட்டங்களில் ஈடுபடுகின்றதுமான மேற்குறித்த முகவர்நிலையங்களின் அலுவலர்களே இந்த இரண்டு நிகழ்ச்சித்திட்டங்களினதும் ஆரம்ப இலக்குக் குழுவாக இருந்தனர்.

- மீளப்புதுப்பிக்கத்தகு சக்தியை அபிவிருத்தி செய்வதற்கான அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் இலக்குகள், சக்தி ஒதுக்கீட்டு நடபடிமுறை, சக்தி அபிவிருத்திப் பிரதேசங்களைப் பிரகடனப்படுத்தல், பு.மீ.ச. கருத்திட்டங்களை க்றிட் மின்சார முறைமைக்கு இணைத்தல் என்பன பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
- அங்கீகார நடபடிமுறையிலுள்ள நிரல் முகவர்நிலையங்களின் அலுவலர்களினதும் மற்றும் கருத்திட்டத்தை அங்கீகரிக்கின்ற குழுவினதும் பொறுப்புக்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
- உள்ளடக்கப்படாத பிரதேசங்களுக்கு அண்மித்த பகுதியில் அமையும் கருத்திட்டங்களுக்கான அங்கீகாரங்களை வழங்குவதில் காணப்படுகின்ற திட்டமிடல் விடயங்களையும் சாத்தியமான தீர்வுகளையும் பற்றி ஆராய்ந்து முரண்பாட்டைத் தீர்த்துவைப்பதற்கான PAC பிரதிநிதிகள் அடங்கிய ஒரு குழுவைத் தாபித்தல்

என்பன குறித்த வேலையரங்கின் குறிக்கோள்களாக அமைந்தன.

'மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அபிவிருத்தியில் வள ஒதுக்கீட்டை இயலச்செய்து உதவுதல்' எனும் தலைப்பில் மேற்கறித்த நோக்கங்களுக்காக ஒரு விஷேட ஊக்குவிப்பு சிறு கைந்நூலும் தயாரிக்கப் பட்டது.

## சக்தித் தகவல் முகாமைத்துவம்

சக்தி தொடர்பான கணக்குகளை அமைச்சரினால் பாராளுமன்றத்திற்கு குறித்த சட்டத்தின் 42 ஆம் பிரிவின் மூலம் குறிப்பீடு செய்யப்பட்டவாறு சமர்ப்பிப்பது கட்டாயமான ஒரு கடமையாகும். இறுதி இலங்கை சக்திச் சமநிலை (2007) ஆவணம் 2009 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டது. எனினும், தடையை நீக்குவதற்கும் அதே நேரம் 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளின் இலங்கைச் சக்தி ஆவணங்களைப் பிரசுரிப்பதற்கும் 2012 ஆம் ஆண்டில் அயராத ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. 2008 ஆம் ஆண்டிற்கான இந்த ஆவணத்தின் வெளியீடு 2012 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் அச்சிடப்பட்டது. எஞ்சிய மூன்று வெளியீடுகளும் 2012 ஆம் ஆண்டு இறுதியளவில் நிறைவு செய்யப்பட்டன (உருப்படம் 13 ஐ பார்க்கவும்).





**உருப்படம் 13: இலங்கைச் சக்திச் சமநிலை வெளியீடுகள்**

தேசிய மட்டத்தில் தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் முறையியல்களை மேம்படுத்தும் முகமாக நி.வ.அ.ச. முகாமைத்துவ சபையின் மூலம் நான்கு ஆலோசனைக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. முறையே சக்திச் சமநிலை மற்றும் பெற்றோலியத் துறை என்பவற்றுக்கான இரண்டு ஆலோசனைக் குழுக்கள் 2012 ஆம் ஆண்டு முற்பகுதியில் கூடியது. அந்தக் குழுக்களின் சிபாரிசுகள் 2011 ஆம் ஆண்டின் இலங்கை சக்திச் சமநிலை ஆவணத்தில் கூட்டிணைக்கப்பட்டுள்ளன.

சக்திக் கேள்விப் (MAED) பகுப்பாய்வுக்கான மாதிரியைப் பயன்படுத்தி நாட்டின் சக்தித் தேவையை எதிர்வுகூறுவதற்கு நி.வ.அ.ச. திட்டமிட்டு வருகின்றது. சர்வதேச அணுசக்தி அதிகார சபையின் உதவியைக் கொண்டு இலங்கை அணுசக்தி அதிகார சபை, இலங்கை மின்சார சபை ஆகியவற்றின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19-30 ஆம் திகதி வரை நடைபெற்ற வேலையரங்கில் குறித்த மாதிரியைப் பயன்படுத்துவது பற்றி நி.வ.அ.ச. இரண்டு அலுவலர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. தரவுகள் சேகரித்தல் விடயம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. குறித்த சிறப்புப்பணியை முன்னெடுத்துச்செல்லும் பொருட்டு ஒரு செயற்குழுவை உருவாக்குவதற்கு எதிர்-பார்க்கப்படுகின்றது.

தேசிய சக்திக் கணக்கை மதிக்கும் பொருட்டு விஷேடமான ஒரு இணையத்தள மைய வசதித் தரவு விண்ணப்ப மாதிரி 2012 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதத்தில் ஆக்கப்பட்டு மின்வலு சக்தி அமைச்சர் மூலம் ஆரம்பித்து வைக்கப்பட்டது (உருப்படம் 14 ஐ பார்க்கவும்). 1970 ஆம் ஆண்டு முதல் இன்று வரையான சக்தித் தகவல்களை வழங்கும் www.info.energy.gov.lk என்ற இணையத்தள வசதிகள் தற்பொழுது கிடைக்கக்கூடியதாகவுள்ளன.




**Generation Sri Lanka (GWh)**

| | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|---|
| Hydro, CEB and SPP | 3,450.4 | 4,634.0 | 3,946.9 | 4,129.4 | 3,881.1 | 5,634.5 |
| Thermal, CEB, IPP and Hired | 5,339.3 | 4,805.1 | 5,894.6 | 5,848.8 | 6,062.5 | 5,063.3 |
| Non-Conventional, CEB | 2.4 | 2.3 | 2.3 | 3.2 | 3.5 | 3.0 |
| Self-Generation By Customers | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| Off-Grid, Conventional | 78.5 | 78.5 | 78.5 | 0.0 | 0.0 | 0.0 |
| Off-Grid, Non-Conventional | 13.7 | 14.7 | 15.6 | 16.2 | 16.8 | 17.5 |
| Gross Generation Sri Lanka | 8,884.4 | 9,534.6 | 9,937.9 | 9,997.6 | 9,963.9 | 10,718.3 |


**Total Losses in Sri Lanka**

| | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|---|
| T&D Loss (GWh) | 1,553.2 | 1,560.7 | 1,530.6 | 1,469.4 | 1,431.4 | 1,486.9 |
| Power Plant Own Use (GWh) | 91.7 | 118.0 | 147.1 | 168.2 | 166.9 | 106.9 |
| Total Own Use and Loss (GWh) | 1,644.9 | 1,678.6 | 1,677.7 | 1,637.6 | 1,598.3 | 1,593.8 |
| Total Own Use and Loss (% of Gross Gen) | 18.7 | 17.8 | 17.0 | 16.4 | 16.0 | 14.8 |

**உருப்படம் 14: இணையத்தளத்திலுள்ள தேசிய சக்தி தொடர்பான கணக்கு**


### சுற்றாடல் தாக்கங்கள் மற்றும் கருத்திட்டத்திற்குப் பிற்பட்டகாலத் தாக்கங்கள் பற்றிய ஆய்வுகள்

க்றிட் மின்சார முறைமைக்கு இணைக்கப்பட்ட மின்னுற்பத்திப் பொறித்தொகுதிகளிலிருந்து வரும் $CO_2$ வெளியீடுகளை மதிப்பிடும் பொருட்டு நி.வ.அ.ச. 2008, 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்கான க்றிட் மின்சார முறைமை வெளியீட்டுக் காரணிகளை (GEF) கணிப்பீடு செய்தது. இதனைத் தொடர்ந்து IPCC முறையியல் http://cdm.unfccc.int/methodologies/ PAmethodologies/ tools/am-tool-07-v2.pdf. என்ற GEF இல் கிடைக்கக்கூடியதாகவுள்ளது. இது பற்றிய தகவல்கள் 2011 ஆம் ஆண்டிற்கான சக்திச் சமநிலை ஆவணத்தின் ஒரு விஷேட அத்தியாயத்தில் முதல் முறையாக வெளியிடப்பட்டன. UNFCCC CDM நிறைவேற்று அதிகார சபையின் 35வது குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், பெயர்குறிக்கப்பட்ட தேசிய அதிகார சபை (DNA) மின்சார முறைமைக்கான GEF ஐ வெளியிடும். சுற்றாடல் மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வள அமைச்சுதான் இலங்கையின் DNA ஆகும். நி.வ.அ.ச. GEF ஐ கணிப்பிட்டு வெளியிடும் பொறுப்புப் பணியை ஏற்றுக்கொண்டுள்ளது. வரைபு 15: 2008 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை மதிப்பீடு செய்யப்பட்ட GEFs ஐ பிரதிபலித்துக் காட்டுகின்றது. 2011 ஆம் ஆண்டில் காணப்பட்ட GEFs கள் அதிகரிப்பானது 2011 ஆம் ஆண்டில் நீடித்த வரட்சியின் விளைவாக நீர்வலு உற்பத்தியிலிருந்து வருகின்ற குறைந்தளவு பங்களிப்புக்குக் காரணமாக அமைந்தது.




**வரைபு 15: இலங்கையிலுள்ள GEFs**

நி.வ.அ.ச. இயங்கும் சிறிய நீர்வலு கருத்திட்டங்கள் தொடர்பில் கருத்திட்டத்திற்குப் பிற்பட்டகால தாக்கங்கள் பற்றிய இரண்டு மதிப்பு ஆய்வுகளை வகுத்தமைத்தது. சக்தி அனுமதி (ச.அ) தொடர்பான நிபந்தனைகள் அடங்கலாக கருத்திட்டத்தின் இயக்கச்செயற்பாட்டை அதாவது குறிப்பாக சுற்றாடல் தாக்கங்களை மதிப்பிடுவது இவற்றில் முதலாவது கருத்திட்டமாகும். ஏற்கெனவேயிருக்கின்ற கருத் திட்டங்களின் தொழில்நுட்ப அம்சங்கள் மற்றும் இற்றைப்படுத்தல் தெரிவுகள் என்பன பற்றி ஆய்வு செய்வது அடுத்த கருத்திட்டமாகும். சுற்றாடல் சார்ந்த நியமங்களை வகுத்தமைப்பதற்கான கருத் திட்டத்திற்குப் பிற்பட்டகால உண்மையான நிலைகள் பற்றிய சிறந்த தகவல்களை வழங்குவதன் மூலம் புதிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்தியை ஊக்குவிக்கும் வகையில் பங்களிப்புச் செய்வது சுற்றாடல் தாக்கப் பிற்பட்ட மதிப்பீட்டு ஆய்வின் குறிக்கோளாகும். இந்த ஆய்வு தொடர்பான நகல் நியதிக் குறிப்புகள் (நி.கு.) மற்றும் கேள்வி ஆவணங்கள் என்பன தயாரிக்கப்பட்டுள்ளன. தற்போது, குறித்த ஆய்வை மேற்கொள்ளும் முகமாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் (ம.சு.அ.ச.) கூட்டு ஒத்துழைப்பில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன. தொழில்நுட்ப விடயங்களை உள்ளடக்கிய கருத்திட்ட ஆக்கக்கூறு நீர்வலு வினைத்திறன் உறுதிப்பாடு மற்றும் க்றிட் மின்சார முறைமைக்கு வழங்கப்பட்ட சக்தி அளவு உறுதிப்பாடு என்பன போன்ற எதிர்பார்க்கப்பட்ட பலன்கள் அடையப்பட்டனவா என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளும் பொருட்டு நிலையான சிறிய நீர்வலு கருத்திட்டங்களின் கருத்திட்டத்திற்குப் பிற்பட்டகால தொழில்நுட்ப சாத்தியத்தை மதிப்பிடுவதில் ஒருமுகப்பட்டுக் காணப்பட்டது. வித்தியாசமான சக்திக் கொள்திறன் அளவுகளிலிருந்து 6 மின் உற்பத்திப் பொறித்தொகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. குறித்த குழுவானது சிறிய நீர்வலு மின் உற்பத்திப் பொறித்தொகுதிகளின் சிறந்த செயல்திறன் பற்றி சேகரிக்கப்பட்ட தரவுப் பகுப்பாய்வின் பின்னர் மின்னுற்பத்திப் பொறித்தொகுதிகளை சோதனையிட்டு சிபாரிசுகளை முன்வைக்கும்.



**உருப்படம் 16: ஒரு சிறிய நீர்வலு மின்னுற்பத்திப் பொறித்தொகுதியின் செயல்திறன் மதிப்பீட்டு காலத்திலான மின்னொழுக்கு அளவீடு**

## இலங்கை நிலைபெறுதகு சக்தி நிதியம்

மீளப்புதுப்பிக்கத்தகு சக்திக் கருத்திட்டங்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரிவுக்கான காசுப்பாய்ச்சல் தொடர்பான தேவைப்பாடுகள் கணிப்பிடப்பட்டன. இந்தத் தேவைப்பாடு தொடர்பில் நிதியிடுகின்ற சாத்தியமான இரண்டு மூலங்கள் அதாவது (1) கணிய எண்ணெய் இறக்குமதி மீது செஸ் வரியை விதித்தல் மற்றும் (2) பாரிய நீர்வலு உற்பத்திக் கருத்திட்டங்களிலிருந்து வரும் அரச கட்டண மைய ஒரு வருமான ஈட்டலைக் கோருதல் ஆகியன இனங்காணப்பட்டன. அங்கீகரிக்கப்பட்ட அந்தப் பிரிவானது இலங்கை நிலைபெறுதகு சக்தி நிதியத்தின் நிலைபெறுதகு தன்மையை உறுதிசெய்து கொள்ளும் முகமாக ஒரு ஆ.அ.வ. தொழில் நுட்ப உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒரு உசாவுநரின் மூலம் மதிப்பிடப்பட்டது. SLSEF ஐ மேலும் மேம்படுத்துவதற்கான காபன் நிதியளிப்பின் பாகத்தை உணர்த்தும் பொருட்டு இலங்கை காபன் நிதிய ஊக்குவிப்புக்கான அல்லது முன்னெடுப்புக்கான நிகழ்ச்சித்திட்ட ரீதியான ஒரு CDM முழுமையான பிரிவு வகுத்தல் விடயம் ஆய்வு செய்யப்பட்டது.

## நிலைபெறுதகு சக்தி உத்தரவாத நிதியம்


50 மில்லியன் இ.ரூ. ஒதுக்கீட்டு நிதியைக் கொண்டு இயங்கிய நிலைபெறுதகு உத்தரவாத வசதியின் சட்டமுறையாக வந்த இயக்கச்செயற்பாடுகளுடன் இலங்கை நிலைபெறுதகு சக்தி உத்தரவாத நிதிய (SLSEGF) செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. சக்தி வினைத்திறன் கருத்திட்டங்களில் மாத்திரம் இலக்குக்கொள்ளப்பட்ட இயக்கச்செயற்பாடுகள், E-நட்புறவுகள் கடன் கட்டம் II இன் கீழ் 6% வட்டி வீதத்தில் கிடைக்கச்செய்யப்பட்ட மலிவான நிதிகளின் அடிப்படையில் ஏதாவது கணிசமான முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்குத் தவறியிருந்தன. குறித்த சட்டத்தினது 47 ஆம் பிரிவின் நிதி சார்ந்த ஏற்பாடுகளைப் பிரயோகித்து இந்த வசதியை முறையாக தாபிப்பதற்கான ஒரு முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. இந்த வசதி தொடர்பான ஒரு ஒழுங்குவிதியும் தயாரிக்கப்பட்டு அது சட்ட வரைஞரினால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

### கருத்திட்டங்களுக்கான காணிகள் சுவீகரித்தலும் அசையாத சொத்துக்களை வாடகைக்கு விடுதலும்

பிரதேச செயலாளர்களுடன் மேற்கொள்ளப்பட்ட பல கலந்துரையாடல்கள் நீர்வலு மின்னுற்பத்திக் கருத்திட்டங்களுக்குத் தேவையான நீர் உரிமைகள், ஒன்றிணைக்கபட்டு வருகின்ற கருத்திட்டம் தொடர்பான காணி சுவீகரித்தல் ஆகியன தொடர்பான பொதிகளைத் தயாரிப்பதற்கு வழிவகுத்துத் தந்தன. தற்காலிக அங்கீகாரங்களை வழங்கும் நடபடிமுறையானது தற்பொழுது அந்தந்தப் பிரதேச செயலாளரின் மூலம் காணித் தேவைப்பாட்டை இனங்காண்பதற்கான ஒரு தானியக்க முறையில் அமைந்த ஒரு நடபடிமுறையை ஆரம்பிப்பதற்கு வழிவகுத்தது. இதனால், கருத்திட்டங்கள் ஆக்குநர் தரப்புகளுக்கு நுகரும் காலம் அதிகளவில் சேமிப்பாகி முயற்சியும் வெற்றியளிக்கின்றது. காணிகள் சுவீகரித்தல் விடயங்களைத் துரிதப்படுத்துவதற்கான ஒரு ஊக்குவிப்புத் திட்டம் அதிகார சபையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது. தற்பொழுது 4 விடயங்கள் பூர்த்தியடைந்த நிலையில் காணப்படும் அதே வேளையில் மற்றும் 28 விடயங்கள் இடம்பெற்றும் வருகின்றன. ஏற்கெனவே பொறுப்பேற்கப் பட்ட 28 ஸ்தலங்கள் தவிர, மேலும் 6 ஸ்தலங்கள் 2012 ஆம் ஆண்டில் கருத்திட்ட ஆக்குநர் தரப்புகள் மூலம் எமது அதிகார சபைக்கு உரிமை மாற்றிக் கையளிக்கப்பட்டன.

### சக்தி வினைத்திறனை மேம்படுத்துதல், சக்தியைப் பேணிப் பாதுகாத்தல் மற்றும் முகாமை செய்தல்

ஏறக்குறைய 2,000 ஜி.வொ.ம. மின்சார சேமிப்பு இலக்கை அடையும் நோக்கில் ஒரு தேசிய கவன முயற்சியைக் கொண்டு சக்தி முகாமைத்துவம் சார்ந்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம் 2020 ஆம் ஆண்டளவில் 2010 ஆம் ஆண்டில் காணப்பட்ட 20% மின்சார நுகர்வுக்கு சமனான மின்சக்தியை சேமிக்க முடியும். வரைபு 17: வித்தியாசமான திருப்புமுனைகளில் எதிர்பார்க்கப்பட்ட மின்சார சேமிப்புகளை விவரிக்கின்றது.




**வரைபு 17: DSM ஊடாக எதிர்பார்க்கப்பட்ட மின்சார சேமிப்புகள்**

4 ஆம் அட்டவணையும் கூட 2012, 2016 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான தேறிய மின்சக்தி உற்பத்தியின் ஒரு விகிதமாக மின்சார சேமிப்பு இலக்குகளைப் பிரதிபலித்துக் காட்டுகின்றது.

**அட்டவணை 4: மின்சார சேமிப்பு இலக்குகள்**

| ஆண்டு | இலக்குக்கொள்ளப்பட்ட மின்சார சேமிப்புகள் (தேறிய மின்னுற்பத்தி %) |
|---|---|
| 2012 | 4.3 |
| 2016 | 6.4 |
| 2020 | 8.7 |

விஷேட பிரிவு தலையீட்டு நடவடிக்கையிலிருந்து 2020 ஆம் ஆண்டளவில் எதிர்பார்க்கப்படும் மின்சார சேமிப்பு தொடர்பான விபரங்கள் அட்டவணை 5 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 5: வித்தியாசமான தலையீட்டு நடவடிக்கைகளிலிருந்து 2020 ஆம் ஆண்டளவில் சேமிக்க எதிர்பார்க்கும் வருடாந்த மின்சக்தி சேமிப்பு**

| **தொழில்நுட்பம் / நடபடிமுறை** | **வருடாந்த மின்சக்தி சேமிப்பு (ஜி.வொ.ம.)** | **தொழில்நுட்பம் / நடபடிமுறை** | **வருடாந்த மின்சக்தி சேமிப்பு (ஜி.வொ.ம.)** |
|---|---|---|---|
| ▪ சக்தி முத்திரையிடல் நிகழ்ச்சித்திட்டம் | | ▪ வினைத்திறன் வாய்ந்த மோட்டார்கள் | 185 |
| - கூரை மின்விசிறிகள் | 35 | ▪ கட்டிட முகாமைத்துவ முறைமை | 20 |
| - டியுப் வடிவ ப்ளரஷன் மின்விளக்குகள் | 65 | ▪ வினைத்திறன் வாய்ந்த அலுவலக உபகரணங்கள் | 16 |
| - காந்த பலாஸ்ட்டுக்கள் | 80 | ▪ சூரிய சக்தி நீர் சூடாக்கிகள் | 5 |
| - குளிர்சாதனப் பெட்டிகள் | 16 | ▪ தொலைத்தொடர்பு | 10 |
| ▪ வினைத்திறன் வாய்ந்த ஒளியேற்றல் | 173 | ▪ வினைத்திறனான எயார் கம்பரசர்கள் | 11 |
| ▪ குளிரூட்டிகள் | 250 | ▪ அதிக ஒளிரற்ற மின்விளக்குகளை அகற்றுதல் | 205 |
| ▪ ISO 50001 | 375 | ▪ பசுமைக் கட்டிடங்கள் | 550 |
| **மொத்தம்** | | **1,990 ஜி.வொ.ம.** | |

நி.வ.அ.ச. மூலம் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளின் பயனாக 2012 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை சேமிக்கப்பட்ட மின்சாரப் பதிவுகள் பற்றிய விபரங்கள் கீழ்வருமாறு:

- கைத்தொழில் மற்றும் வர்த்தகம் ஆகிய துறைகளில் சக்தி வினைத்திறன் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டதன் பயனாக மின்சாரத்தில் 37 ஜி.வொ.ம. சேமிப்பு ஏற்பட்டது.


- பிரதானமாக எரிபொருள் முடுக்கிவிடும் முன்னெடுப்புகளினால் 8.7 மில்லியன் லீற்றர்கள் டீசல் சேமிப்பும் 0.61 மில்லியன் லீற்றர்கள் உலைஎண்ணெய் சேமிப்பும் ஏற்பட்டது.

### ஒழுங்குவிதிகள்

ஏற்கெனவேயிருக்கின்றதும் உத்தேசிக்கப்படுகின்றதுமான கட்டிடங்கள், கைத்தொழில் வளாகங்கள், விவசாய வாகனங்கள், கப்பல்கள் மற்றும் வானவூர்திகள் என்பவற்றுக்கான செயன்முறை விதிகள் மற்றும் வரையறைகள் என்பவற்றை நடைமுறைப்படுத்தும் பொறுப்புப் பணியானது நி.வ.அ. சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கியமான ஒழுங்குறுத்துகைப் பணிகளில் ஒரு பணியாகும். இந்தப் பொறுப்புப் பணியின் கீழ், இலங்கையிலுள்ள வினைத்திறன் வாய்ந்த கட்டிடங்களுக்கான செயன்முறை சார்ந்த விதிக்கோவை (சக்தி வினைத்திறன் கட்டிட விதிக்கோவை எனக் குறிப்பீடு செய்யப்படும்) தொகுக்கப்பட்டு நி.வ.அ.ச. மூலம் 2009 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. நடைமுறைப்படுத்தும் பங்காளித்துவத் தரப்புகள் என்ற ரீதியில், நகர அபிவிருத்தி அதிகார சபை (ந.அ.அ.ச.), மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகள் என்பன கட்டிடத் திட்டம் சார்ந்த அங்கீகார நடபடிமுறையில் சக்தி வினைத்திறன் கட்டிட விதிக்கோவையை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றன. இது வரை, ந.அ.அ.ச. பெறப்படும் கட்டிடத் திட்டம் சார்ந்த அங்கீகாரம் தொடர்பில் குறித்த விதிக்கோவையை அனுசரித்து அதன் ஏற்பாடுகளைப் பிரயோகித்தமைக்காக 03 கட்டிடங்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

### சான்றிதழ் பெற்ற சக்தி முகாமையாளர்கள், சக்தி மதிப்பீட்டு ஆய்வாளர்கள் மற்றும் சக்திச் சேவைகள் வழங்குநர்கள்

சக்தி முகாமையாளர்களையும் சக்தி மதிப்பீட்டு ஆய்வாளர்களையும் நியமிக்கும் நிமித்தம் 2011 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டன. இதன் நிரலில், வர்த்தகம் மற்றும் கைத்தொழில் ஆகிய இரண்டு துறைகளும் உள்ளடங்கும் வகையில், மின்சக்தியை தொகையாக நுகர்கின்ற நிறுவனங்களில் 142 சக்தி முகாமையாளர்கள் நியமிக்கப்பட்டனர்.




**வரைபு 18: நடுத்தர, பாரியளவான கைத்தொழில் மற்றும் வர்த்தகம் ஆகிய இரண்டு துறைகளிலும் காணப்படும் திரண்ட மின்சார நுகர்வு**

இது ஒரு நீண்டகால தொடர் நிகழ்ச்சித்திட்டமாகும். ISO 50001 என்ற நியமங்களில் விவரிக்கப்பட்ட முறைமைகளை ஒத்த சக்தி முகாமைத்துவ முறைமைகளை மொத்தக் கைத்தொழில் மின்சார நுகர்வில் 80% வீதத்திற்குப் பங்களிப்புச் செய்கின்ற 1,525 நிறுவனங்களில் (உருப்படம் 18 இல் விவரிக்கப்பட்டவாறு) தாபிப்பது இந்தக் கருத்திட்டத்தின் முடிவான குறிக்கோள்களாகும். 05 ஆம் அட்டவணையில் கணிக்கப்பட்டவாறு, முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர், இந்த நிகழ்ச்சித்திட்டம் தனியே வருடாந்தம் 375 ஜி.வொ.ம. மின்சாரத்தை சேமிக்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது.



**உருப்படம் 19: முதலாவது சக்தி முகாமையாளர்கள் குழு**

## சக்தி மதிப்பாய்வுகள்

சக்தியைப் பேணிப்பாதுகாப்பதை நோக்கி நகரும் வகையில் நிறுவனங்களுக்கு தொழில்நுட்பம் சார்ந்த ஆலோசனையை வழங்கும் நோக்கில் சக்தி மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 79 நடமாடும் சக்தி மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

## சக்தி வினைத்திறன் சேவைகள்

சக்தி வினைத்திறன் சேவைகள் என்பது ஒரு தொடர் நிகழ்ச்சித்திட்டமாகும். இலங்கை நிலைபெறு - தகு வலு அதிகார சபையின் பதிவு செய்யப்பட்டுள்ள சக்திச் சேவைக் கம்பனிகளினூடாக (ESCOs) பிரதானமாக குறித்த சக்தி வினைத்திறன் சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முடிவுப் பாவனையாளர் பிரிவுகளில் மேற்கொள்ளப்படுகின்ற சக்தி மதிப்பாய்வானது இந்தச் சேவைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள சில முக்கிய கூறுகளான சக்தி வீணாகும் பிரிவுகளையும் சக்திச் சேமிப்பு நடவடிக்கைகள் செயற்படுத்துகையையும் இனங்காண்பதற்கு உதவுகின்றது. நி.வ.அ.ச. பெயரளவு விலைகளில் சக்தி அளவீட்டு உபகரணங்கள், பயிற்சி மற்றும் திறன் விருத்திற்கான வசதிகள் என்பவற்றை வழங்குவதன் மூலம் இந்தச் செயற்பாடுகளுக்கு உதவுகின்றது. 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 486 உபகரண கருவி சாதன நாட்கள் பதிவாகியுள்ளன.

## துறை சார்ந்த விஷேட சக்தி வினைத்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்

சக்தி வினைத்திறன் மேம்பாட்டிலுள்ள தொழில்நுட்பம் சார்ந்த தலையீட்டு நடவடிக்கைகள் குறித்த ஒரு துறையிலுள்ள சக்திப் பாவனை மாதிரியில் தங்கியிருக்கும். ஆதலால், சக்தி வினைத்திறன் மேம்பாட்டிற்கான தேசிய மட்டத்திலான முழுமொத்த உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் வேளையில், தனித்தனியான துறைகளிலும் விஷேட தொழில்நுட்ப ஆற்றல்களை விருத்தி செய்வது அவசியமாகும். ஹோட்டல்கள், தேயிலைக் கைத்தொழில், புடவை, நீர் இறைத்தல், குளிரூட்டப்பட்ட கட்டிடங்கள் மற்றும் குளிரூட்டப்படாத கட்டிடங்கள் என்பன கருத்திற் கொள்ளப் பட்ட சில துறைகளில் அடங்குகின்றன. குறிப்பாக, கீழே விவரிக்கப்பட்ட EU-சுவிட்ச் ஏசியா க்றீன் ஸ்ரீ லங்கா ஹோட்டல்ஸ் என்ற கருத்திட்டத்தின் கீழ் ஹோட்டல் துறையில் முழுமையான ஒரு சக்தி நுகர்வுத் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

### ஹோட்டல் துறை

ஹோட்டல்களில் சக்தி நுகர்வை 20% வீதம் குறைக்கும் இலக்கை அடையும் நோக்கில், நி.வ.அ.ச. ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியின் கீழ் இலங்கை வர்த்தக கூடத்தினால் செயற்படுத்தப்பட்ட

EU-சுவிட்ச் ஏசியா க்றீன் ஸ்ரீ லங்கா ஹோட்டல்ஸ் என்ற கருத்திட்டத்திற்கு தொழில்நுட்பம் சார்ந்த உள்ளீடுகளை வழங்கி வருகின்றது. குறித்த கருத்திட்டத்துடன் பதிவுசெய்யப்பட்ட ஹோட்டல்கள் மாதாந்தம் சக்தி நுகர்வுத் தரவுகளையும் அபிவிருத்தி நகர்வுப் பகுப்பாய்வுகளையும் சமர்ப்பிக்கும். இதே நேரம் சக்தி வினைத்திறன் மேம்பாடு தொடர்பான சிபாரிசுகள், வழிகாட்டல்கள் மற்றும் கருத்திட்டச் செயற்படுத்துகை உதவி என்பவற்றை நி.வ.அ.ச. வழங்குகின்றது. 255 ஹோட்டல்கள் இந்தக் கருத் திட்டத்தின் கீழ் சக்தி வினைத்திறன் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் ஈடுபட்டு வருகின்றன.

## அறிவு முகாமைத்துவம்

### விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஊடக வெளியீடுகள்

சக்திக் கருசனையும் மற்றும் உள்ளுணர்வுமுடைய ஒரு மக்கள் சமூகத்தை உருவாக்கும் இலக்கில் கருத்தரங்குகள், வெகுஜன ஊடக வெளியீடுகள் மற்றும் கல்வி சார்ந்த செயற்பாடுகள் என்பவற்றின் ஊடாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருமப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மீளப்புதுப்பிக்கத் தகு சக்தி, சக்தியைப் பேணிப்பாதுகாத்தல் மற்றும் நிருவகித்தல் ஆகிய இரண்டு அம்சங்களையும் உள்ளடக்கி நிலைபெறுதகு சக்தியின் அடிப்படை எண்ணக்கருக்கள் தொடர்பான தொடர்ச்சியான கருத்தரங்குகள் பாடசாலைகள், அரசாங்க நிறுவனங்கள், உள்ளூராட்சி அதிகார சபைகள் மற்றும் தனியார் துறை நிவுனங்கள் என்பவற்றில் நடத்தப்பட்டு சமர்ப்பணங்களும் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக 'மின்சாரக் கட்டணத்தை எவ்வாறு குறைத்துக்கொள்வது' என்பது தொடர்பான விடயப் பிரிவுகள் சம்பந்தப்பட்ட கைந்நூல்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் என்பன அடங்கலாக பல தகவல் செய்தி ஆவணங்கள் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றிய நபர்களுக்கு மத்தியில் பகிர்ந்தளிக்கப் பட்டன. பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்ட ஒரு சக்திப் பாதுகாப்புப் பிரசார நிகழ்ச்சித்திட்டம் சார் நடவடிக்கையும் மிஹிர செய்திப்பத்திரிகையின் கூட்டொத்துழைப்பில் மேற்கொள்ளப்பட்டது. பிரசுரிக்கப்பட்ட கட்டுரைகளின் அடிப்படையில் இதில் ஒரு வினா விடைப் புதிர் போட்டி நிகழ்ச்சித்திட்டமும் அடங்கியிருந்தது.




**உருப்படம் 20: நிலைபெறுதகு சக்தி தொடர்பான ஒரு பாடசாலை விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்**

## கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள்

பொதுவான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் தவிர, நிலைபெறுதகு சக்தி எண்ணக்கருக்கள் பற்றிய கல்வி மற்றும் ஆற்றல் கட்டியெழுப்பல் ஆகியன தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களும் அதிக முறையான வழிமுறைகளினூடாக வகுத்தமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டன.

### பாடசாலைக் குழு நிகழ்ச்சித்திட்டம்

நாடு முழுதிலும் காணப்படுகின்ற வித்தியாசமான பல கல்வி வலயங்களிலுள்ள ஏறக்குறைய 60 பாடசாலைக் குழுக்களின் பங்குபற்றலைக் கொண்டு பாடசாலை மட்டச் சக்திக் குழுக்களின் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டன. தேசிய கல்வி நிறுவகத்தின் உதவியைக் கொண்டு பாடசாலை பாடவிதானத்தில் (தரம் 7 முதல் தரம் 11 வரை) விஞ்ஞானப் பாடத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்ட சக்தி தொடர்பான கற்கை மொடியூலை பயனுள்ள விதத்தில் கற்பதற்கு உதவும் வகையில் இந்த நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பாடசாலைகளிலும் சுற்றுப்புறங்களிலும் வசிக்கும் மக்களை இலக்காகக்கொண்டு நிலைபெறுதகு சக்தி தொடர்பில் செய்துகாண்பித்தல் மற்றும் ஊக்குவித்தல் ஆகிய விடயங்களில் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தும் முகமாக ஒவ்வொரு பாடசாலைக்கும் நிதி உதவி வழங்கப்பட்டது.

### சாரணர் நிகழ்ச்சித்திட்டம்

இலங்கை சாரணர் இயக்கத்தின் கூட்டொத்துழைப்புடன் சக்தியைப் பேணிப்பாதுகாக்கும் ஒரு நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், சக்தியைப் பேணிப் பாதுகாப்பது தொடர்பான பாடவிதானம் தயாரிக்கப்பட்டு நாடளாவிய ரீதியில் சாரணர்களுக்கு ஒரு கைந்நூலாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது. கொழும்பு மற்றும் மாத்தறை ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட 03 நிகழ்ச்சித்திட்டங்களினூடாக சாரணர்களுக்கான போதகர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. சாரணர்களுக்கான சக்தி வினைத்திறன் தேர்ச்சித் தொகுதி நிகழ்ச்சித்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது.

### சக்தி விடயப் பேட்டைகள்

செயல்முறை ரீதியான செய்துகாண்பித்தல், வளங்களின் ஆராய்ச்சி அபிவிருத்தி (ஆ.அ.), தொழில் நுட்பங்கள் மற்றும் முறைமைகள் என்பன தொடர்பான மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி விடயப் பேட்டை எண்ணக்கருவொன்று உத்தேசிக்கப்பட்டது. இதில் முதலாவது அம்பாந்தோட்டை சூரிய சக்திப் பேட்டையில் ஆரம்பிக்கப்பட்டது. சூரிய சக்தி பிவி மின்னுற்பத்திப் பொறித்தொகுதிகளின் இயக்கச் செயற்பாட்டு அம்ச விடயங்களை பார்வையிடுவதற்கு வருகின்ற சகல பார்வையாளர்களுக்கும் தற்பொழுது வழங்கப்படுகின்றன. சக்தியைப் பேணிப்பாதுகாப்பதற்கான ஏனைய சூரிய சக்தித் தொழில்நுட்பங்களின் செய்துகாண்பிப்புக்கான வசதிகள் மேம்பாட்டுத் திட்டமும் திட்டமிடப்பட்டு வருகின்றது.

## மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மற்றும் சக்தி வினைத்திறன் (RE³) வலயங்கள்

வித்தியாசமான இலக்குக் குழுக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மத்தியில் சில நிகழ்ச்சித்திட்டங்கள் விஷேட குறிக்கோள்களையும் கொண்டிருந்தன. உ+ம்: உள்ளூராட்சி அதிகார சபைகளின் அதிகாரிகள் மற்றும் மாகாண நிருவாக அதிகாரிகள் ஆகியோருக்காக மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ், உள்ளூர் மடட்டங்களில் சக்திக் கொள்கையைத் தயாரித்தல் மற்றும் திட்டமிடல் ஆகிய செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான அந்த அதிகாரிகளின் ஆற்றல் கட்டியெழுப்பல் விடயம் உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டம் உள்ளூர் அதிகார சபைகளில் வழங்களைத் (மனித வளங்கள், நிதி, தொழில்நுட்பம், நிருவாகம் முதலிய) பரந்த குறிக்கோள்களைக் கொண்டிருந்தது. இது நிலைபெறுதகு சக்தி அபிவிருத்திக் குறிக்கோள்களை நோக்கி அவர்களை ஊக்குவிப்பதாகவும் அமைகின்றது. ஆதலால் இந்த நிகழ்ச்சித்திட்டம் மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி மற்றும் சக்தி (RE³) வலயங்கள் பெயர் சூட்டப்பட்டது. 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கண்டி மாநகர சபை, யாழ்ப்பாண மாநகர சபை, கல்முனை மாநகர சபை, மெதத்தும்பறை பிரதேச செயலகம் மற்றும் அக்குரண பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி அதிகார சபைகளின் அலுவலர்கள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொண்டனர்.

## விதுல்கா 2012


மின்வலு சக்தி அமைச்சின் கூட்டொத்துழைப்பில் 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை மூன்றாவது தடவையாகவும் விதுல்கா தேசிய சக்திக் கண்காட்சி நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டம் நவீன சக்தி வினைத்திறன் தொழில்நுட்பங்கள், மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி அடிப்படையிலான தொழில்நுட்பங்கள் மற்றும் உற்பத்திகள் என்பன பற்றி அறிந்துகொள்ளும் வகையில் சகல மட்டங்களிலுமுள்ள நுகர்வோருக்கு ஒரு வாய்ப்பை அளித்தது. நிலைபெறுதகு சக்தி அபிவிருத்திப் பிரிவில் நி.வ.அ.ச. செயற்படுத்திய தேசிய நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் பல வித்தியாசமான துறைகளுக்கு மத்தியிலும் இந்த நிகழ்வு விழிப்புணர்வை அதிகரிப்பதற்கான ஒரு வாய்ப்பாகவும் அமைந்தது. கண்காட்சிக்கு இணையாக நடத்தப்பட்ட விதுல்கா தேசிய சக்தி மாநாடு சக்தி ஆராய்ச்சியாளர்களுக்கு தமது பணி சார்நத விடயங்களை வெளியிடுவதற்கு ஒரு உன்னத தளமாக அமைந்ததுடன் கல்விமான்கள் கைத்தொழிலாளர்கள் ஆகியோருக்கு மத்தியில் நிலைபெறுதகு சக்தி சம்பாஷணைக்கான ஒரு வாய்ப்பையும் அளித்தது.

## இலங்கைத் தேசிய சக்தி வினைத்திறன் விருது (SLNEEA)

2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தொடர்ச்சியாக மூன்றாவது தடவையும் இலங்கைத் தேசிய சக்தி வினைத்திறன் விருது நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டது. வித்தியாசமான துறைகளின் கீழ், வித்தியாசமான நிறுவனங்களிலிருந்து 31 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. வழங்கப்பட்ட விண்ணப்ப சமர்ப்பணங்களில் அதிகமானவை விருது வழங்குவதற்குத் தகுதி வாய்ந்தனவாகக் காணப்பட்டன. பொயெனிக்ஸ் இன்டஸ்ட்ரீஸ் லிமிற்றட் நிறுவனம் தங்க விருதைப் பெற்றது. அதனைத் தொடர்ந்து ப்ரன்டிக்ஸ் எஷென்ஸியல்ஸ் கொக்கல ஹெரிடென்ஸ் ஆயுர்வேத மக கெதர வெள்ளி விருதுகளைப் பெற்றது. ஸ்ரீ லங்கா எயார்லைன்ஸ் லிமிற்றட் நிறுவனம், நிட்டம்புவ ஹற்றன் நெஷனல் வங்கி பிஎல்சி கிளை, லோட்ஸ்டார் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனம், மிதிகம டயர் டிவிஷன் மற்றும் ஜெட்விங் ப்ளூ ஆகியன வெங்கல விருதுகளைப் பெற்றன. சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் பிஎல்சி, மவுன்ட்லெவினியா ஹோட்டல், சினமென் க்ரான்ட், பண்டாரவள ஹோட்டல், த ரோயல் ஹெரிடேஜ் ஹோட்டல் (ப்ரைவட்) லிமிற்றட், ஸ்டி அன்ட்ரூவ்ஸ் ஹோட்டல் (ப்ரைவட்) லிமிற்றட் மற்றும் எயார்போட் ஏவியேஷன் சேவிஸெஸ் (ஸ்ரீ லங்கா) லிமிற்றட் ஆகியவற்றுக்கு மதிப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.ப்ரபெஷனல் மெற் கன்ஷல்டென்ஸி சேவிஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனம் சிறந்த சக்திச் சேவைகள் கம்பனிக்கான வெங்கல விருதைப் பெற்றது. அதே வகுதியில் கைத்தொழில் சேவைகள் பணியகத்திற்கு ஒரு மதிப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டது.



**உருப்படம் 21: விருது பெற்றவர்கள் - தேசிய சக்தி வினைத்திறன் விருதுகள் 2012**



# நிதக் கூற்று

**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை** **இறுதி**

**2012 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள ஐந்தொகை**

| | குறிப்பு | 2012 | 2012 | 2011 மீளெடுத்துரைக்கப்பட்ட ரூ. | 2011 மீளெடுத்துரைக்கப்பட்ட ரூ. |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்கள் | 3 | 1,355,913,508 | | 1,462,170,917 | |
| நிகழும் பணி | 4 | 7,551,235 | | 20,277,945 | |
| முதலீடுகள் | 5 | 55,507,154 | 1,418,971,897 | 63,907,154 | 1,546,356,016 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| கிடைப்பனவுகள் | 6 | 12,449,801 | | 7,335,256 | |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 7 | 23,593,415 | | 47,959,116 | |
| காசும் காசு ஒப்புரவுகளும் | 8 | 159,958,726 | 196,001,942 | 68,705,192 | 123,999,564 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | | 1,614,973,839 | | 1,670,355,580 |
| **ஒப்புரவும் பொறுப்புக்களும்** | | | | | |
| **ஒப்புரவு** | | | | | |
| திரண்ட நிதி | 9 | 76,268,523 | | 76,268,523 | |
| திரணண்ட மிகை | | (16,095,714) | | (37,002,379) | |
| பிற்போடப்பட்ட மானியம் | 10 | 1,356,059,138 | | 1,475,043,735 | |
| இலங்கை நிலைபெறுதகு சக்தி நிதியம் | 11 | 142,222,496 | 1,558,454,443 | 96,855,634 | 1,611,165,512 |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | | | |
| செலுத்த வேண்டிய பணிக்கொடை | | 6,328,608 | 6,328,608 | 5,545,677 | 5,545,677 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| ஏனைய கொடுமதிகள் | 12 | 47,058,212 | | 51,290,815 | |
| குறுங்கால நிதியேற்பாடுகள் - கணக்காய்வுக் கட்டணங்கள் | | 982,076 | | 632,076 | |
| காணி சுவீகரித்தல் மீதான வைப்பு | | 2,150,500 | 50,190,788 | 1,721,500 | 53,644,391 |
| **மொத்த ஒப்புரவும் பொறுப்புக்களும்** | | | 1,614,973,839 | | 1,670,355,580 |

**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைக்காகவும் சபையின் சார்பாகவும்**

**நிதித் தலைவர்** **பணிப்பாளர் நாயகம்** **தலைவர்**

**இறுதி**

**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை**
**2012 திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று**

| | குறிப்பு | 2012 | 2011 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| **வருமானம்** | | | மீளெடுத்துரைக்கப்பட்ட |
| கருத்திட்டச் செலவுகளுக்கான மூலதன மானியம் | 13 | 37,502,139 | 29,867,008 |
| கழித்து பிற்போடப்பட்ட மானியம் | 14 | 161,433,593 | 102,871,812 |
| மீண்டெழும் மானியம் | | 33,180,000 | 32,000,000 |
| ஏனைய வருமானம் | 15 | 98,848,394 | 36,336,592 |
| **மொத்த வருமானம்** | | **330,964,126** | **201,075,412** |
| **செலவினம்** | | | |
| கருத்திட்டச் செலவுகள் | 16 | (62,473,123) | (47,187,530) |
| சம்பளங்களும் கொடுப்பனவுகளும் | 17 | (48,391,942) | (40,948,366) |
| பிரயாணச் செலவும் வாழ்க்கைப்படியும் | 18 | (1,416,843) | (1,967,173) |
| வழங்கல்கள் | 19 | (6,610,976) | (5,810,022) |
| பராமரிப்புச் செலவுகள் | 20 | (5,356,408) | (4,082,889) |
| ஒப்பந்த சார் சேவை | 21 | (19,732,818) | (16,412,150) |
| தேய்மானச் செலவுகள் | 22 | (161,433,114) | (106,395,700) |
| ஏனைய மீண்டெழும் செலவுகள் | 23 | (4,642,237) | (8,143,087) |
| **குறித்த ஆண்டு காலப்பகுதிக்கான செலவு** | | **(310,057,461)** | **(230,946,917)** |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் | | - | |
| **மிகை/(துண்டுவிழுகை)** | | **20,906,665** | **(29,871,505)** |

**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை**
**2012 திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று**

| விவரம் | திரண்ட நிதி (ரூ.) | தேறிய மிகைகள்/ துண்டுவிழுகை (ரூ.) | பிற்போடப்பட்ட மானியம் (ரூ.) | இலங்கை நிலைபெறு தகு சக்தி நிதியம் (ரூ.) | மொத்தம் (ரூ.) |
|---|---|---|---|---|---|
| **2010.12.31 இல் உள்ள நிலுவை** | **76,268,523** | **(7,508,558)** | **128,431,867** | **29,414,356** | 226,606,188 |
| 2011 ஆம் ஆண்டிற்கான அதிகரிப்பு/குறைவு | - | (29,871,505) | 1,346,611,868 | 67,441,279 | 1,384,181,642 |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் | | 377,684 | | | 377,684 |
| **2011.12.31 இல் உள்ள நிலுவை** | **76,268,523** | **(37,002,379)** | **1,475,043,735** | **96,855,634** | **1,611,165,513** |
| 2012 ஆம் ஆண்டிற்கான அதிகரிப்பு/குறைவு | - | 20,906,665 | (118,984,597) | 45,366,862 | (52,711,070) |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் | | | | | |
| **2012.12.31 இல் உள்ள நிலுவை** | **76,268,523** | **(16,095,714)** | **1,356,059,138** | **142,222,496** | **1,558,454,443** |

05 தொடக்கம் 17 வரையான பக்கங்களில் காணப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகள் கூற்றுக்களின் இன்றியமையாத ஒரு பாகமாக விளங்குகின்றன மற்றும் குறிப்புக்கள் என்பன நிதிக்

## இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை

### 2012 திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று

| | 2012 | | 2011 | |
|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| **இயக்கச்செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப்பாய்ச்சல்கள்** | | | | |
| குறித்த ஆண்டிற்கான மிகைகள் | 20,906,665 | | (29,871,505) | |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் | | | | |
| பின்வருவனவற்றுக்கான சீராக்கல்: | | | | |
| கழிக்கப்பட்ட மானியம் | (161,433,114) | | (102,871,812) | |
| வட்டி வருமானம் | (5,782,567) | | - | |
| சேவைப் பணிக்கொடை ஏற்பாடு | 860,127 | | 1,418,489 | |
| தேய்மானம் | 161,433,114 | | 102,871,812 | |
| | 15,984,225 | | (28,453,016) | |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்களிலுள்ள அதிகரிப்பு/குறைவு | 20,170,207 | | (39,482,804) | |
| நடைமுறைப் பொறுப்புக்களிலுள்ள அதிகரிப்பு/குறைவு | (3,453,603) | | 43,495,297 | |
| இயக்கச்செயற்பாடுகளிலிருந்து ஈட்டப்பட்ட காசு | 32,700,829 | | (24,440,523) | |
| இயக்கச்செயற்பாடுகளிலிருந்து வரும் தேறிய காசு | | 32,700,829 | | (24,440,523) |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்** | | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு | (12,630,337) | | (1,442,842,587) | |
| நிகழும் பணி | (10,867,523) | | (15,523,945) | |
| FD மற்றும் TBs ஆகியவற்றுக்களில் முதலிடப்பட்ட வட்டி/முதலீடுகள் | 13,263,516 | | 483,054 | |
| முதலீட்டுச் செயற்பாடுகளில் பயன்பட்ட தேறிய காசு | | (10,234,344) | | (1,457,883,478) |
| **நிதியீட்டல் செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்** | | | | |
| பிற்போடப்பட்ட மானியம் | 23,497,382 | | 1,453,007,568 | |
| இலங்கை நிலைபெறுதகு சக்தி நிதியம் | 45,366,862 | | 67,441,278 | |
| திரண்ட நிதி | | | (3,523,888) | |
| பணிக்கொடைக் கொடுப்பனவு | (77,195) | | - | |
| நிதியீட்டல் செயற்பாடுகளில் பயன்பட்ட தேறிய காசு | | 68,787,049 | | 1,516,924,958 |
| **காசும் காசு ஒப்புரவுகளிலுமுள்ள தேறிய அதிகரிப்பு** | | 91,253,534 | | 34,600,957 |
| **குறித்த ஆண்டு ஆரம்பப் பகுதியிலுள்ள காசும் காசு ஒப்புரவுகளும்** | | 68,705,192 | | 34,104,235 |
| **குறித்த ஆண்டு இறுதிப் பகுதியிலுள்ள காசும் காசு ஒப்புரவுகளும்** | | 159,958,726 | | 68,705,192 |

01 தொடக்கம் 17 வரையான பக்கங்களில் காணப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் என்பன நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத ஒரு பாகமாக விளங்குகின்றன.

## 2012.12.31 ஆம் திதியிலுள்ள நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

### 1. கூட்டுத்தாபனத் தகவல்

### 1.1 பொது

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை (நி.நி.வ.அ.ச.) 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. இது BMICH மண்டபத்தின் 3G-17 ஆம் இலக்க அறையில் அமைந்துள்ளது.

2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டத்தினால் 1985 இன் 02 ஆம் இலக்க சக்திப் பாதுகாப்பு நிதியச் (ச.பா.நி.) சட்டம் நீக்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதியிலிருந்த ச.பா.நி. சகல சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆம் திகதி முதல் இ.நி.வ.அ.ச. கணக்குகளுக்கு தன்னிச்சையாகவே மாற்றப்பட்டுக் காணப்படுகின்றன.

இ.நி.வ.அ.ச. இன் கீழ் இயங்கிய ஒளியேற்றலுக்கான பிராந்திய நிலையம் (ஒ.பி.நி.) மின்வலு சக்தி அமைச்சிடமிருந்து கிடைத்த அறிவுரையின் பிரகாரம் இலங்கை மின்சார சபைக்கு மாற்றப்பட்டது. அதற்கிணங்க ஒ.பி.நி. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன 2012 ஆம் ஆண்டில் இ.மி.ச. இற்கு மாற்றப்பட்டன என்பதுடன் ஊழியர்களும் அதற்கு இடமாற்றப்பட்டனர்.

### 1.2 அதிகார சபையின் பிரதான செயற்பாடுகள்

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை: மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்களை அபிவிருத்தி செய்தல், சக்தி அபிவிருத்திப் பிரதேசங்களைப் பிரகடனப்படுத்துதல், சக்தி வினைத்திறன் பாதுகாப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துதல், சக்தி விநியோக மற்றும் தகவல் முகாமைத்துவம் ஆகியவற்றில் சக்திப் பாதுகாப்பு, நம்பத்தகுதன்மை மற்றும் ஆகுசெலவு பயனுறுதி என்பவற்றை மேம்படுத்துவது தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.

### 1.3 ஊழியர்களின் எண்ணிக்கை

2012.12.31 ஆம் திகதியிலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை - 100

## 2.1 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் பற்றிய சுருக்கம்

### 2.1.1 கணக்குகள் தயாரித்தலின் அடிப்படையும் இணக்கக் கூற்றும்

2012 ஆம் ஆண்டு திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ள இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் (இ.நி.வ.அ.ச.) ஐந்தொகை, வருமானக் கூற்று, ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் என்பவற்றுடன் இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

இ.நி.வ.அ.ச. நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் முன்வைக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்கள் வரலாற்று ஆகுசலவு அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் முன்னைய தொடர்ந்து வரும் குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.1.2 ஒத்தீட்டுப் புள்ளிவிபரங்கள்

நடைமுறை நிதியாண்டு சமர்ப்பணத்திலுள்ள மாற்றங்களை உறுதிசெய்துகொள்ளும் பொருட்டு ஒத்தீட்டுப் புள்ளிவிபரங்கள் சீராக்கப்பட்டுள்ளன.

அந்த முன்னைய ஆண்டுகளிலுள்ள நீக்கல்களை/பிழைகளை திருத்திக்கொள்ளும் முகமாக ஐந்தொகை மற்றும் வருமானக் கூற்று என்பன 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகள் தொடர்பில் மறுபடியும் மீளெடுத்துரைக்கப்பட்டுள்ளன.

| தேய்மானம் | 2009<br>தொகை ரூ. | 2010<br>தொகை ரூ. | 2011<br>தொகை ரூ. |
|---|---|---|---|
| தேறிய மிகையிலிருந்து கழிப்பதற்குப் பதிலாக திரண்ட நிதியிலிருந்து வரும் பிற்போடப்பட்ட வருமானம் பிழையாகக் கழிக்கப்பட்டதைத் திருத்துதல் | 3,523,888 | 3,523,888 | 3,523,888 |
| 2009 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த சக்தி உபகரணங்களின் தேய்மான நீக்கல், தற்பொழுது கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | 5,585,981 | 8,056,460 | - |

**2.2.1 அரசாங்க மானியங்களுக்கான கணக்கீடும் மற்றும் அரசாங்க உதவிகள் வெளிப்படுத்துகையும்**

அரசாங்க மானியங்கள் மூலதன மானியம் மற்றும் மீண்டெழும் மானியம் என இரண்டு வகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. கட்டிட வாடகை, ஊழியர்களின் சம்பளங்கள் போன்ற செலவுகளை ஈடுசெய்யும் பொருட்டு மீண்டெழும் மானியம் பயன்படுத்தப் படுகின்றது. மூலதன மானியம் கருத்திட்ட/நிகழ்ச்சித்திட்டச் செலவுகளையும் மற்றும் நிலையான சொத்துக்களின் கொள்வனவுக்கான செலவையும் ஈடுசெய்யும் பொருட்டு பயன்படுத்தப்படுகின்றது. கருத்திட்டச் செலவுகளில் மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவுகள் அடங்குவதால் இரண்டும் மூலதன மானியத்திலிருந்தே செயலவு செய்யப் படுகின்றன.

அரசாங்க மூலதன மானியங்கள் பிற்போடப்பட்ட வருமானமாகக் கருதப்படுகின்றன. இது சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலத்தின் மீது முறையான மற்றும் நியாயமான ஒரு அடிப்படையில் வருமானமான இனங்காணப்படுகின்றது.

நடைமுறைக் கருத்திட்டச் செலவினத்துடன் சம்பந்தப்பட்ட மானியங்கள் கருத்திட்டச் செலவினங்களுக்கான மூலதன மானியம் போன்ற தலைப்பின் கீழ் வருமானக் கூற்றில் ஒரு வரவாக முன்வைக்கப்படுகின்றன.

**2.2. நீண்டகால முதலீடுகளுக்கான கணக்கீடு**

முதலீடுகள் அரசாங்க திறைசேரி உண்டியல்கள் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியிலுள்ள நிலையான வைப்புக்கள் என்பவற்றில் முதலீடு செய்யப்பட்டு ஆகுசெலவில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

**2.2.3 வருமான இனங்காணல்**

**2.2.4 தற்காலிகப் பொறுப்புக்களும் தற்காலிகச் சொதுக்களும்**

2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இ.நி.வ.அ.ச. மரபுரீதியற்ற மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி உற்பத்தித் தரப்புகள் இடமிருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்தமை தொடர்பில் மதிப்பீடு செய்யப் பட்ட 897

மில்லியன் ரூபா தொகையொன்றை இலங்கை மின்சார சபைக்குச் செலுத்த வேண்டும். திறைசேரியின் மூலம் நிதிகள் வழங்கப்படா விட்டால் அல்லது CESS களின் ஊடான வருமானங்கள், அரச கட்டணங்கள் முதலியவற்றிலிருந்து நிதிகளைப் பெறாவிட்டால், இ.நி.வ.அ.ச. இற்கு தற்பொழுது இந்தக் கொடுப்பனவைச் செலுத்த எந்தவிதமான வழியுமில்லை. இவை பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்திற்கு அமைவானதாகும். ஆகையால் இது ஒரு தற்காலிகப் பொறுப்பாக மாத்திரமே வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

### 2.3 சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

#### 2.3.1 ஆகுசெலவும் மதிப்பீடும்

நிலையான சொத்துக்கள் ஆகுசெலவு குறைந்த திரண்ட தேய்மான அடிப்படையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. நிலையான சொத்துக்களுக்கான தேய்மான ஏற்பாடு நேரடி நிரல் முறையைப் பயன்படுத்தி கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**ஒரு மாதத்திற்கான தேய்மான விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.**

| **விடயம்** | **தேய்மான வீதம்** |
|---|---|
| தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 25% |
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| புகைப்படப்பிரதியெடுக்கும் இயந்திரம் | 25% |
| கணனிகள் | 33.33% |
| மின்சாரப் பொருட்கள் | 25% |
| நூலகப் புத்தகங்கள் | 20% |
| சக்தி உபகரணங்கள் | 33.33% |
| கண்காட்சி உபகரணங்கள் | 25% |
| காற்று சக்திக் கோபுரங்கள் | 20% |
| கட்டிடங்கள், நிர்மாணங்கள் | 5% |

சூரிய சக்திக் கருத்திட்டங்கள்:

| | | |
|---|---|---|
| A. சூரிய சக்திப் பலகை | 5 | 5% |
| B. இரும்பு நிர்மாணம் | 5 | 10% |
| C. கட்டிடம் | 5 | 5% |
| D. சுவிட் ஜியர் | 20 | 20% |
| E. செருகிகள் | 20 | 20% |
| F. மின்மாற்றிகள் | 5 | 5% |
| G. மின்சார இலத்திரனியல் | 33.33 | 33.33% |
| H. ஏனையவை | 20 | 20% |
| I. துப்புரவு, குழாய் பொருத்து | 5 | % |
| J. கேபெல்கள் | 20 | 5% |
| K. தளபாடப் பொருத்து, அலுவலக உபகரணங்கள் | 25 | 20% |
| L. கருவிகள் | 33.33 | 25% |
| M. இயந்திராதிகள் | 20 | 33% |

### 2.4 பொறுப்புக்களும் நிதியேற்பாடுகளும்

#### 2.4.1 பணிக்கொடை

நிதி ஆண்டினது கடந்த மாத சம்பளத்தின் அடிப்படையில் அரை மாத சம்பளத்திற்குச் சமனான ஒரு தொகை சகல ஊழியர்களுக்குமான பணிக்கொடைக்காக ஒதுக்கப் பட்டுள்ளது.

#### 2.4.2 ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி.

உரிய நியதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு இணங்க ஊழியர்கள் ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. ஆகியவற்றுக்குப் பங்களிப்பதற்கு உரித்துடையவர்கள். இ.நி.வ.அ.ச. மூலமான பங்களிப்புகள் அதாவது 12% மற்றும் 3% வீதமானவை முறையே ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. ஆகியவற்றுக்கு மேற்கொள்ளப்படுகின்றன.

#### 2.4.3 சம்பந்தப்பட்ட தரப்புக் கொடுக்கல்வாங்கல்கள் வெளிப்படுத்துகை

இ.நி.வ.அ.ச. சகல சிரேஷ்ட நிறைவேற்றுநர்கள்/முகாமையாளர்கள் ஆகியோர் சம்பந்தப்பட்ட தரப்புக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய வெளிப்படுத்துகையை சமர்ப்பித்துள்ளனர். இலங்கை சக்தி முகாமையாளர் சங்கத்திற்கு சம்பந்தப்பட்ட ஒரு தரப்பாக இருக்கின்ற ஒரு சிரேஷ்ட முகாமையாளரைத் தவிர ஏனைய சகல முகாமையாளர்களும் 2012 ஆம் ஆண்டில் வெளிப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட தரப்புக் கொடுக்கல்வாங்கல்கள் ஏதும் இல்லையென வெளிப்படுத்தியுள்ளனர்.

முகாமைத்துவ சபையின் 14 உறுப்பினர்கள் மாத்திரமே சம்பந்தப்பட்ட தரப்புக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான தமது வெளிப்படுத்துகைகளை சமர்ப்பித்துள்ளனர். ஏனைய சபை உறுப்பினர்கள் இ.நி.வ.அ.ச. இற்கு அவற்றை சமர்ப்பிக்கவில்லை. சமர்ப்பித்துள்ள அந்த உறுப்பினர்களில் ஒரு உறுப்பினர் தான் இலங்கை சக்தி முகாமையாளர்கள் சங்கத்திற்கான சம்பந்தப்பட்ட ஒரு தரப்பாக இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். மற்றைய 13 உறுப்பினர்களும் வெளிப்படுத்துவதற்கு தம்மிடம் சம்பந்தப்பட்ட தரப்பு கொடுக்கல்வாங்கல்கள் ஏதும் இல்லை என்பதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

#### 2.4.5 சபையின் அங்கீகாரம்

இந்த நிதிக் கூற்றுக்கள் 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆம் திகதி அதிகார சபையின் முகாமைத்துவ சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

குறிப்பு 3 :

**சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

**நிலையான சொத்துக்கள்**

| விவரம் | 2011.12.31 இல் உள்ள நிலுவை ரூ. | குறித்த ஆண்டு காலப்பகுதியிலான கொள்வனவு | 2012.12.31 இல் உள்ள நிலுவை ரூ. |
|---|---|---|---|
| தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 10,578,249 | 1,011,862 | 11,590,111 |
| மோட்டார் வாகனங்கள் | 45,811,750 | - | 45,811,750 |
| புகைப்படப்பிரதியெடுக்கும் இயந்திரம் | 1,661,391 | 302,400 | 1,963,791 |
| கணனிகள் | 18,035,829 | 7,394,658 | 25,430,487 |
| மின்சாரப் பொருட்கள் | 218,468 | 0 | 218,468 |
| நூலாகப் புத்தகங்கள் | 429,915 | 23,437 | 453,352 |
| சக்தி உபகரணங்கள் | 66,017,279 | 10,870,068 | 76,887,347 |
| காற்றுக் கோபுரங்களும் உபகரணங்களும் | 19,016,000 | 9,628,898 | 28,644,898 |
| சூரிய மற்றும் சிறிய நீர்வலு கருத்திட்டங்கள்: | | | |
| A. சூரிய சக்திப் பலகைகள் | 655,143,926 | - | 655,143,926 |
| B. இரும்பு நிர்மாணம் | 219,252,898 | 3,008,840 | 222,261,738 |
| C. கட்டிடம் | 110,267,554 | 13,400,225 | 123,667,779 |
| D. சுவிட் ஜியர் | 13,973,767 | - | 13,973,767 |
| E. செருகிகள் | 78,637,410 | - | 78,637,410 |
| F. மின்மாற்றிகள் | 45,753,626 | - | 45,753,626 |
| G. சக்தி இலத்திரனியல்கள் | 19,861,894 | 5,611,358 | 25,473,252 |
| I. துப்புரவேற்பாடு மற்றும் குழாய் பொருத்தல் | 166,360,476 | - | 166,360,476 |
| J. கேபெல்கள் | 100,166,611 | 57,960 | 100,224,571 |
| K. தளபாடப் பொருத்துக்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 2,964,429 | - | 2,964,429 |
| L. கருவிகள் | 13,977,290 | - | 13,977,290 |
| M. இயந்திராதிகள் | 349,895 | 3,651,480 | 4,001,375 |
| H. ஏனையவை | 59,679,157 | 212,520 | 59,891,677 |
| | - | - | |
| கண்காட்சி உபகரணங்கள் | 352,853 | 2,000 | 354,853 |
| | 1,648,510,667 | 55,175,706 | 1,703,686,373 |

**தேய்மானக் கணக்கு**

| விவரம் | தேய்மான % | 2011.12.31 இல் உள்ள நிலுவை ரூ. | குறித்த ஆண்டிற்கான தேய்மானம் ரூ. | 2012.12.31 இல் உள்ள நிலுவை ரூ. | தேறிய புத்தகப் பெறுமானம் ரூ. | தேறிய புத்தகப் பெறுமானம் ரூ. 2011 |
|---|---|---|---|---|---|---|
| தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | | 8,630,951 | 1,406,196 | 10,037,147 | 1,552,964 | 1,947,298 |
| மோட்டார் வாகனங்கள் | | 32,700,604 | 7,236,969 | 39,937,573 | 5,874,177 | 13,111,146 |
| புகைப்படப்பிரதியெடுக்கும் இயந்திரம் | | 1,058,514 | 312,465 | 1,370,979 | 592,812 | 602,877 |
| கணனிகள் | | 14,266,260 | 3,140,658 | 17,406,918 | 8,023,569 | 3,769,569 |
| மின்சாரப் பொருட்கள் | | 217,785 | 683 | 218,468 | 0 | 683 |
| நூலாகப் புத்தகங்கள் | | 358,811 | 28,413 | 387,224 | 66,128 | 71,104 |
| சக்தி உபகரணங்கள் | | 55,711,011 | 10,380,701 | 66,091,712 | 10,795,634 | 10,306,268 |
| காற்றுக் கோபுரங்களும் உபகரணங்களும் | | 6,116,378 | 5,446,151 | 11,562,529 | 17,082,369 | 12,899,622 |
| சூரிய மற்றும் சிறிய நீர்வலு கருத்திட்டங்கள்: | | | | | | |
| A. சூரிய சக்திப் பலகைகள் | | 17,053,947 | 32,757,196 | 49,811,143 | 605,332,783 | |
| B. இரும்பு நிர்மாணம் | | 10,226,955 | 21,954,063 | 32,181,018 | 190,080,720 | |
| C. கட்டிடம் | | 3,858,123 | 5,577,262 | 9,435,385 | 114,232,394 | |
| D. சுவிட் ஜியர் | | 2,603,332 | 2,794,753 | 5,398,085 | 8,575,682 | |
| E. செருகிகள் | | 8,646,370 | 15,727,482 | 24,373,852 | 54,263,558 | |
| F. மின்மாற்றிகள் | | 1,085,415 | 2,287,681 | 3,373,096 | 42,380,530 | |
| G. சக்தி இலத்திரனியல்கள் | | 4,030,300 | 6,582,389 | 10,612,689 | 14,860,563 | |
| I. துப்புரவேற்பாடு மற்றும் குழாய் பொருத்தல் | | 3,486,733 | 8,318,024 | 11,804,757 | 154,555,719 | |
| J. கேபெல்கள் | | 8,590,324 | 20,034,431 | 28,624,755 | 71,599,816 | |
| K. தளபாடப் பொருத்துக்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | | 310,656 | 741,107 | 1,051,763 | 1,912,666 | |
| L. கருவிகள் | | 1,998,633 | 4,612,506 | 6,611,139 | 7,366,151 | |
| M. இயந்திராதிகள் | | 48,889 | 139,816 | 188,705 | 3,812,670 | |
| H. ஏனையவை | | 5,003,239 | 11,939,896 | 16,943,135 | 42,948,542 | 133,466,606 |
| | | | - | | - | |
| கண்காட்சி உபகரணங்கள் | | 336,519 | 14,272 | 350,791 | 4,061 | 16,334 |
| | | 186,339,749 | 161,433,116 | 347,772,865 | 1,355,913,508 | 176,191,507 |

குறிப்பு 4 : நிகழும் பணி

| | 31.12.2012 | 31.12.2011. | 31.12.2010. |
|---|---|---|---|
| மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மதிப்பீடு | 2,377,000 | 2,377,000 | 11,885,000 |
| அம்பாந்தோட்டை சூரிய சக்திப் பேட்டை | 3,517,591 | - | 46,693,991 |
| இந்துரான சிறிய நீர் வலு கருத்திட்டம் | 1,656,644 | 15,523,945 | |
| பலாங்கொட காற்றுக் கோபுரம் | - | 2,377,000 | |
| | 7,551,235 | 20,277,945 | 58,578,991 |

குறிப்பு 5 : முதலீடுகள்

நிலையான வைப்புக்கள் (பொரல்ல தேசிய சேமிப்பு வங்கியில் வைப்பிலிடப்பட்டது)

| முதலீட்டுத் திகதி | முதிர்ச்சித் திகதி | முதலீட்டு வீதம் | வைப்புப் பதிவு இலக்கம் | 2012.12.31 இல் உள்ள வைப்பு | 2011.12.31 இல் உள்ள வைப்பு |
|---|---|---|---|---|---|
| 21.09.2011. | | | 2-0061-05-10246 | - | 1,200,000 |
| 21.09.2011. | | | 2-0061-05-10238 | - | 1,200,000 |
| 21.09.2011. | | | 2-0061-05-10220 | - | 1,200,000 |
| 21.09.2011. | | | 2-0061-05-10360 | - | 1,200,000 |
| 21.09.2011. | | | 2-0061-05-10394 | - | 1,200,000 |
| 21.09.2011. | | | 2-0061-05-10467 | - | 1,200,000 |
| 21.09.2011. | | | 2-0061-05-10459 | | 1,200,000 |
| 21.09.2011. | 21.09.2013 | 12.5% | 2-0061-05-10416 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011. | 21.09.2013 | 12.5% | 2-0061-05-10432 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011. | 21.09.2013 | 12.5% | 2-0061-05-10408 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011. | 21.09.2013 | 12.5% | 2-0061-05-10343 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011. | 21.09.2013 | 12.5% | 2-0061-05-10335 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011. | 21.09.2013 | 12.5% | 2-0061-05-10378 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011. | 21.09.2013 | 12.5% | 2-0061-05-10386 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011. | 21.09.2013 | 12.5% | 2-0061-05-10327 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011. | 21.09.2013 | 12.5% | 2-0061-05-10319 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011. | 21.09.2013 | 12.5% | 2-0061-05-10297 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011. | 21.09.2013 | 12.5% | 2-0061-05-10289 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011. | 21.09.2013 | 12.5% | 2-0061-05-102262 | 1,200,000 | 1,200,000 |
| 21.09.2011. | 21.09.2013 | 12.5% | 2-0061-05-10254 | 1,200,000 | 1,200,000 |
| 25.09.2011. | 21.09.2013 | 12.5% | 2-0061-04-12376 | 450,000 | 450,000 |
| 05.10.2011. | 21.09.2013 | 12.5% | 2-0061-03-09834 | 2,800,000 | 2,800,000 |
| | | | | 18,850,000 | 27,250,000 |

திறைசேரி உண்டியல்கள் - மக்கள் வங்கித் தலைமை அலுவலகத்தில் முதலிடப்பட்டது.

| முதலீட்டுத் திகதி | முதிர்ச்சித் திகதி | முதலீட்டு வீதம் | வைப்புப் பதிவு இலக்கம் | 2012.12.31 இல் உள்ள வைப்பு | 2011.12.31 இல் உள்ள வைப்பு |
|---|---|---|---|---|---|
| 18.01.2011. | 17.01.2013. | | LKB00615C156 | 12,489,626 | 12,489,626 |
| 09.07.2011. | 11.07.2013. | | LKB00314J011 | 24,167,528 | 24,167,528 |
| | | | | 36,657,154 | 36,657,154 |
| மொத்தத் தொகை | | | | 55,507,154 | 63,907,154 |

**குறிப்பு 6 - கிடைக்க வேண்டிய வட்டி**

நிலையான வைப்புக்கள் மீது கிடைக்க வேண்டிய வட்டி

| முதலீட்டுத் திகதி | முதிர்ச்சித் திகதி | முதலீட்டு வீதம் | 2012.12.31 இல் உள்ள வைப்பு | 2012 ஆம் ஆண்டிற்குக் கிடைக்க வேண்டியது ரூ. | 2011 ஆம் ஆண்டிற்குக் கிடைக்க வேண்டியது ரூ. |
|---|---|---|---|---|---|
| 21.09.2011. | | | | | 28,504 |
| 21.09.2011. | | | | | 28,504 |
| 21.09.2011. | | | | | 28,504 |
| 21.09.2011. | | | | | 28,504 |
| 21.09.2011. | | | | | 28,504 |
| 21.09.2011. | | | | | 28,504 |
| 21.09.2011. | | | | | 28,504 |
| 21.09.2011. | 21.09.2013 | 12.5% | 1,200,000 | 43,274.93 | 28,504 |
| 21.09.2011. | 21.09.2013 | 12.5% | 1,200,000 | 43,274.93 | 28,504 |
| 21.09.2011. | 21.09.2013 | 12.5% | 1,200,000 | 43,274.93 | 28,504 |
| 21.09.2011. | 21.09.2013 | 12.5% | 1,200,000 | 43,274.93 | 28,504 |
| 21.09.2011. | 21.09.2013 | 12.5% | 1,200,000 | 43,274.93 | 28,504 |
| 21.09.2011. | 21.09.2013 | 12.5% | 1,200,000 | 43,274.93 | 28,504 |
| 21.09.2011. | 21.09.2013 | 12.5% | 1,200,000 | 43,274.93 | 28,504 |
| 21.09.2011. | 21.09.2013 | 12.5% | 1,200,000 | 43,274.93 | 28,504 |
| 21.09.2011. | 21.09.2013 | 12.5% | 1,200,000 | 43,274.93 | 28,504 |
| 21.09.2011. | 21.09.2013 | 12.5% | 1,200,000 | 43,274.93 | 28,504 |
| 21.09.2011. | 21.09.2013 | 12.5% | 1,200,000 | 43,274.93 | 28,504 |
| 21.09.2011. | 21.09.2013 | 12.5% | 1,200,000 | 43,274.93 | 28,504 |
| 21.09.2011. | 21.09.2013 | 12.5% | 1,200,000 | 43,274.93 | 28,504 |
| 25.09.2011. | 21.09.2013 | 12.5% | 450,000 | 16,228.10 | 10,270 |
| 05.10.2011. | 21.09.2013 | 12.5% | 2,800,000 | 100,974.83 | 57,381 |
| | | | 18,850,000 | 679,777 | 637,731 |

திறைசேரி உண்டியல்கள் மீது கிடைக்க வேண்டிய வட்டி

| முதலீட்டுத் திகதி | முதிர்ச்சித் திகதி | முதலீட்டு வீதம் | 2012.12.31 இல் உள்ள வைப்பு | 2012 ஆம் ஆண்டிற்குக் கிடைக்க வேண்டியது ரூ. | 2011 ஆம் ஆண்டிற்குக் கிடைக்க வேண்டியது ரூ. |
|---|---|---|---|---|---|
| 18.01.2011. | 17.01.2013. | | 12,489,626 | 1,050,908 | 804,264 |
| 09.07.2011. | 11.07.2013 | | 24,167,528 | 1,448,396 | 818,036 |
| | | | 36,657,154 | 2,499,304 | 1,622,300 |

**கிடைக்க வேண்டிய வருமானம் - சக்தி உபகரணங்களை வாடகைக்கமர்த்தல்**

| | 31.12.2012. | 31.12.2011. | 31.12.2010. |
|---|---|---|---|
| பாண்டெஸ் பிினிசிங் லிமிற்றட் - 2005 | 4,850 | 4,850 | 4,850 |
| BMI ஹோல்டிங் (ப்ரைவட்) லிமிற்றட் - 2005 | 7,200 | 7,200 | 7,200 |
| ஹேலீஸ் இன்டஸ்ட்ரியல் சொலூசன்ஸ் - 2005 | 500 | 500 | 500 |
| எனொர்பிப் (ப்ரைவட்) லிமிற்றட் - 2006 | 3,750 | 3,750 | 3,750 |
| எக்ஸெஸ் எனொர்ஜி சொலூசன்ஸ் | 500 | 500 | 500 |
| எக்ஸெஸ் எனொர்ஜி சொலூசன்ஸ் | 500 | 500 | 500 |
| ப்bராண்டிக்ஸ் | 2,650 | 250 | 250 |
| DIMO | 1,600 | | |
| எனொர்ஜி சொல்வ் இன்ட் | 5,750 | | |
| நெஷனல் க்லீனர் ப்ரொடக்ஷன் சென்டர் | 750 | | |
| MAS அக்ரிவ் | 2,400 | | |
| இன்ஜினியரிங் டிசைன் சென்டர் | 5,000 | | |
| க்லைட் (ப்ரைவட்) லிமிற்றட் | 150 | | |
| SLEMA | 250 | | |
| | 35,850 | 17,550 | 17,550 |
| கிடைக்க வேண்டிய - விதுல்கா வருமானம் | 472,175 | | |
| மின்னுற்பத்தி - இந்துரான | 80,270 | | |
| பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | | | |
| மின்னுற்பத்தி - அம்பாந்தோட்டை | 8,682,425 | | |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் | | 5,057,675 | |
| | 9,270,720 | 5,075,225 | 17,550 |
| **மொத்தத் தொகை** | 12,449,801 | 7,335,256 | 2,760,635 |

| | 2012.12.31 | 2011.12.31 | 2010.12.31 |
|---|---|---|---|
| **குறிப்பு 7: ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| **முற்பணங்கள்** | | | |
| CFL கடன் | 194,673 | 194,673 | 194,673 |
| சக்தி நிதியத்திலிருந்து நிதிய அதிகார சபைக்குக் கிடைக்க வேண்டியது | 7,269,950 | | |
| நிதிய அதிகார சபையிலிருந்து சக்தி நிதியத்திற்குக் கிடைக்க வேண்டியது | | 30,000,000 | |
| மின்வலு சக்தி அமைச்சினால் கடனாகப் பெறப்பட்டது | 8,000,000 | | |
| இ.மி.ச. இருந்து கிடைக்க வேண்டிய | | 9,912,981 | |
| விழா முற்பணம் | | | 59,000 |
| மருத்துவக் காப்புறுதி | 500 | 500 | 500 |
| முற்பணக் க/கு | | 22,500 | 504,815 |
| தேசிய நீர் வளங்கள் சபை | | | 240,000 |
| முற்பண வைப்பு எரிபொருள் முதலியன | 136,500 | 111,500 | 111,500 |
| விஷேட முற்பணம் | | | 77,500 |
| இடர் கடன் | | | 7,227,549 |
| அம்பாந்தோட்டை - இ.மி.ச. வைப்பு | 52,000 | 52,000 | 52,000 |
| இந்துரான - இ.மி.ச. வைப்பு | 62,500 | | |
| தொலைபேசிக்கான வைப்பு | 8,775 | 8,775 | 8,775 |
| SWRDB தேசிய ஞாபகார்த்த நிதிய வைப்பு | 240,000 | | |
| உயர் ஊழியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 80,000 | | |
| நிகழ்ச்சித்திட்டங்களுக்கான முற்பணங்கள் | 161,185 | | |
| | 16,206,083 | 40,302,929 | 8,476,312 |
| **சுழற்சி நிதி** | | | |
| இடர் கடன் | 7,314,344 | 7,592,687 | |
| விஷேட முற்பணம் | 500 | 500 | |
| விழா முற்பணம் | 72,489 | 63,000 | |
| | 7,387,332 | 7,656,187 | |
| | 23,593,415 | 47,959,116 | |

| **குறிப்பு 8: காசும் காசு ஒப்புரவுகளும்** | 2012.12.31 | 2011.12.31 | 2010.12.31 |
|---|---|---|---|
| தேசிய சேமிப்பு வங்கி - பொரல்ல | 149,942,180 | 66,981,167 | 29,540,089 |
| மக்கள் வங்கி - SEA-078-1-001-8-8-503576 | 5,798,073 | 615,197 | 3,977,368 |
| மக்கள் வங்கி - SEA-078-1-002-7-8-503576 | 3,082,245 | 537,860 | 31,868 |
| இலங்கை வங்கி - டொரிங்டன் | 1,136,228 | 570,968 | 554,910 |
| | 159,958,726 | 68,705,192 | 34,104,235 |

**குறிப்பு 9 : திரண்ட நிதி**

2007 செப்டம்பர் 30 ஆம் திகதியிலிருந்த சக்திப் பாதுகாப்பு நிதியத்தின் (ECF) திரண்ட நிதி 2007 ஒற்றோபர் 01 ஆம் திகதி இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைக்கு (SLSEA) மாற்றப்பட்டது. இதில் பின்வருவன உள்ளடங்குகின்றன:

| | 2012.12.31 | 2011.12.31 | 2010.12.31 |
|---|---|---|---|
| 2007 செப்டம்பர் 30 இல் உள்ள திரண்ட நிதி | 61,244,579 | 61,244,579 | 50,672,915 |
| ஆரம்ப மூலதன நிதி | 5,000,000 | 5,000,000 | 5,000,000 |
| மூலதன மானியம் - மின்வலு சக்தி அமைச்சு | 5,761,145 | 5,761,145 | 5,761,145 |
| மூலதன மானியம் - UNDP | 3,612,560 | 3,612,560 | 3,612,560 |
| நன்கொடை மானியம் - உணவு விவசாய நிறுவனம் | 650,239 | 650,239 | 650,239 |
| மொத்தம் | 76,268,523 | 76,268,523 | 65,696,859 |

| | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|
| **குறிப்பு 10: பிற்போடப்பட்ட மானியம்** | | | |
| மூலதன மானியம் - 2008 | 33,687,060 | 33,687,060 | 33,687,060 |
| மூலதன மானியம் - 2009 | 11,705,408 | 11,705,408 | 11,705,408 |
| வெளிநாட்டு மானியம் - 2009 - ஜப்பான் | 24,165,380 | 24,169,380 | 24,169,380 |
| மூலதன மானியம் - 2010 - அம்பாந்தோட்டை சூரிய சக்திப் பேட்டை (WIP) | 46,693,991 | 46,693,991 | 46,693,991 |
| - கழிக்கப்பட்ட மூலதன மானியம் | 10,563,444 | 10,563,444 | 10,563,444 |
| வெளிநாட்டு மானியம் - 2010 - ஜப்பான் | 11,419,569 | 11,415,569 | 11,419,569 |
| மூலதன மானியம் - 2011 - இந்துரான சிறிய நீர் வலு கருத்திட்டம் (WIP) | 15,523,945 | 15,523,945 | |
| - கழிக்கப்பட்ட மூலதன மானியம் - இந்துரான MHP | 68,548,216 | 68,548,216 | |
| வெளிநாட்டு மானியம் - 2011 - ஜப்பான் | 1,155,016,402 | 1,155,016,402 | |
| - கொரியா | 191,097,075 | 187,228,286 | |
| பிற்போடப்பட்ட மானியம் - வெளிநாட்டு உதவி - 2012 - ஆ.அ.வ. | 15,082,346 | | |
| திறைசேரி மூலதன மானியம் - 2012 | 23,497,861 | | |
| கழிக்குக: | | | |
| - தேய்மானம் - 2012 | (161,433,593) | | |
| - தேய்மானம் - 2011 | (63,289,946) | (67,095,136) | |
| - முன்னைய ஆண்டுகளுக்கான தேய்மானம் | (26,218,020) | (22,412,830) | (9,806,985) |
| | 1,356,059,138 | 1,475,043,735 | 128,431,867 |

| | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|
| **குறிப்பு 11:** | | | |
| **இலங்கை நிலைபெறுதகு சக்தி நிதியம்** | | | |
| RE வருமானம் | 130,426,630 | 74,350,910 | 25,720,450 |
| உபகரணங்கள் வாடகைக்கு விடுதல் மற்றும் சக்தி மதிப்பாய்வு | 10,769,803 | 6,519,206 | 3,693,906 |
| தே.சே.வ. சேமிப்பு க/கு மீதான வட்டி | 7,026,063 | 1,271,298 | |
| வெகுஜன ஊடக நிகழ்ச்சித்திட்டங்களினூடான விழிப்புணர்வுகளுக்கான மீளப்பெறுகைகள் | (6,000,000) | | |
| | 142,222,496 | 82,141,414 | 29,414,356 |

| | 2012 | 2011 | 2010 |
|---|---|---|---|
| **குறிப்பு 12: ஏனைய செலுத்த வேண்டியவைகள்** | | | |
| நிலைபெறுதகு சக்தி நிதியம் | | 30,000,000 | |
| நிதிய அதிகார சபை | 7,269,950 | | |
| சுவிட் ஆசிய கட்டுப்பாட்டுக் க/கு | 3,051,737 | 507,352 | |
| மின்வலு சக்தி அமைச்சு | 500 | 500 | 500 |
| அட்டுறு செலவுகள் | 29,294,019 | 16,303,819 | 4,657,611 |
| ***கடன்பட்டோர்*** | | | |
| ரினீவபெல் எனெர்ஜி - E நெட் சொலூசன்ஸ் (ப்ரைவட்) லிமிற்றட் | 1,667,500 | 1,667,500 | 1,667,500 |
| ***சக்தி உபகரங்கள் கொள்வனவு*** | | | |
| - E- நெட் சொலூசன்ஸ் (ப்ரைவட்) லிமிற்றட் | 326,025 | 326,025 | 326,025 |
| **பிடித்துவைத்தல் தொகை** | 3,634,360 | 1,744,883 | |
| **நாரஹேன்பிட்ட ஜாத்திக பொல** | 99,405 | 209,545 | |
| ***நானாவிதக் கடன்*** | | | |
| **இலங்கை சுங்கத் திணைக்களம்** | 310,748 | 310,748 | 310,748 |
| **SEA நலன்புரிச் சங்கம்** | 442 | 442 | 442 |
| **பற்றறி வைப்பு** | | | |
| நானாவிதக் கொடுமதி | 984,269 | | |
| ***மீளளிக்கத்தகு வைப்புக்கள்*** | | | |
| E- நெட் சொலூசன்ஸ் (ப்ரைவட்) லிமிற்றட் | 10,000 | | 150,000 |
| ENL கன்ஸல்ட்டென்ட் | 150,000 | 150,000 | 10,000 |
| E- நெட் சொலூசன்ஸ் (ப்ரைவட்) லிமிற்றட் | | 10,000 | |
| சிக்மா ரெக்னொலஜீஸ் | 10,000 | 10,000 | 10,000 |
| ரென்கோ ரினீவபெல் எனெர்ஜி கம்பனி (ப்ரைவட்) லிமிற்றட் | 30,000 | 30,000 | 30,000 |
| காமினி சேனாநாயக்க | - | 20,000 | |
| விதுல்கா கண்காட்சி | 9,256 | | |
| வாகனம் அகற்றல் கேள்வி விலைமனு | 156,000 | | |
| இங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 54,000 | | |
| | 47,058,212 | 51,290,814 | 7,162,826 |

| | 2012.12.31 | 2011.12.31 | 2010.12.31 |
|---|---|---|---|
| **குறிப்பு 13 : கருத்திட்டச் செலவுகளுக்கான மூலதன மானியம்** | | | |
| திறைசேரியிலிருந்து கிடைத்த மூலதன மானியம் | 61,000,000 | 135,610,000 | 135,500,000 |
| 295 (1) நி.பி.கு. கீழான மாற்றல் கொடுப்பனவுகள் | | 1,500,000 | 5,852,472 |
| கழிக்குக: | | | |
| அம்பாந்தோட்டை சூரிய சக்திப் பேட்டை | - | 89,727,504 | 46,693,991 |
| நிகழும் பணி | 10,867,523 | 15,523,945 | |
| நடைமுறை ஆண்டின் போது சுவீகரிக்கப்பட்ட மூலதனச் சொத்துக்கள் | 12,630,338 | 1,991,543 | 14,966,796 |
| | 37,502,139 | 29,867,008 | 79,691,685 |
| **குறிப்பு 14 : கழிக்கப்பட்டுப் பிற்போடப்பட்ட மானியம்** | | | |
| நடைமுறை ஆண்டிற்கான தேய்மானம் | 161,433,593 | 66,082,128 | 4,403,352 |
| முன்னைய ஆண்டிற்கான தேய்மானம் | | 40,313,572 | 20,378,649 |
| | 161,433,593 | 106,395,700 | 24,782,001 |
| **குறிப்பு 15 : ஏனைய வருமானம்** | | | |
| சக்தி அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 30,269,950 | 14,714,220 | |
| நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி | 5,782,567 | 5,128,721 | 6,976,570 |
| சார்க் சக்தி நிலையம் | 528,917 | 383,388 | |
| இடர் கடன் வட்டி | 294,114 | 310,964 | 308,985 |
| விஷேட முற்பண வட்டி | 2,293 | 1,481 | 1,301 |
| மின்னுற்பத்தியிலிருந்து வரும் வருமானம் - அம்பாந்தோட்டை | 37,278,565 | 16,577,905 | |
| மின்னுற்பத்தியிலிருந்து வரும் வருமானம் - இந்துரான | 80,270 | | |
| விதுல்கா கண்காட்சி (அனுசரணை) | 9,707,415 | 8,271,034 | 10,019,391 |
| சுவிட் ஆசிய நிகழ்ச்சித்திட்டம் | - | 467,753 | 1,040,100 |
| சக்தி முகாமையாளர்கள் சான்றிதழ் | 1,639,300 | | |
| ஏனைய வருமானம் | 269,692 | 82,679 | 349,952 |
| சக்தி நிதியத்திலிருந்து வரும் வருமானம் | 6,000,000 | | |
| ஒளியேற்றலுக்கான பிராந்திய நிலையம் | 6,995,311 | 54,992 | |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கல் | | 5,057,675 | |
| | 98,848,394 | 51,050,812 | 29,059,775 |
| **குறிப்பு 16 : கருத்திட்டச் செலவுகள்** | | | |
| **மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி** | | | |
| மிகை காற்று சக்தி சாத்தியத்திலிருந்து வரும் ஐதரசன் - போக்குவரத்துப் பிரயோகம் | | | |
| மின்சார சக்தியில் இயங்கக்கூடிய வாகனத் தொழில்நுட்ப அபிவிருத்தி | 680 | 13,513 | |
| சந்தைக் கழிவு செய்துகாண்பிப்புக் கருத்திட்டத்திலிருந்து வரும் உயிர் எரிவாயு உற்பத்தி | 5,738 | 2,000 | |
| உயிரியல் எரிபொருள் நியமங்கள் தயாரிப்பு | | | |
| வினைத்திறன் வாய்ந்த விறகு அடுப்புகள் பாவனை ஊக்குவிப்பு | 228,285 | | |
| இலங்கையிலுள்ள கட்டிடத்தொகுதிகளுக்குப் பொருத்தமான சிறியளவான ஒரு WECS ஐ அபிவிருத்தி செய்தல் | | 2,868,775 | |
| தரவுகள் சந்தைப்படுத்தலுக்கான பொருத்தமான ஒரு பொறிமுறைத் திட்டத்தை உருவாக்குதல் | | | |
| CDM ஆவணங்களைத் தயாரிப்பதில் தனியார் துறைக்கு உதவுதல் | | 12,518 | |

| | 31.12.2012. | 31.12.2011. |
|---|---|---|
| ஏற்கெனவேயிருக்கின்ற சகல வரலாற்று ரீதியான காற்று அளவீட்டு நிலையங்களையும் உள்ளடக்கி முழுமையான ஒரு காற்றுத் தரவுகள் | | 5,000 |
| மதிப்பிடப்பட்ட RE சாத்தியம் பேரில் அறிக்கையிடுதல் மற்றும் ஒவ்வொரு வள வகைக்குமான மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வள வரைபடங்களைத் தயாரித்தல் | 1,460,244 | 481,303 |
| அனுகூலமான RE ஊடுருவல் அளவை நிர்ணயித்தல் | | |
| சக்திப் பொறித்தொகுதிகளை ஊக்குவித்தல் மற்றும் 1 உயிரணுத்திணிவு சக்தி வலையத்தை அமைத்தல் | 1,165 | |
| இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் சம்பந்தப்பட்ட செய்மதி மாஸ்ட்டுக்களுடன் கூடிய 10 நீண்டகால காற்று/சூரிய சக்தி அளவீட்டு நிலையங்களையும் இலங்கையின் வட பகுதி அடங்கலாக மேலதிகமான 3 ஆரம்ப அலை சக்தி அளவீட்டு நிலையங்களையும் தாபித்தல் | | 332,840 |
| 10 நீண்டகால காற்று/சூரிய சக்தி அளவீட்டு நிலையங்களைத் தாபித்தல், இலங்கையின் வட பகுதி அடங்கலாக ஆரம்ப அலை சக்தி வள மதிப்பீட்டிற்கான 3 காற்று சக்தி அளவீட்டு நிலையங்களைத் தாபித்தல் | 414,647 | |
| தரப்பட்ட ஒரு வள ஸ்தலத்தின் சாத்தியத்தை முழுமையாகப் பயன்படுத்தும் வகையில் குறித்த ஒழுங்குவிதிகளுக்கு திருத்தங்களை | 15,755 | 3,440 |
| க்றிட் மின்சார முறைமைக்கு இணைக்கப்படக்கூடிய சூரிய சக்தி மின்னுற்பத்திற்கான ஒரு முழுமையான வசதியுடைய சக்திப் பேட்டையைத் தாபித்தல் | 7,102,263 | |
| க்றிட் மின்சார முறைமைக்கு இணைக்கப்படக்கூடிய 100 மெ.வொ. காற்று சக்திப் பண்ணைக்கான முழுமையான வசதியுடைய ஒரு சக்திப் பேட்டையைத் தாபித்தல் | 150,580 | 14,851 |
| ஜனாதிபதி சிறப்புச் செயலணியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு கருத்திட்ட அங்கீகார நடபடிமுறைக்காக ஏற்கெனவே உத்தேசிக்கப்பட்ட புதிய முறையியலை அங்கீகரித்தல் | 67,256 | |
| ஒரு தேசிய முன்னுரிமையாக NCRE கைத்தொழிலின் அபிவிருத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு ஏனைய பொருத்தமான நிறுவனங்களை ஊக்கப்படுத்துதல் | 933,034 | 2,000 |
| காணி விடயங்கள் சம்பந்தமான சேவைகளை வழங்கும் பொருட்டு SEA இனுள் ஒரு ஆரம்ப தொடர்பை ஏற்படுத்துதல் | 489,092 | |
| கருத்திட்ட அங்கீகாரம் சம்பந்தமான விடயங்களை நிர்ணயித்தல் | | 114,969 |
| மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி வளங்கள் ஒதுக்கீடு | 1,031,084 | 310,376 |
| பிணக்குகள் தீர்த்தல் | | |
| RE கருத்திட்டங்களின் சக்தித் துறை முதலீட்டு ஊக்குவிப்பு | | 720,127 |
| சக்தித் துறை முதலீட்டு ஊக்குவிப்பு (தனியார் துறை வசதி) | 186,623 | |
| GIS நாடுகளிலுள்ள நீர்வலு சக்தியின் முழுமையான பொருளாதார சாத்தியத்தை உணர்ந்து தொழிற்படுதல் | 8,925 | |
| ஓப்-க்றிட் பிரயோகங்களுக்கும் அத்தகைய பிரிவுகளுக்காகக் கிடைக்கக்கூடிய வளத் தெரிவுகள் என்பன தொடர்பான சாத்தியப் பிரிவுகளை இனங்கண்டறிதல் | | 6,670 |
| ஓப்-கிறிட் மின்சாரமாக்கல் தெரிவைப் பயன்படுத்தி 10 கிராமங்களுக்கு மின்சார வசதியை வழங்குதல் | 6,545,905 | |
| RE பிரிவை முடிவு செய்தல் மற்றும் பல்வேறுபட்ட RE நிலைமைகள் தொடர்பான நிதி சார்ந்த தாக்கங்களை ஆராய்தல் | | |
| தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் RE கருத்திட்டங்களின் நிறுவுகைக்குப் பிற்பட்ட கால முன்னேற்றக் கண்காணிப்பு மற்றும் தாக்க மதிப்பீடு | 7,990 | |
| இலங்கைச் சக்திச் சமநிலை | 1,554,677 | |
| | 20,203,943 | 4,888,382 |
| **சக்தி முகாமைத்துவம்** | | |
| அதிகளவில் சக்தியை நுகர்கின்ற நிறுவனங்களில் முறையான சக்தி முகாமைத்துவ அணுகுமுறைகளுக்கான நடவடிக்கைகள் | 1,554,199 | 92,378 |
| சக்தி முத்திரையிடல் நிகழ்ச்சித்திட்டம் | 207,661 | 98,648 |
| ஆய்வுகூட வசதிகளைத் தாபித்தல் (ஆ.அ.வ. உதவியினூடாக) | | |
| ந.அ.அ.ச. கட்டிட அங்கீகார நடபடிமுறைகள், குறிப்புக் கைந்நூல்கள் என்பவற்றில் குறியீட்டு முறையியலைக் கூட்டிணைத்து அந்தக் குறியீட்டு முறையியலை மீளாய்வு செய்தல் | 19,800 | 376,188 |
| மோட்டர் பரிசோதனை வசதிகளைத் தாபித்தல் | 250,700 | |
| துறை சார்ந்த விஷேட நிகழ்ச்சித்திட்டங்கள் | 57,965 | 117,500 |

| | 31.12.2012. | 31.12.2011. | |
|---|---|---|---|
| E2 நிலையத்தைத் தாபித்தல் | | 75,713 | |
| E2 வலயங்களைத் தாபித்தல் | | 242,626 | |
| வீதி விளக்குக் குறியீடு | | | |
| உபகரணக் களஞ்சியசாலை | 63,170 | 82,347 | |
| அரச துறை நிறுவனங்களில் சக்தி மதிப்பாய்வை மேற்கொள்ளல் | 31,514 | | |
| ESCO's களை வலுப்படுத்தல் | 671,904 | 10,080 | |
| சக்தி வினைத்திறன் மேம்பாட்டு வசதி | | | |
| கொள்கை வழிகாட்டிகளை அறிமுகப்படுத்தல் | | 833,329 | |
| ஒரு போக்குவரத்து சக்திக் கொள்கையை/எரிபொருள் சிக்கன | 57,510 | | |
| ஊடகங்களினூடான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | 5,325,141 | 2,462,150 | |
| விதுல்கா சக்தி வாரம் | 9,554,421 | 14,123,433 | |
| தேசத்திற்கு மகுடம் எனும் கண்காட்சி | 2,267,449 | 95,056 | |
| அச்சீடும் வெளியீடும் | 3,533,181 | 1,897,573 | |
| இலங்கைத் தேசிய சக்தி வினைத்திறன் விருது | 3,767,879 | 528,732 | |
| பாடசாலை மாணவர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் ஆகியோருக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 2,434,820 | 870,198 | |
| இணை-உற்பத்தியை அறிமுகப்படுத்துதல் | | 267,515 | |
| இணையத்தளப் பராமரிப்பு | 74,361 | | |
| நியமக் குறியீடுகள் தாபிப்பு | 482,000 | | |
| உபகரணங்கள் மீதான தரவுத் தளத் தாபிப்பு மற்றும் மூன்று உற்பத்தி அனல் சக்திக் களஞ்சியத்திற்கான ஆய்வு | 1,120 | | |
| E2 நிலையத்தைத் தாபித்தல் | 67,012 | | |
| E2 வலயத்தைத் தாபித்தல் | 889 | | |
| காற்று சக்தி உபகரணங்களின் பழுதுபார்ப்பும் பராமரிப்பும் | 124,856 | | |
| ஒளியேற்றலுக்கான பிராந்திய நிலையம் | 11,721,628 | 20,125,682 | |
| | 42,269,180 | 42,299,148 | |
| | 62,473,123 | 47,187,530 | 83,360,030 |
| **மீண்டெழும் செலவுகள்** | | | |
| **குறிப்பு 17 : சம்பளங்களும் கொடுப்பனவுகளும்** | | | |
| ஊழியர்களுக்கான சம்பளங்கள் | 33,474,859 | 25,683,097 | 21,673,786 |
| வாழ்க்கைப்படிக் கொடுப்பனவு | 5,986,013 | 5,320,787 | 4,441,267 |
| ஊழியயர்களுக்கான கொடுப்பனவுகள் | | 1,833,677 | 5,688,847 |
| ஊ.சே.நி.12% | 4,233,838 | 3,533,328 | 3,187,003 |
| ஊ.ந.நி. 3 % | 1,047,061 | 870,477 | 721,854 |
| மேலதிக நேர மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவு | 2,790,044 | 2,243,473 | 2,068,694 |
| பணிக்கொடை | 860,127 | 1,463,527 | 615,990 |
| நஷ்டஈட்டுக் கொடுப்பனவு | | | |
| | 48,391,942 | 40,948,366 | 38,422,078 |

| | 2012.12.31 | 2011.12.31 | |
|---|---|---|---|
| **குறிப்பு 18 : பிரயாணச் செலவும் வாழ்க்கைப்படியும்** | | | |
| உள்நாட்டுப் பிரயாணச் செலவு | 864,889 | 710,126 | 695,853 |
| வெளிநாட்டுப் பிரயாணச் செலவு | 551,955 | 1,257,047 | 1,095,174 |
| | 1,416,843 | 1,967,173 | 1,791,027 |
| **குறிப்பு 19 : விநியோகங்கள்** | | | |
| அச்சீடு, காகிதாதி மற்றும் அலுவலகத் தேவைப் பொருட்கள் | 2,247,951 | 1,954,678 | 1,383,319 |
| எரிபொருளும் உராய்வுநீக்கிகளும் | 4,279,789 | 3,785,964 | 1,965,269 |
| ஏனையவை - செய்திப்பத்திரிகைகளும் நானாவிதமான சேவையும் | 83,236 | 69,380 | 76,145 |
| | 6,610,976 | 5,810,022 | 3,424,733 |
| **குறிப்பு 20 : பராமரிப்புச் செலவு** | | | |
| வாகனங்கள் பராமரிப்பு, காப்புறுதி மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 5,027,580 | 3,197,983 | 3,704,665 |
| அலுவலக உபகரணங்கள் பராமரிப்பு | 328,828 | 884,906 | 283,286 |
| | 5,356,408 | 4,082,889 | 3,987,951 |
| **குறிப்பு 21 : ஒப்பந்த சார் சேவை** | | | |
| அலுவலக வாடகைகளும் வாடகைக் கட்டணங்களும் | 17,467,060 | 14,554,873 | 13,846,924 |
| தபால் மற்றும் தொலைத்தொடர்பு கட்டணங்கள் | 1,858,127 | 1,507,277 | 1,512,299 |
| போக்குவரத்து | 57,630 | | 135,589 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 350,000 | 350,000 | 350,000 |
| | 19,732,818 | 16,412,150 | 15,844,812 |
| **குறிப்பு 22: தேய்மானச் செலவுகள்** | | | |
| தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 1,406,196 | 1,934,645 | 1,767,878 |
| மோட்டார் வாகனங்கள் | 7,236,969 | 8,158,750 | 9,193,750 |
| புகைப்படப்பிரதியெடுக்கும் இயந்திரம் | 312,465 | 310,732 | 222,813 |
| கணனிகள் | 3,140,658 | 4,514,009 | 4,383,189 |
| மின்சாரப் பொருட்கள் | 683 | 2,738 | 2,738 |
| நூலகப் புத்தகங்கள் | 28,413 | 26,166 | 12,817 |
| சக்தி உபகரணங்கள் | 10,380,701 | 20,972,481 | 6,587,700 |
| காற்று சக்திக் கோபுரங்கள் மற்றும் உபகரணங்கள் | 5,446,151 | 3,519,262 | 2,597,116 |
| அம்பாந்தோட்டை சக்திப் பேட்டை | 133,466,606 | 66,942,916 | |
| கண்காட்சி உபகரணங்கள் | 14,272 | 14,000 | 14,000 |
| | 161,433,114 | 106,395,699 | 24,782,000 |
| **குறிப்பு 23 : ஏனைய மீண்டெழும் செலவுகள்** | | | |
| அலுவலக மற்றும் ஏனைய நானாவிதச் செலவுகள் | 3,036,643 | 616,866 | 740,646 |
| மொழிபெயர்ப்புக் கட்டணங்கள் | 65,406 | 17,855 | 59,183 |
| சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகள் | 718,000 | 472,000 | 146,000 |
| உபசாரக் கட்டணங்கள் | 339,630 | 224,146 | 191,414 |
| உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 482,558 | 434,817 | 457,810 |
| வங்கிக் கட்டணங்கள் | | | 42,228 |
| விதுல்கா மற்றும் பொது விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | | 6,377,403 | |
| | 4,642,237 | 8,143,087 | 1,637,281 |

**மறுபடியும் மீளெடுத்துரைக்கப்பட்ட 2012.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று**

| | 2010 (ரூ.) | 2009 (ரூ.) |
|---|---|---|
| **வருமானம்** | | |
| கருத்திட்டச் செலவுகளுக்கான மூலதன மானியம் | 79,691,685 | 62,902,359 |
| கழிக்கப்பட்டுப் பிற்போடப்பட்ட மானியம் | 21,258,113 | 7,374,841 |
| மீண்டெழும் மானியம் | 46,740,000 | 47,100,000 |
| ஏனைய வருமானம் | 29,059,774 | 10,914,038 |
| **மொத்த வருமானம்** | **176,749,572** | **128,291,238** |
| **செலவினம்** | | |
| கருத்திட்டச் செலவுகள் | (83,360,030) | (42,815,100) |
| சம்பளங்களும் கொடுப்பனவுகளும் | (38,422,077) | (31,608,871) |
| பிரயாணச் செலவும் வாழ்க்கைப் படியும் | (1,791,027) | (1,333,996) |
| விநியோகங்கள் | (3,424,733) | (6,533,876) |
| பராமரிப்புச் செலவுகள் | (3,987,951) | (4,009,507) |
| ஒப்பந்த சார் சேவை | (15,844,812) | (12,212,771) |
| தேய்மானம் சார்ந்த செலவுகள் | (40,894,921) | (21,149,073) |
| ஏனைய மீண்டெழும் செலவுகள் | (1,637,281) | (3,092,258) |
| **கருத்திட்டத்திற்கான செலவினம்** | **(189,362,832)** | **(122,755,452)** |
| முன்னைய ஆண்டிற்கான சீராக்கல்கள் | | |
| **மிகை/(துண்டுவிழுகை)** | **(12,613,260)** | **5,535,786** |

**மறுபடியும் மீளெடுத்துரைக்கப்பட்ட 2012.12.31 ஆம் திகதியிலுள்ள ஐந்தொகை**

| | 2010 (ரூ.) | 2009 (ரூ.) | 2008 (ரூ.) |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | 73,055,142 | 47,203,906 | 55,255,338 |
| நிகழும் பணி | 58,578,991 | 23,770,000 | 23,770,000 |
| முதலீடுகள் | 63,907,154 | 63,907,154 | 27,250,000 |
| திறைசேரி உண்டியல்கள் | | - | 31,019,470 |
| | 195,541,287 | 134,881,060 | 137,294,808 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| கிடைக்க வேண்டியவை | 2,760,635 | 4,359,058 | - |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 8,476,312 | 8,050,621 | - |
| காசும் காசு ஒப்புரவுகளும் | 34,104,235 | 16,386,215 | 7,322,641 |
| | 45,341,182 | 28,795,894 | 19,696,220 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **240,882,469** | **163,676,954** | **156,991,028** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 4,127,188 | 3,588,118 | 3,105,000 |
| | 4,127,188 | 3,588,118 | 3,105,000 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| ஏனைய கொடுமதிகள் | 7,162,826 | 13,689,283 | - |
| குறுங்கால நிதியேற்பாடுகள் | 438,518 | 355,000 | - |
| காணி சுவீகரித்தல் மீதான வைப்பு | 2,547,750 | - | - |
| | 10,149,094 | 14,044,283 | 35,646,489 |
| **தேறிய சொத்துக்கள்/ஒப்புரவு** | | | |
| திரண்ட நிதி | 76,268,522 | 83,316,299 | 79,792,412 |
| கூட்டுக:தேறிய மிகை/துண்டுவிழுகை | | - | (4,746,429) |
| பிற்போடப்பட்ட மானியம் | 128,431,867 | 45,392,468 | 43,193,556 |
| தேறிய மிகை | (7,508,558) | 788,111 | |
| இலங்கை நிலைபெறுதகு சக்தி நிதியம் | 29,414,356 | 16,547,675 | - |
| | 226,606,187 | 146,044,553 | 118,239,539 |
| **மொத்த ஒப்புரவும் பொறுப்புக்களும்** | **240,882,469** | **163,676,954** | **156,991,028** |

| | | |
|---|---|---|
| திரண்ட நிதி | 65,696,858 | |
| தேறிய மிகை | 3,063,106 | |
| பிற்போடப்பட்ட மானியம் | 128,431,867 | |
| இலங்கை நிலைபெறுதகு சக்தி நிதியம் | 29,414,356 | 226,606,187 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | |
| ஏனைய கொடுமதிகள் | 7,162,826 | |
| குறுங்கால நிதியேற்பாடு - கணக்காய்வுக் கட்டணம் | 438,518 | |
| காணி சுவீகரித்தல் மீதான வைப்பு | 2,547,750 | 10,149,094 |
| **மொத்த ஒப்பரவும் பொறுப்புக்களும்** | | 240,882,469 |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. ஈஎச்/ஐ/எஸ்எல்எஸ்சீஏ /எவ்ஏ/2012 | මබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2014 நவம்பர் 25

தலைவர்

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை

**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் (எஸ்எல்எஸ்சீஏ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 50(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு விரிவான அறிக்கை 2013 நவம்பர் 29 ஆந் திகதி அதிகாரசபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மஹாவலி அதிகாரசபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 50 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட காணி மற்றும் அம்பாந்தோட்டை சூரிய வெளிச்சப் பூங்கா செயற்திட்டத்திற்காக அதில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் விலைமதிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முழுமையாக சேதமடைந்திருந்த காத்தாடி கோபுரம் நிலையான சொத்துக்களிலிருந்து அகற்றப்படாதிருந்தமை காரணமாக, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ரூபா 2,377,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(இ) இலங்கை நிலைபேறான உத்தரவாத நிதியம் அதனுடன் தொடர்புடைய ரூபா 55,507,154 தொகையான முதலீடு நிதி நிலைமை கூற்றில் வேறுபடுத்திக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 பெறவேண்டியவைகளும் செலுத்த வேண்டியவைகளும்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள முறையே ரூபா 12,449,801 மற்றும் ரூபா 47,058,212 தொகையான பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் தொடர்பில் காலப் பகுப்பாய்வுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பெறவேண்டியவைகளுடன் தொடர்புடைய உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவுமில்லை. ஆகையால், இந்த மீதிகளின் சரியான தன்மையினையும் நம்பகத் தன்மையினையும் கணக்காய்வில் நிச்சயிக்க முடியாதிருந்தது.

### 2.2.3 கணக்கிணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள்

முன்னைய ஆண்டிற்கான ஐந்தொகையில் காண்பிக்கப்பட்ட இலங்கை நிலைபேறான சக்திவள நிதியத்தின் ஆரம் மீதிக்கும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் குறிப்பு -11 இல் காண்பிக்கப்பட்ட நேரொத்த தொகைக்குமிடையே ரூபா 14,714,220 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8(1) ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு பொதுக் கூட்டுத்தாபனமும் ஒவ்வோர் ஆண்டிற்கும் பாதீடொன்றை தயாரித்தல் வேண்டுமென்பதுடன் அது எந்த ஆண்டிற்குரியதோ அந்த நிதியாண்டு தொடங்குவதற்கு மூன்று மாதங்களிற்கு முன்னர் குறித்த நிறுவனத்தின் ஆளுகைச் சபையினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்குரிய அதிகாரசபையின் பாதீடு 2012 சனவரி 26 ஆந் திகதியன்றே பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 29,871,505 பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூபா 20,906,665 மிகையொன்றை விளைவித்திருந்தமையால், நிதி விளைவுகளில் ரூபா 50,778,170 முன்னேற்றத்தை காண்பித்தது. அம்பாந்தோட்டை சூரிய வெளிச்ச பூங்கா செயற்திட்டத்தின் சக்திவள விற்பனை வருமானம் ரூபா 20,700,660 ஆல் அதிகரித்திருந்தமையே இந்த முன்னேற்றதிற்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது.

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

#### 3.2.1 மூன்று மாதிரி மின்சார வாகனங்களை அபிவிருத்தி செய்தல்

எனது முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டவாறு, 2007 செப்தெம்பர் 28 ஆந் திகதியிலிருந்து 18 மாதங்களிற்குள் மூன்று மாதிரி மின்சார வாகனங்களை அபிவிருத்தி செய்வதற்காக உடன்பட்ட விலையில் ரூபா 7.888 மில்லியன் அல்லது 87.66 சதவீதம் 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட்டிருந்தது.

முறைப்படியான கால நீடிப்புச் செய்யப்படாது செயற்திட்டக் காலம் ஏறத்தாழ நான்கு ஆண்டுகள் தாமதமடைந்திருந்த போதிலும், கணக்காய்வு பரிசோதனைத் திகதியான 2013 மே 26 ஆந் திகதி வரை ஒரு வாகனத்தையேனும் பூரணப்படுத்துவதற்கு அபிவிருத்தியாளர் தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.2.2 பத்து காற்று அளவீட்டு கம்பங்களை வழங்கி, நிர்மாணித்து, பொருத்தி, வடிவமைத்தல்

எனது முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளிற்கு மேலதிகமாக இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 காற்று அளவீட்டுக் கம்பங்கள் மாத்திரம் 2013 பெப்ரவரி அளவில் தேவையான தரவுகளை செயற்திறனாக வழங்கியிருந்தன.

(ஆ) காற்று அளவீட்டுக் கம்பங்களின் தரவுச் சேகரித்தலின் பௌதீக செயலாற்றல் ஏறத்தாழ 51 சதவீதமாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. ஆகவே அதிகாரசபையின் காற்று அளவீட்டுக் கம்பங்களை தாபித்ததிலிருந்து அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட காற்று அளவீட்டுக் கம்பங்களை தாபிப்பதற்கான இடங்களை இனங்காணல், காற்றுத் அளவீட்டுத் தரவு சேகரித்தல் மற்றும் தரவுகளை அறிவித்தல் போன்ற குறிக்கோள்களை அடைந்துகொள்ள முடியாதிருந்தது.

(இ) நாட்டுக்குடாவில் அமைக்கப்பட்ட கோபுரம் வேண்டப்பட்ட நியமத்தில் காணப்படவில்லை. ஆகையால், அது 2012 ஏப்ரல் 27 ஆந் திகதி அகற்றப்பட்டு புதிய கோபுரமொன்று பொருத்தப்பட்டது. அகற்றப்பட்ட கோபுரத்தின் பாகங்கள் துருப்பிடித்திருந்ததுடன் 15 நெடுங்கம்பி வயர்களை பௌதீக மெய்மையாய்வுக்காக கணக்காய்வுக்குச் சமர்ப்பிப்பதற்கு அதிகாரசபை தவறியிருந்தது. மேலும், நாடுக்குடாவில் கோபுரத்தைப் பொருத்துவதற்காக செலவிடப்பட்ட ரூபா 2,377,000 கிரயம் பயனற்ற செலவினமாகியிருந்தது.

### 3.2.3 புதுப்பிக்கத்தக்க சக்திவள செயற்திட்டத்திற்காக காணிகளை கொள்வனவு செய்தல்

அமுலாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 11 செயற்திட்டங்களில் புதுப்பிக்கத்தக்க சக்திவளத்துடன் தொடர்புடைய 06 செயற்திட்டங்கள், காணிக் கொள்வனவு செயன்முறைப்படுத்தலின் அமுலாக்கம் அதிகாரசபையின் சார்பாக அரசாங்கத்தினால் கண்காணிக்கப்படாமை காரணமாக 2009 முதல் 2012 வரையான காலத்தில் கைவிடப்பட்டிருந்தன.

### 3.2.4 சுவிச் - ஆசிய நிகழ்ச்சித்திட்டம்

எனது முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டவாறு, சுவிச் ஆசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிடைத்திருந்த ரூபா 7,334,354 தொகையிலிருந்து ரூபா 3,135,202 தொகை 1994 யூன் 04 ஆந் திகதி 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2000 சனவரி 11 ஆந் திகதிய பீஎவ்/பீஈ/5 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் சகல உத்தியோகத்தர்களிற்கும் தொழில்சார் படி செலுத்தப்பட்டிருந்தது.

மின்வலு மற்றும் சக்திவள அமைச்சின் செயலாளர் அவரது 2012 திசெம்பர் 03 ஆந் திகதியிடப்பட்ட பீஈ/ஐஏ/22/வீஓஎல் ஆம் இலக்க கடிதத்தினால் இக் கொடுப்பனவை சகல ஊழியர்களிடமிருந்து அல்லது அதிகாரசபையின் தலைவரிடமிருந்து அறவிடுமாறு அதிகாரசபையின் தலைவரை அறிவுறுத்தியிருந்தார். இருப்பினும், இந்த அதிகாரமற்ற கொடுப்பனவை அறவிடுவதற்கான அர்த்தமுள்ள நடவடிக்கைகள் கணக்காய்வுப் பரிசோதனைத் திகதியான 2013 நவம்பர் 20 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.3 மனித வள முகாமைத்துவம் (எச்ஆர்எம்)

முறையான ஆளனி முகாமைத்துவம் அதிகாரசபையில் செயற்படுத்தப்படாதிருந்ததுடன் அதிகாரசபையின் தற்போதைய ஆட்சேர்ப்புத் திட்டம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

இலங்கை நிலைபேறான சக்திவள நிதியம் மற்றும் இலங்கை நிலைபேறான உத்தரவாத நிதியம் என்பவற்றின் முதலீட்டின் மீது 2008 முதல் 2012 வரையான காலத்தில் கிடைத்திருந்த ரூபா 36,208,817 வட்டி வருமானம் தொடர்புடைய நிதியங்களிற்கு அனுப்பி வைக்கப்படாது அதிகாரசபையினால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்கள் மற்றும் செலவினங்களுக்கிடையே குறிப்பிடத்தக்களவு வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதைக் குறிக்கின்றது.

## 4.2 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், வரைபு ஆண்டறிக்கையும் நிதிக்கூற்றுக்களும் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களிற்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 12 ஆந் திகதியன்றே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் அதிகாரசபை நிதிக்கூற்றுக்களை மீளப்பெற்று திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்களை 2014 யூன் 25 ஆந் திகதியன்று மீண்டும் சமர்ப்பித்திருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட எனது விரிவான கணக்காய்வு அறிக்கையின் மூலம் அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) பெறவேண்டியவை மற்றும் செலுத்த வேண்டியவை
(ஈ) கணக்கீடு
(உ) செயற்திட்டங்களை அமுல்படுத்தல்
(ஊ) மனித வளங்கள் முகாமைத்துவம்
(எ) கொடுப்பனவு நடைமுறை

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன
பதில் கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எனது இலக்கம்: SEA/AI/CH/14/02

2014ஆகஸ்ட்25

கணக்காய்வாளர் அதிபதி
கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம்
306/72
பொல்துவ வீதி
பத்தரமுல்ல.

**கனம் ஐயா,**

**<u>2012 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபையின் நிதிக் கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14 (2)(இ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி மூலம் அனுப்பப்படும் அறிக்கை</u>**

**குறிப்பு இலக்கம்: EH/I/SLSEA/FA/2012**

இது மேற்குறித்த அறிக்கை தொடர்பானதாகும். அந்த அறிக்கை தொடர்பான பதில்கள் இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றன.

பிரசாத்கல்ஹேன
தலைவர்
**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை**

**பிரதி:**

01. திரு ஆர்.எம். ரத்நாயக்க,உதவிகணக்காய்வாளர்அதிபதி கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம்
02. செயலாளர், சுற்றாடல்மற்றும்புதுப்பிக்கத்தக்கசக்திஅமைச்சு

## 1.1 நிதி அறிக்கைகள் மீதான கருத்துரைகள்

### 1.1.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) குறிப்பிட்ட காணியை சுவீகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இலங்கை நிலைபெறுதகு சக்திவள அதிகார சபை சுவிகரிப்பு செயன்முறைகளை ஆரம்பித்துள்ளதுடன் மகாவலி அதிகாரசபையிடமிருந்து காணி உறுதி எதிர்ப்பார்த்துள்ளது. காணி உறுதியின் செயற்பாடுகள் நிறைவடையும் மதிப்பீட்டை மேற்கொள்ள முடியாதுள்ளது. மதிப்பீட்டு செயன்முறைகள் நிறைவடையும் போது குறித்துரைக்கப்பட்ட காணி பதிவு இடாப்பில் சேர்க்கப்படும். குறித்த காணியின் சுவீகரிப்பு பற்றி நாங்கள் 2013 ஐந்தொகையில் அடிக்குறிப்பாக சுட்டிக்காட்டியுள்ளோம். அத்துடன் மதிப்பீடு நடத்தப்பட்ட பின்னர் கணக்குகளில் குறித்த தொகையை காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) நடைமுறை சொத்தானது பெறப்படவுள்ள வங்கி வட்டியையும் உள்ளடக்கியுள்ளது. எனினும் காசுப்பாய்ச்சல் கூற்றில் வட்டி வருமானம் மற்றும் முதலீட்டு வட்டி என வெவ்வேறாக காட்டப்பட்டுள்ளது. நடைமுறை சொத்தின் தேறிய குறைப்புக்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| நடைமுறை சொத்தின் மொத்த குறைப்புக்கள் | **19,251,156** | |
| வட்டி வருமானமாக பெறப்பட்டவை | | **5,782,567** |
| முதலீட்டி வருமான பெறப்பட்டவை | | **(4,863,516)** |
| நடைமுறை சொத்தின் தேசிய குறைப்புக்கள் | **20,170,207** | |

(இ) வரைவு நிதி கணக்குகளிலிருந்து பெறப்பட்டு கணக்காய்வு அறிக்கை காட்டப்பட்ட ரூ. **42, 140,932/-** வருமான கூற்றிற்கு மாற்றப்பட்டது. நிதி வருமான கூற்றில் ரூ.**37, 502,139/-** காட்டப்பட்டது. எனினும் இறுதி கணக்கில் மூலதன நன்கொடையிலிருந்து காசுப் பாய்ச்சலில் மிகை காணப்படவில்லை.

(ஈ) எமது பொது நாளேடுகளில் குறிப்பிடப்பட்டிருந்த காணி சொத்து மற்றும் இயந்திராதிகள் மற்றும் செயன்முறை வேலைக்கான பண முதலீட்டை நாங்கள் மீள்பரிசோதனை செய்தோம். பின்வரும் தொகைள் உள்ளடக்கபட்டதை அறியத்தருகின்றோம்.

| | |
|---|---|
| ஹம்பாந்தோட்டை சூரியகதிர் பூங்கா | **3,557,151** |
| இந்துரான மினிஹய்ட்ரோ கருத்திட்டம் | **7,310,372** |
| மொத்த பண முதலீடு | **10,867,523** |

(உ) கூறப்பட்ட விண்ணப்ப கட்டணம் ரூ. **110,000/-** திருத்தப்பட்டு பொது நாளேட்டில் நிலைப்பெறுத்தகு சக்திவள நிதியத்திற்கு மாற்றப்பட்டது (புத்தாக்க சக்தி வருமானம்) மற்றும் தற்போது நிதி கணக்குகளில் காட்டப்பட்ட தேறிய கூட்டுத்தொகையில் தாக்கம் ஏற்படுத்தப்படாது.

(ஊ) (அ) கணக்காய்வு அறிக்கை 13 (7) இன் 3.1 (1) அவதானிப்பில், பணிக்கொடைக்கான ஏற்பாடு ரூ. **535,033/-.** ஆனால் (இ) அறிக்கையில் 14 (2) அதே தொகை அதிகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எமது வரைவு கணக்குகளில் தவறுதலாக ரூ.**567, 202/-** கூடுதலாக பதிவு செய்யப்பட்டிருந்ததை நாங்கள் அவதானித்தோம். தற்போது கூடுதலாக கணக்கிடப்பட்டிருந்த தொகை திருத்தப்பட்டு இத்தவறு நீக்கப்பட்டுள்ளது.

(எ) இந்த நட்டம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் நி.பி 104 அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதோடு நி.பி 109 அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் சொத்து பதிவேட்டிலிருந்த நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஏ) நிலையான சொத்துக்கள் மற்றும் ஏனையவற்றை கொள்வனவு செய்வதற்காக நிதி கணக்குகளில் இருந்த தொகையானது பொது நாளேட்டிலிருந்து பெறப்பட்டோடு நிலையான சொத்து பதிவேட்டிலிருந்து பெறப்படவில்லை. இது நிலையான சொத்தின் மொத்த தொகையை உள்ளடக்கியுள்ளது.

(ஐ) ரூ. **Rs.377, 400/-** தளபாடங்களும் பொருத்துகைகளும் கணக்கிலிருந்து கணினி உதிரிப்பாகங்கள் கொள்வனவு கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நாளேட்டு பதிவின் மூலம் மிகையை திருத்துவதற்கு தேய்மான திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும்

(i) பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் நிலுவைகளின் வருட பகுப்பாய்வை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### 1.1.2 சட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் இணங்காதவை

நிதி ஆண்டு ஆரம்பிப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன் வரவு செலவு திட்டத்தை தயாரிப்பதற்கும் அங்கீகரிப்பதற்குமாக, திரைசேறியிடமிருந்து வரவு செலவு உயர்மட்டங்கள் எழுத்து மூலம் பெறப்பட்டன. எனினும், தற்போதைய முறை என்னவெனில், நவம்பர் இறுதியில் பாராளுமன்றத்தில் வரவு செலவு திட்டம் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவு திட்டம் அறிவிக்கப்படும். பொதுவாக வரவு செலவு திட்டம் வருடாந்தம் நவம்பரில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும். அதுவரை பணிப்பாளர் சபையால் அதிகார சபையின் வரவு செலவை அங்கீகரிக்க முடியாது. எனவே இந்த ஏற்பாடுகளுடன் இணங்க முடியாது.

## 2 நிதி மற்றும் தொழிற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி மீளாய்வு – நிதி பெறுபேறுகள்

கணக்காய்வாளர் தலைமையதியின் அவதானிப்பு உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 2.2 தொழிற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 மூன்று முன்னோடி மின்னியல் வாகனங்களின் விருத்தி

விருத்தியாளர் மேற்கூறப்பட்ட இலக்கினை பொறுப்பேற்று வாகன சட்டத்தை பொருத்தி ஒத்திகை ஓட்டம் 2013 நவம்பர் 25 ஆம் திகதி குறுகிய தூரத்திற்கு முன்னோட்டம் விடப்பட்டது. இச்சாதனைக்கான காணொலியை இதன் ஊடாக பார்க்கலாம். athttp://youtu.be/nrYFROJL25c <http://youtu.be/nrYFROJL25c>. தற்சமயம் விருத்தியாளர் வாகன சட்டத்துடன் உடற் பகுதியை பொருத்தும் பணியில் ஈடுபட்டுள்ளார். நிதிப் பற்றாக்குறை காரணமாக இப்பணிகள் தாமதமாக மேற்கொள்ளப்படுகின்றன. ஒப்பந்தம் மீறப்பட்டமை தொடர்பாக சட்டமா அதிபர் திணைகளத்தினால் சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு **(Ref. C/154/14/SLSEA)** சட்டமா அதிபருக்கு 2014 ஜுலை 30 ஆம் திகதி அறிவிக்கப்பட்டது. இந்த வருடத்தில் குறித்த கருத்திட்டத்தை நிறைவு செய்ய எதிர்ப்பார்க்கப்படுகிறது.

### 2.2.2 பத்து காற்று விசை பொறிகளின் விநியோகம், உருவாக்கம், பொருத்துதல் மற்றும் செயற்பாடு

(அ) அனைத்து காற்று கம்பங்களும் இணையவழி தரவு சேகரிப்பு வசதி கொண்டவையாகும். எனிவே அமைவிடத்தின் சமிக்ஞை வலிமையில் இந்த இணையவழி தரவு சேகரிப்பு தங்கியுள்ளது. அவசர நிலைமைகளின் போது பிரத்தியேகமாக தரவுகள் சேகரிப்படும். பரிசோதனையின் போது மூன்று காற்று அளவு கம்பங்கள் மாத்திரமே இணையவழி தரவு வசதி கொண்டதாக அமைக்கப்பட்டது.

(ஆ) காற்று அளவை கம்பங்களுக்கு காணிகளை வழங்கும் பொறுப்பு அதிகார சபைக்குரியதாகும். எனினும் அவ்வேளை பாதுகாப்பு காரணங்களால், வடக்கு கிழக்கில் அமைந்துள்ள காணிகள் ஒப்பந்தக்காரருக்கு அந்நேரத்தில் வழங்கப்படவில்லை. இதனால், பல கம்பங்கள் நீக்கப்பட்டது. எனினும், காற்று அளவை தரவு சேகரிப்பின் சராசரி 57% ஆகும். இது ஏற்றுக்கொள்ளப்பட்ட மட்டமாகும்.

(இ) நடுகுடா கம்பம் 2011/03/15 இல் நிர்மாணிக்கப்பட்டு 2012/04/27 வரை தரவு சேகரிக்கப்பட்டது. இதன் உயரம் 50 மீ ஆகும். ஆசிய அபிவிருத்தி வங்கயின் (ADB) கருத்திட்டத்தின் கீழ் 80 மீ உயரமான கம்பம் அதே இடத்தில் நிர்மாணிக்கப்பட்டது. இதனை கருத்திற்கொண்டு, காற்று கம்பத்தை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் ஏடீபீயின் கம்பத்தை அதிகார சபையிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. 15 தடை கம்பிகள் அதிகாரசபையின் களஞ்சியத்தில் உள்ளன. பிரத்தியேகமாக உறுதிபடுத்தும் வகையில் அதனை எந்நேரத்திலும் கையளிக்க முடியும்.

### 3.2.3. புதுப்பித்தக்க சக்தி கருத்திட்டத்திற்கான காணி சுவீகரிப்பு

இநிசஅ சட்டத்தின் 30 ஆம் பிரவின் படி, அதிகாரசபையின் எந்தவொரு தேவைக்கும் பொது தேவையை கருத்திற்கொண்டு சுவீகரிக்கப்படும் காணி (புதுப்பிக்கத்தக்க சக்தி அபிவிருத்தி உட்பட), காணி சுவீகரிப்பு சட்டத்தின் கீழ் சுவீகரிக்கப்படும். கடந்த கால அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்த செயன்முறைக்கு குறைந்தபட்சம் 72 வாரங்கள் தேவைப்படும் கண்டறியப்பட்டுள்ளது. பல நிறுவனங்கள் இத்துடன் தொடர்புபட்டுள்ளன. காணி, காணி அபிவிருத்தி அமைச்சு, சுற்றாடல், புதுப்பித்தக்க சக்தி அமைச்சு, சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்கள், நில அளவை திணைக்களம், அரசாங்க அச்சகத் திணைக்களம், மதிப்பீட்டு திணைக்களம், இழப்பீட்டு மீளாய்வு சபை, காணி பதிவு திணைக்களம், இலங்கை பொலிஸ் திணைக்களம், சட்டமுறை நீதிமன்றம், சட்டமா அதிபரின் திணைக்களம் மற்றும் பல நிறுவனங்களின் பங்களிப்பில் காணி சுவீகரிப்பு தங்கியுள்ளது.

பதினொரு கருத்திட்டங்களில் காணியை சுவீகரிப்பதற்கு பணம் வைப்பிலிடப்பட்டது, இவற்றில் விருத்தியாளர்களின் கோரிக்கைக்கு ஏற்ப மூன்று கருத்திட்டங்கள் நீக்கப்பட்டன. அத்துடன் அவர்கள் காணி உரிமையாளர்களிடமிருந்து காணிகளை கொள்வனவு செய்தனர். மேலும் மூன்று கருத்திட்டங்களுக்கு, எவ்வாறு காணி சுவீகரிக்கப்படுமென அதிகார சபை வினவியுள்ளதுடன் பதிலுக்காக காத்திருக்கின்றது. எஞ்சிய காணி சுவீகரிப்பு தற்போது செயற்படுத்தப்பட்டுவருகிறது.

### 3.2.4. <u>**Switch** – ஆசிய நிகழ்ச்சித்திட்டம்</u>

இந்த விடயம் தொடர்பாக செயலாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்குமாறு கணக்காய்வாளர் தலைமையதிபதி ஆலோசனை வழங்கினார். அத்துடன் சுமுகமான தீர்வை பெறுவதற்கு திரைசேறி மற்றும் செயலாளருடன் கலந்துரையாடப்பட்டது. இதனடிப்படையில், இது சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கீழ்வருமாறு.

எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் 2012.12.05 திகதியிடப்பட்ட கடிதத்தின் ஊடாக சக்தி, வலு அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது. 2013, ஜனவரி 24 திகதியிடப்பட்ட கடிதத்தின் ஊடாக திரைசேறியின் அங்கீகாரம் கோரப்பட்டதுடன், இக்கடிதம் சக்தி, வலு அமைச்சின் செயலாளர் ஊடாக திரைசேறியின் செயலாளருக்கு அனுப்பப்பட்டது. இதற்கிணங்க, இநிசஅ சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் வரம்பிற்கு கொண்டு வரப்பட்ட பின்னர், இக்கடிதம் அமைச்சின் செயலாளரின் ஆசோசனை பெறப்பட்டு திரைசேறிக்கு அனுப்பப்பட்டது, இதற்கேற்ப திரைசேறியின் காப்பீட்டு அங்கீகாரத்தை பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### 3.2.5. முகாமைத்துவ திறனின்மை

2008 தொடக்கம் இந்நடமுறை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. பிரயோக செயற்பாட்டுக்கான செலவுகள் வட்டி வருமானத்தை கொண்டு ஈடுசெய்யப்பட்டது. விருத்தியாளர் பிரயோக செயற்பாடுகளின் கட்டணம் சக்தி நிதியத்தில் வைப்பிலிடப்பட்டது

**2.3 மனித வள முகாமைத்துவம் மவமு**

முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் (முசேதி) பணியாள் தொகுதிக்கான அங்கீகாரம் பெறப்பட்ட உடனே ஆட்சேர்ப்பு படிமுறைகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**2.4 உள்ளக கணக்காய்வு**

உள்ளக கணக்காய்வாளர் நிறைவேற்று உத்தியோகத்தர் 2012.04.02 திகதி நிரந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். இதேவேளை முகாமைத்துவ உதவியாளர் ஒருவரும் மேலதிகமாக உள்ளக கணக்காய்வு பிரிவிற்கு தற்காலிக அடிப்படையில் சேர்க்கப்பட்டார். உள்ளக கணக்காய்வாளர் நிறைவேற்று உத்தியோகத்தர் சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்னர், ஐந்து கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்களும் நடத்தப்பட்டன, அத்துடன் கணக்காய்வாளர் தலைமையதிபதியினதும் அரசாங்க தொழில் முயற்சிகள் பற்றிய குழுவினதும் பல கணக்காய்வு விசாரணைகள் மற்றும் அவதானிப்புக்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

**2.5 வரவு செலவு கட்டுப்பாடு**

திரைசேறியிடமிருந்து குறித்த நேரத்திற்கு முற்பணம் கிடைக்காத காரணத்தினால் மதிப்பிடப்பட்ட வருமானம் பெறப்படவில்லை அத்துடன் தேவையான வளப்பற்றாக்குறை காரணமாக திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை மேற்கொள்ள முடியவில்லை. சக்தி அனுமதிக்கான ஏனைய அரசாங்க நிறுவனங்களின் அங்கீகாரம் பெறுவதில் ஏற்பட்ட தாமதமும் இதற்கு மற்றுமொரு காரணமாகும். கடந்த வருட செலவுகளுக்கான கொடுப்பனவுகள் இந்த வருடத்தில் தீர்க்கப்பட்டதால் மதிப்பிடப்பட்ட செலவுகள் அதிகரித்தன. விநியோஸ்த்தர்கள் விலைகளை உயர்த்தியமையாலும் செலவுகள் அதிகமாயின.

**3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வாளர் தலைமையதிபதியால் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் குறித்து அதிக கவனம் செலுத்துப்பட்டதுடன் இனங்காணப்பட்ட பகுதிகளில் பலவீன நிலைமைகளை சரி செய்து வழமைக்கு கொண்டுவர கவனம் செலுத்தப்பட்டது.